www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

தொ (கொ) லைபேசி...

வாய்திறந்தாற் சுடுவதற்கும் வழிகேட்டாற் கொல்லுதற்கும்
நாய்நிகர்த்துப் பதவிகட்காய் நக்குதற்கும் – 'தாய்நிலத்தை'
விலைபேசித் தின்பதற்கும் வெட்கமிலார் கொலைமிரட்டல்
தொலைபேசித் தாறாராம் தூ!

– ஈழமோகம்

இதழ் 53 ஓகஸ்ட் 11-24, 1994 விலை 7.00

## பொதுத்தேர்தல் '94:

# பேரினவாதத்தை நிலை நிறுத்த அங்கீகாரம்!

எதிர்வரும் 16ம் திகதி நாடளாவியரீதியில் நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சி அதிகாரம் ஆளும் ஐ.தே.கவுக்கா அல்லது ஸ்ரீ.ல.சு.க.தலைமையிலான பொ.ஐ.முவுக்கா என்பதை அறிவதற்கான மக்களின் அங்கீகாரம் கோரப்படவுள்ளது.

இரண்டு கட்சிகலும் இலங்கையில் நிலவும் பெளத்த சிங்கள பேரினவாத அதிகாரத்லதைத் தொடர்ந்து பேணுவதற்கான தலைமை தமக்குத்தான் வரவேண்டும் என்று போட்டி போட்டுக் கொண்டு தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன.

நாம் சென்ற இதழிலேயே சுட்டிக்காட்டியது போல ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்கள் மீதான போர்ப் பிரகடனம் என்றால், பொ.ஐ.முவின் விஞ்ஞாபனமோ இம்மக்களது முதுகில் குத்தியுள்ளது.

இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல மலையக, முஸ்லீம் மக்களுக்கும் எதிராக பெளத்த சிங்களப் பேரினவாதத்தை தூக்கிப் பிடிக்கும் நோக்கையே வெளிப்படுத்தியுள்ளன.

ஆக, இத்தேர்தலில் பேரினவாதிகளின் தலைமை எது என்பது மட்டுமே தீர்மானிக்கப்படப் போகிறது; சிறுபான்மையின மக்களுடைய உரிமைகளையிட்டு அக்கறைப்படுபவர்கள் யார் என்பதையல்ல.

எல்லா வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள், மலையக, முஸ்லீம் வாக்காளர்களும் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் இது!. (விஞ்ஞாபனங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் பக்கம் 8,9ல்)

## டீ.பியின் அறிவு!

மட்டக்களப்புக்கு அண்மையில் வருகை தந்த ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்ட பிரசாரக் கூட்டத்தில் இரண்டு விடயங்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

ஒன்று மட்டக்களப்பிலுள்ள படித்த வேலையில்லாமல் இருக்கும் இளைஞர், யுவதிகள் தொகை தனக்கு ஒரு பிரதேசசபைத் தலைவர் கூறித்தான் தெரியும் என்பது.

இரண்டாவது தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜனசக்தித்திட்டத்தை மட்டக்களப்பில் மீண்டும் அமுல்படுத்துவேன் என்பது.

ஒரு ஜனாதிபதிக்கு மட்டக்களப்பில் உள்ள இளைஞர் யுவதிகள் நிலை தெரியவில்லை என்றால் இவரை இப்பகுதி மக்கள் எவ்வாறு ஜனாதிபதி என்று ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஒருபுறமிருக்க இவர் ''மீண்டும்'' அமுல்படுத்தப் போவதாகக் கூறும் ஜனசக்தித்திட்டம் மட்டக்களப்பில் ஒருபோதும் அமுல்படுத்தப்படவில்லை என்பதை ஜனாதிபதி அறியமாட்டார்.

ஜனாதிபதியின் அறிவு புகழ் பெறது. முன்பொருமுறை ஐக்கிய அமெரிக்காவுக்கும் (United states) ஐக்கிய ராச்சியங்களுக்கும் (United Kingdom) வித்தியாசங்களை மறந்து போய் அமெரிக்கத் தூதுக் குழு ஒன்றிடம் 'ஃபோக்லண்ட்ஸ்' யுத்தத்தின் போது நாம் உங்களை ஆதரித்தோம். இப்போது புலிகளுக்கு எதிரான எமது யுத்தத்திற்கு நீங்கள் ஆதரவு தாருங்கள்'' என்று கேட்டுக் கொண்டவர் ஆயிற்றே.




## ஜனநாயக அழைப்பு அல்லது கொலை மிரட்டல்!

சரிநிகர் அலுவலகம்;
ஓகஸ்ட் 6 சனிக்கிழமை
நேரம் மாலை ஆறு மணியாகிக் கொண்டிருக்கிறது.
நாங்கள் அலுவலகத்திலிருந்து வெளியேறத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.
தொலைபேசி மணி ஒலிக்கிறது
யாராவது ஒரு செய்தியாளராக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் தொலைபேசியைக் கையில் எடுத்ததும் ''என்ன உங்கடை பேப்பரிலை தேவையில்லாத விசயங்கள் எழுதுறீங்கள்?'' என்று கேள்வியை எறிந்தது மறுமுனையிலிருந்த குரல்.

''ஹலோ யார் பேசுறீங்கள்? யாரோடை பேசவேணும்?''
''சேரனோடை பேசவேணும்'' தொம்மென்று விழுந்தது பதில்.
''அவரில்லையே .....''
''அப்ப சிவகுமார்...'' அதே தொனி.
''சிவகுமார்தான் பேசுறன் சொல்லுங்கோ''
''என்ன உங்கடை பேப்பரிலை தேவையில்லாத விசயங்கள் எல்லாம் எழுதிறீங்கள்?''
''நீங்கள் யார் பேசுகிறீர்கள? என்ன விடயம் என்று சொல்லுங்கோ''
''நான் கருணாகரம் தான் பேசுறன்''
''சரி சொல்லுங்கோ''
'உங்கடை கடைசி 2 பேபரிலையும் என்ன தேவையில்லாத விசயங்களைப் பற்றி எல்லாம் எழுதியிருக்கிறியள்?''
''நீங்கள் என்ன விசயத்தைப் பற்றி என்று சொன்னால்''
''எழுதின உங்களுக்குத் தெரியும்தானே என்ன தேவையில்லாத விசயம் எழுதினனீங்கள் என்டு''
''நாங்கள் தேவையான, அவசியமான விசயங்கள் என்டு நம்புறதை மட்டும்தான் எழுதிறனாங்கள். தேவையில்லாத விசயங்களை நாங்கள் எழுதுவதுமில்லை. பிரசுரிக்கிறதும் இல்லை. அப்படி ஏதாவது தேவையில்லாத விசயம் வந்திருக்கென்று நீங்கள் நினைச்சால் அது என்னெண்டு சொல்லுங்கோ?''
''இப்ப கையிலை பேப்பரில்லை இருந்துதெண்டால் சொல்லுவன்''
''அப்ப நீங்கள் பேப்பரை எடுத்து என்னென்ன விசயங்கள் எண்டு குறிச்சுப் போட்டுப் போன் பண்ணுங்கோ...''
''நான் பிறகு போன் பண்ணுறன்''

''ஒரு விசயம். உங்களிட்டை ஒரு இன்ரவியூ எடுக்க கொஞ்சக் காலத்துக்கு முதல் போன் பண்ணினனான். நீங்கள் கொழும்புக்கு வந்தவுடனே போன் பண்ணி இன்ரவியூ தாறன் என்டனீங்கள். ஆனால் பிறகு நீங்கள் தொடர்பு கொள்ளவேயில்லை. நான் நாலைஞ்சு தரம் உங்களுக்கு அடிச்சுப் பார்த்தன்.' இல்லை',' இல்லை' என்ற பதில்தான் வந்தது''

''ஓம், நான் இஞ்சை நிற்கிறது குறைவு''
''அப்ப அடுத்த பேப்பருக்கு ஒரு இன்ரவியூ தாறீங்களா?''
''இல்லையில்லை, இப்ப எனக்கு நேரமில்லை. எலெக்ஷன், கன்வசிங் எண்டு நிறைய... பிறகு பார்ப்பம்''
''சரி, அப்ப பேப்பரை எடுத்துக் குறிச்சுக் கொண்டு போன் பண்ணுங்கோ, சரிதானே''
மறுமுனையில் போன் வைக்கப்படும் ஒலி கேட்டது.

→ உ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கள்ளத்தோணிகள் வாழுமிடம்!

"1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போது ராஜீவ் காந்தியை இந்த நாட்டு சிங்கள மக்களுக்காக வேண்டி நான் தாக்கினேன். எமக்கு ஆட்சி கிடைத்தால் இந்நாட்டின் சிங்கள பௌத்தர்களது உரிமைகளைப் பாதுகாப்போம். பௌத்தமதத்தை தேசிய மதமாக்க வேண்டும், எனக் கூறுவது நாங்கள் மட்டுமே. வெளி நாட்டவர்களின் கையிலுள்ள அனைத்து தோட்டங்களையும் நாங்கள் சிங்களவர்களுக்குப் பிரித்துக் கொடுப்போம். தொழில் புரியும் அனைத்துப் பெண்களையும் வீட்டிலிருக்கக்கூறி அனைத்துத் தாய்மார்களுக்கும் கொடுப்பனவொன்றை வழங்குவதுடன் பெண்கள் செய்யும் அனைத்துத் தொழில்களையும் ஆண்களுக்கு பெற்றுக் கொடுப்பதனூடாக வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்போம்".




இவ்வாறு பேசுபவர் கடந்த தென் மாகாண சபைத் தேர்தலில் "சிங்கள மகாசம்மத்த பூமி புத்திர பக்ஷய" (சிங்கள மண்ணின் மைந்தர்கள் கட்சி) வின் சார்பில் போட்டியிட்ட ரோகண விஜேமுனி. இவர் தான் 1987 ஜூலை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போது இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டு வந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கிய நபர். இவரதும் இவர் சார்ந்த மேற்படி கட்சியினதும் பிரதான பிரச்சார அம்சமாக ராஜிவை தாக்கிய சம்பவமே இருந்தது; இருக்கிறது.

இம்முறை தேர்தலில் இக்கட்சி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏழு ஆசனங்களுக்காக 10 பேரை போட்டியிடச் செய்துள்ளது. ரோகண விஜேமுனி இம்முறை வேட்பாளர் பட்டியலில் இல்லாத போதும் அக்கட்சி சமர்ப்பித்த 29 பேர் கொண்ட தேசியப்பட்டியலில் 23வது நபராக உள்ளடக்கப்பட்டுள்ளார்.

இக்கட்சியின் அரைப்பக்க விளம்பரமொன்று ஒகஸ்ட் 4ம் திகதி லங்காதீப பத்திரிகையில் வெளிவந்திருந்தது. "இலங்கையின் வரைபடத்தைக் காட்டி அதில் நாட்டில் 2/3 பரப்பை ஆக்கிரமிக்கும் இனவாதிகளின் "ஈழம்" எல்லை என கீறப்பட்டும், மலையகத்தை குறித்துக் காட்டி "இதுதான் கள்ளத்தோணிகள் அதிகம் வாழும் இடம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, "இனவாத அடிப்படையில் வடகிழக்கு மாகாண எல்லையை மாற்றியமைத்து நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கங்கணம் கட்டுவோர் யுத்தத்தில் வெற்றியடைவதற்குப் பதிலாக வடகிழக்கை பிரித்துக் கொடுக்கத் துடிப்போர்; மெட்ராசிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் போய் புலித்தலைவர்களோடு ஒரே மெத்தையில் உண்டு, குடித்து, கும்மாளமிட்டோர்; சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் ஆறுலட்சம் (600,000) 'கள்ளத் தோணி'களுக்கு குடியுரிமை வழங்கி - மந்திரி பதவியும் வழங்கியோர்; அரசியலமைப்பு வரையும் போது பிக்குகளின் ஆலோசனையை உதாசீனம் செய்தோர் இவர்களுக்கா உங்கள் வாக்கை வழங்கப் போகிறீர்கள்?

"மண்ணைப் பாதுகாப்போம்", பௌத்த மதத்தை தேசிய மதமாக்கி தமிழர்களின் வாக்குரிமையை இல்லாமல் செய்வோம்" என இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் கூட்டங்களில் பிரச்சாரம் செய்கிற போது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களக் கிறிஸ்தவர்கள். முஸ்லீம்கள் ஆகியோருக்கும் வாக்குரிமை பறிக்கப்பட வேண்டும் என்று இக்கட்சியினர் சொல்கிறார்கள்.

- என்.எஸ்.குமரன்

## ஜனநாயக...

போனை வைத்து விட்டு திரும்ப ஆயத்தமாகுகையில் மீளவும் போன் ஒலித்தது. அருகிலிருந்த நண்பர் எடுத்தார்.

எனக்கா என்று கேட்பதாக அவரது முகத்தைப் பார்த்தேன். நண்பரின் முகம் சிவந்து கொண்டு வந்தது. படாரென்று போனை அடித்து வைத்தார்.

"என்ன பிரச்சனை, யாரப்பா எடுத்தது?"

"ஆரோ ஒரு பேமானிப் பயல் எடுத்து ஊர், பேர் ஒண்டும் சொல்லாமல் கண்ட மாதிரித் திட்டினான்"

"என்ன திட்டினான்"

"நக்க வழியில்லாமல் உதுக்குள்ள வந்து கிடந்து நக்கிக் கொண்டு என்ன எழுதிக் கொண்டிருக்கிறியள் என்டு ஏதேதோ எல்லாம் திட்டினான்"

எனக்குச் சிரிப்பு வந்தது.

"இதிலே என்ன ஆச்சரியமிருக்கிறது. உப்பிடி நெடுகத்தானே போன் வருகிறது" நான் சொல்லி முடிப்பதற்குள் திரும்பவும் போன் அடித்தது. இம்முறை நான் எடுத்தேன்.

"ஹலோ"

"ஹலோ"

"டேய் சிவகுமார் பு...... என்னடா பேப்பரிலை எழுதுறாய்? உன்னை என்ன செய்வம் தெரியுமோடா பு......" எழுதமுடியாதவாறு தூஷணத்தில் ஏசிக் கொண்டே போனது அதே குரல். ஆச்சரியம் என்னவென்றால், கருணாகரம் பேசும்போது ஒலித்த அதே பின்னணி ஒலிகள் அப்படியே கேட்டுக் கொண்டிருந்தன. அவன் என்னையும் தன் பாஷையில் பேச வைத்தான். பேசிவிட்டு தொடர்பை துண்டித்துக் கொண்டேன்.

இரண்டு நிமிடங்களுள் மீளவும் போன் ஒலித்தது. நடந்தவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எமதுசிங்கள நண்பர் இம்முறை தொலைபேசியை எடுத்தார்.

"கௌத கதாகறன்னே" என்று மிக அமைதியாகப் பேச ஆரம்பித்த அவர் மறுமுனையிலிருந்து கிடைத்த பதிலினால் ஆவேசமுற்று பொழிந்து தள்ளினார்.

மறுமுனையில் போனை வைத்துவிட்டு ஆள் ஓட்டம் பிடித்த பிறகு தான் அவர்.போனை வைத்தார் போலும்.

* * * *

திங்கள் மாலை அதே நேரம்.

எனக்கு போன் வந்திருப்பதாகச் சொன்னார் சிங்கள நண்பர். போனைக் கையிலெடுத்தேன். அதே பழைய குரல். "டேய் சிவகுமார், உன்ரை மூஞ்சியை எப்படியடா வைக்கிறது.. சொல்லடா பு.... என்ன செய்வம் தெரியுமோடா" என்று தூஷணை தொடர்ந்தது.

* * * *

பத்திரிகைத் துறைக்கு வந்ததன் பின்னர் இவ்வாறான மிரட்டல்கள் வருவது சகஜம். சரிநிகருக்கு இவ்வாறு பல தடவைகள் முகம் தெரியாதவர்களது மிரட்டல்கள் வந்துள்ளன. அரசு தரப்பிலிருந்தும்,அரசின் வாலில் தொங்கிக் கொண்டுள்ள, தம்மை இனங்காட்டிக் கொள்ளத் துணிவற்ற அரசியல் கோழைகளிடமிருந்தும் இத்தகைய மிரட்டல்களை அவ்வப்போது நாங்கள் எதிர் நோக்கியிருக்கிறோம். ஆனால், கருணாகரம் எம்.பியின் நண்பர்களிடமிருந்து நாம் இதை எதிர்பார்க்கவில்லை.

அல்லது இதனைவிட நீ்ம் இவர்களிடம் வேறெதையும் எதிர்பார்க்க முடியாதோ?

## "தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது!"

### செங்கொடிச் சங்க செயலாளர் ராமையா



**பொதுஜன ஐக்கிய முன்னணி தேசியரீதியில் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இயக்கமாகும். இதில் இடதுசாரி இயக்கங்களும், அவைகளோடு மலையகத்தைப் பிரதிபலிக்கும் செங்கொடிச் சங்கம் போன்ற இயக்கங்களும், வெகுஜன சக்திகளும் உள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணி தோன்றிய காலம் தொட்டு நாங்கள் இனப் பிரச்சினை பற்றியும் மலையக மக்கள் பிரச்சினைகள் பற்றியும் பொதுஜன ஐக்கிய முன்னணி சரியான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம். ஆகவே நாங்கள் முன்வைத்த கொள்கைத் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று கூறும் செங்கொடிச் சங்கப் பொதுச் செயலாளரும் நீண்ட கால தொழிற்சங்கவாதியுமான ஆ.இராமையா அவர்கள் சரிநிகருக்கு வழங்கிய பேட்டியைத் தருகிறோம். இராமையா அவர்கள் பொ.ஜ.ஐ.முன்னணியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.**

**மலையக மக்கள் தொடர்பாக பொ.ஜ.ஐ.முன்னணி முன்வைத்துள்ள நிலைப்பாடுகளை அவர்கள் பதவிக்கு வந்தால் நடைமுறையில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய உத்தரவாதம் உண்டா?**

மலையக மக்கள் தேர்தலில் பொ.ஜ.ஐ.முன்னணியை ஆதரிப்பதன் மூலமும், தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலமும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த நிலைப்பாடுகளை நடைமுறைப்படுத்த நல்ல சூழ்நிலை உருவாகும். மலையக மக்களின் சமூக வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் இந்த நிலைப்பாடுகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டியவை. சரியான கொள்கைகளைத் தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைத்துள்ளதால், அரச நிர்வாக இயந்திரத்தாலோ, பேரினவாத சக்திகளாலோ தடங்கல் ஏற்படும் போது, போராடிப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மலையக மக்களை தனித்துவமான தேசிய சிறுபான்மையினமாக அங்கீகரித்து அவர்கள் முகம் கொடுக்கும் பாகுபாடுகளை நீக்குவதாக பொ.ஜ.ஐ.முன்னணி உறுதிமொழி கொடுத்ததே ஒரு பாரிய முன்னேற்றமாகும். பொ.ஜ.ஐ.முன்னணி மலையக மக்கள் சம்பந்தமான கொள்கைத் திட்டங்களை நிறைவேற்றும் என நம்புகின்றோம். இன்றேல் தேர்தல் உறுதிமொழிகளை நிறைவேற்ற இயக்கம் வளரும்.

**பொ.ஜ.ஐ.மு பதவிக்கு வந்தால் தமிழ் மக்களினதும் தோட்டத் தொழிலாளர்களினதும் பிரச்சினைகள் அதிகரிக்குமெனக் கூறப்படுகிறதே?**

இது வழமையான ஐ.தே.க, இ.தொ.காவின் தேர்தல் குண்டாகும். பொ.ஜ.ஐ.முன்னணி ஒரு புதிய ஐக்கிய முன்னணியாகும். மேல்மாகாண சபையிலும், தென் மாகாண சபையிலும் பொ.ஜ.ஐ. முன்னணி ஆட்சி புரிகின்றது. அங்கு பொ.ஜ.ஐ.முன்னணி அரசினால் தமிழ் மக்களினதோ, தோட்டத் தொழிலாளர்களினதோ பிரச்சினைகள் அதிகரித்ததற்கான ஆதாரம் இல்லை. மாறாக கடந்த 17 ஆண்டு வரலாற்றைப் பார்த்தால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ் மக்களினதும், தோட்டத் தொழிலாளர்களதும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. 1977, 1981,1983,1986 இனக் கலவரங்கள், அகதிகள் முகாம்கள் இதற்குச் சாட்சி. 1956, 1960, 1970ம் ஆண்டுகளில் மக்கள் ஐக்கிய முன்னணி, முக்கூட்டு முன்னணி ஆட்சிக் காலங்களில் இப்படித் தாக்குதல்கள் நடைபெறவில்லை.

**மலையக மக்கள் முன்னணி முன்வைத்த கோரிக்கைகளை பொ.ஜ.ஐ.முன்னணி ஏற்றுக் கொள்ளாததைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் தங்கள் பிரச்சாரக் கூட்டங்களிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு முன்வைத்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாததாலேயே சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடுவதாகக் கூறுகின்றார்கள். இதற்கு ஆதாரம் இல்லை. இதில் உண்மையும் இல்லை. பொ.ஜ.ஐ.முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் சரிநிகரில் திரு. சந்திரசேகரன் குறிப்பிட்டதை விட கூடுதலாக மலையக மக்கள் பிரச்சினைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. பொ.ஜ.ஐ.முன்னணியில் இடதுசாரி இயக்கங்கள், செங்கொடிச் சங்கம் போன்ற மலையக இயக்கங்கள் இணைந்திருந்ததால் திரு. சந்திரசேகரன் பொதுஜன ஐக்கிய முன்னணியோடு தொடர்பு கொள்ளும் முன்பே நாங்கள் மலையக மக்கள் சார்பான பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

திரு.சந்திரசேகரன் சரிநிகரில் அளித்த பேட்டியில் இருக்கும் முன்னுக்குப் பின்னான முரண்பாடுகளை ஊன்றிக் கவனித்தால் அவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட கொள்கைகள் அடிப்படைக் காரணமில்லை எனத் தெரிகின்றது. அத்தோடு மலையக மக்கள் முன்னணித் தலைவரின் அரசியல் 17 ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சியில் 12 ஆண்டுகள் இ.தொ.காவில் அங்கம் வகித்து பின் புளொட்டில் இணைந்து பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு இணைந்து போட்டியிட்டது போன்ற கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகள் மலையக மக்கள் முன்னணித் தலைமை இறுக்கமான கொள்கைப் பிடிப்புக் கொண்டதல்ல என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி:-584380

# ஜனநாயக முகமூடிகளும் தேர்தல்கால திருவிழாக்களும்

சிஸிபஸ் என்பவனைப் பற்றிய கிரேக்கத் தொல்கதை ஒன்றிருக்கிறது. கடவுளின் கோபத்துக்கு ஆளாகிச் சபிக்கப்பட்ட சிஸிபஸுக்கு சாப விமோசனம் பெற வேண்டுமானால் ஒரு பெரிய பாறாங்கல்லை மலைமேல் உருட்டிச் சென்று அது விழாதவாறு நிறுத்தி வைத்து விட வேண்டுமெனக் கடவுளால் சொல்லப்பட்டது. சாப விமோசனம் வேண்டிய சிஸிபஸும் மிகுந்த சிரமத்துடனும் அளப்பரிய துன்பத்துடனும் பாறாங்கல்லை உருட்டிச் சென்று மலையுச்சியில் சேர்த்து விடுகிறான். எனினும் மறுகணமே அந்தப் பாறங்கல் மறுபுறமாக உருண்டு கீழே வந்து விடுகிறது. இப்படியாக ஒவ்வொருமுறை சிஸிபஸ் பாறாங்கல்லை உச்சிக்குக் கொண்டு செல்கிற போதும் பாறாங்கல் பழையபடி உருண்டு கீழே வந்து விடுகிறது. எனவே தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இந்தப் பாறாங்கல்லை மலையுச்சி நோக்கி உருட்டுவதே சிஸிபஸின் விதியாய்ப் போயிற்று.

தேர்தல்களைப் பொறுத்தவரையும் மக்களுடைய நிலை சிஸிபஸைப் போலக் கல்லுருட்டுவதுதான் என்பது ஜனநாயகம் தெரிவிக்கிற சங்கதி. கொலை, ஆள்கடத்தல், பயங்கரம், பீதி, யுத்தம் போன்ற சாத்தியமான எல்லா அனர்த்தங்களுக்கிடையிலும் தேர்தல்களை "வெற்றிகரமாக" நடாத்தி முடித்துக் கட்சிகளைப் பதவியிலேற்றி விட்ட மறுகணமே அவைகள் வார்த்தை தவறி, அதிகார மமதையோடும் ஆட்சிவெறியோடும் பழைய பயங்கரத்துக்கு உருண்டு வந்து விடுகிறார்கள்.

கடந்த பல்லாண்டுகளாக தேர்தல் பாரம்பரியம் இதுதான். இம்முறை மட்டும் வானத்திலிருந்து குதித்து வானவர்கள் வந்து இந்த நிலையை மாற்றி விடப் போவதில்லை. பழைய மருந்தைப் புதிய போத்தலில் அடைத்து வாக்குறுதிகள் என்று தலையைச் சுற்றி வீசி எறிகிறார்கள்.

நாம் உட்படப் பாவம் மக்கள்!
யதார்த்தத்தைப் பாருங்கள்:
9 லட்சம் மக்கள் அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள். வடக்கில் பயங்கரமான குண்டுமாரி பொழிகிறது. சென்றவாரமும் அச்சுவேலி, மல்லாகம் குண்டு வீச்சில் எட்டுப் பொதுமக்கள் இறந்துள்ளனர். இந்த லட்சணத்தில் 500 வாக்குப் பெட்டிகள் யாழ்ப்பாணம் போயிருக்கின்றன. கொழும்பில் இருந்து திருமலை வரை இந்த 500 வாக்குப் பெட்டிகளையும் ராணுவத்தினர் எடுத்துச் சென்று கடற்படையிடம் கையளிக்க, அங்கிருந்து கடற்படை பெட்டிகளைத் தீவுகளுக்குக் கொண்டு போயுள்ளது. பெட்டிகளுக்குள் ஏற்கனவே வாக்குகள் இருக்கின்றனவா என்பது பற்றிய அறுவைச் சிகிச்சையில் நாம் ஈடுபடவில்லை! இதுதான் நமது அற்புதமான சிவில் நிர்வாகம்.

வாழ்க.
ஐ.தே.கட்சிப் பயங்கரவாத அரசை ஆட்சியிருந்து நீக்குவதற்காக மக்கள் எக்கேடு கெட்டாலும் என்ன தேர்தல்களை நடத்தியே தீர்வது என்று விடாப்பிடியாக நிற்கும் மற்றைய எல்லாக் கட்சிகளும் வரலாற்றுக் குருடர்கள். ஒரு தற்காலிக வெற்றிக்காக லட்சக்கணக்கான மக்களின் அடிப்படையான அரசியல், குடியியல் உரிமைகளைக் காலால் மிதித்துத் துவம்சம் செய்யத் தயாராக இருக்கும் இந்தக் கட்சிகள் எவ்வகையான அடிப்படைத் தீர்வையும் தரப் போவதில்லை. வரலாறு இவர்களை விடுதலை செய்யாது.
தமிழ், முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை மறுபடியும் மேலெழுந்துள்ள இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்த "ஜனநாயக" அரசியல் தலைமைத்துவம் மேட்டுக் குடியினருக்கும், அப்புக்காத்துகளுக்கும் தான் உரியது என்ற அவர்களுடைய இறுமாப்பு மிக்க முடிவாகும். "படித்தவர்களை அனுப்புங்கள்", "பேசத் தெரிந்தவர்களை அனுப்புங்கள்" என்ற கோஷங்களில் அடிநாதமாக இருப்பது உயர்வர்க்க, உயர்சாதி மேலோங்கி ஆண்கள் மட்டுமே இந்த "ஜனநாயக" அரசியலில் ஏகபோகப் பிரதிநிதிகள் என்னும் ஜனநாயக எதிர்ப்பு உணர்வே ஆகும்.

ஜனநாயகம் என்பது ஐந்து வருடத்துக்கொரு முறை வாக்களிக்கும் உரிமை என்று மிகவும் மலினத்துவமாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதும் பிரசாரம் செய்யப்படுவதும் மக்களைக் கனவுலகப் பொய்களுக்குள் மூழ்கடிப்பதாகும். எனினும் இதுதான் நிகழ்ந்து வருகிறது.

மக்களுக்கு உண்மைகளைச் சொல்ல முடியாத அரசியல் கட்சிகளும், அரசியல் கட்சிகளையும் அரசையும் குறுக்கு விசாரணை செய்யத் திராணியற்ற பொதுசன தொடர்பு ஊடாகங்களும், பத்திரிகைகளும் மாற்றுக் கருத்துக்களைச் சகித்துக் கொள்ள முடியாத அரசியல் சூழலும் ஜனநாயகமே அல்ல. இந்த ஜனநாயகத்துக்குள் 'சுதந்திரமான, நீதியான தேர்தல்களை' நடத்துவது வெறுங் கற்பனையே. இந்த ஜனநாயகம் ஒரு பயங்கரமான முகமூடி.

இந்த முகமூடி கிழித்தெறியப்படாதவரையில் மக்கள் தேர்தல் திருவிழாக்களில் தம்மை மறக்க வேண்டியது தான். அந்த மறதியில் ஒவ்வொரு உரிமையாகக் காணாமல் போவதுதான் நிகழப் போகிறது!

மாபெரும் கட்சிகளான ஐ.தே.க., சி.ல.சு.க. இரண்டினதும் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள தூரத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கு முன்பாக அவை தத்தம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் என்ன சொல்லியிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் காற்றில் எறிந்த வார்த்தைகள் தான் எனினும் இவ்விரு கட்சிகளதும் விஞ்ஞாபனங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கே அன்றி யுத்த நிறுத்தத்திற்கோ உகந்த ஆக்கபூர்வமான திட்டவட்டமான எந்த அம்சமுமே இல்லை.

இந்த இரண்டு கட்சிக் காரர்களுக்குமே இவ்விசயங்கள் பற்றி உள்ளத்திலே உண்மையொளி இல்லாதபடியால் அவர்களுடைய வாக்கிலும் ஒளி இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. கட்சி மாற்றத்தாலும் ஆட்சி மாற்றத்தாலும் ஏதாவது விளையுமென்று யாராவது நம்பினால் அது அப்பழுக்கற்ற மடமை என்பதனை விட வேறொன்றும் சொல்வதற்கில்லை.

# இராசரத்தினத்துக்கு குமார் சவால் விடுகிறார்

தங்களின் ஜூலை 28 - ஓகஸ்ட் 10, 1994 இதழில் 15ம் பக்கத்தில் இராசரத்தினம் அவர்கள் தங்களுக்கு ஒரு பேட்டியளித்துள்ளார்.

இப்பேட்டியின் ஒரு இடத்தில் அவர் "நீலன் திருச்செல்வத்திற்கும் நான் பொதுஜன முன்னணியில் சேருவதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை." என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இது உண்மைக்கு முரணானது ஜூலை 10ம் திகதி மத்தியானம் நான் அவருடன் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்ட போது பின்வருமாறு சாரப்பட கூறினார்: நீலன் திருச்செல்வம், தன்னுடன் தொடர்பு கொண்டு பொதுஜன முன்னணியில் ஒரு தமிழரும் இல்லாத படியால் வற்புறுத்தித் தன்னை சேரச் சொல்லிக் கேட்டார் எனவும் தான் குமாரினுடைய குழுவில் சேருவதாக சொல்லியிருந்தார் எனவும் அவுஸ்ரேலியா போய் இருந்தபடியால் அப்பட்டியலில் இடம் பெற முடியமாற் போய் விட்டது என்றும் கூறினாராம். எப்படியென்றாலும் சேரத்தான் வேண்டுமென்று திருச்செல்வம் வற்புறுத்தி, பின் திருமதி குமாரணதுங்கவை இராசரத்தினத்துடன் கதைக்க வைத்து அவர் அப்பெண்மணியை சந்திக்கப் போனதாகவும், அச்சந்திப்பில் திருச்செல்வம் தான் திருமதி குமாரணதுங்கவின் உத்தியோகபூர்வ ஆலோசகர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது என்றும் அவர் எனக்குச் சொன்னார்.

இது தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் உத்தியோகபூர்வ முடிவு என்ன என்பது தெரியுமா? என நான் இராசரத்தினத்தைக் கேட்டேன். அவருக்குத் தெரியாமல் இருந்தது. நான் அவருக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி கொழும்பில் போட்டியிடும் சுயேட்சைக்குழுவை தமிழர்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு ஒரு அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடுத்ததாகக் கூறினேன். அது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்படியென்றால் திருச்செல்வம்

# சப்பைக் கட்டுக் கட்டத் தயார் ஆகிறீர்களா?

தங்கள் தந்தையாரினால் ஏற்பட்ட பா.உறுப்பினர் காலியிடத்திற்கு சு.கட்சியினர் அன்னாரின் மகனாகிய உங்களை நியமித்திருக்கலாமே. அன்று விரும்பாதவர்கள் அதைப்பற்றி எண்ணாதவர்கள் இன்று தேர்தலில் போட்டியிட மட்டும் தங்களைத் தேர்ந்தமை தமிழ மக்களின் வாக்குகளைத் தமது கட்சிக்கு ஈர்த்துக் கொள்ளும் முயற்சி என்பதை நீங்கள் உணரவில்லையா? தந்தையாரின் இடத்திற்கு - சிறுபான்மையினத்திற்கு அவ்விடத்தை கொடுப்பீர்களா? என ஐ.தே.கட்சினரின் சுட்டிக் காட்டுதலால் ஏற்பட்ட தடுமாற்றத்தை தடுப்பதற்காகவே- இன்னொரு சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவரை நியமித்தார்கள். இல்லாவிட்டால் அவ்விடம் இன்னொரு பெரும்பான்மையினருக்கே கிடைத்திருக்கும். இப்பொழுது தாங்கள் ஆறு மாதத்திற்குள் தமிழர் பிரச்சினை தீர்க்காவிட்டால் பதவி துறக்க அல்லது சுட்டுக் கொல்லப்பட சம்மதிக்கிறீர்களே? அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் தங்களால் பிரித்தெடுக்கப்பட்ட தமிழரின் வாக்குப் பலம் பெரும்பான்மை இனத்தவரின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிச



# சொந்தப் பலமேயன்றி பின்பலமல்ல

சரிநிகர் ஜூலை 14-27 இதழில் மட்டக்களப்பு தேர்தல் நிலவரம் எனும் தலைப்பில் சத்தியேந்திரா என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையில் எம்மைப் பற்றி உண்மைக்கு புறம்பாகவும், எம்மீது சேறுபூசும் நோக்குடனும் இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

கட்டுரையாளர் எம்மைப்பற்றி குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றையேனும் நிருபிக்க முடியுமா? ஈ.பி.டி.பிக்கும் எமக்கும் எந்த உறவுமில்லை. ஈ.பி.டி.பியுடன் நாம் இந்தியாவுக்கும் செல்லவில்லை. ஈ.பி.டி.பி இலங்கைக்கு வந்ததே புலிகளுக்கும் அரசுக்கும் இரண்டாவது சண்டை தொடங்கியதற்குப் பிறகே என்பதுதான் உண்மை.

நான் மாகாணசபை உறுப்பினராக இருந்தகாலத்தில் ஈ.பி.டி.பி வடகிழக்கின் எந்தப் பிரதேசத்திலும் செயற்படவுமில்லை, அப்படியிருக்கும் போது நாம் எப்படி அவர்களுடன் இந்தியாவுக்குச் சென்றது?

ஒரு பத்திரிகைக்கு ஜனநாயகப் பண்பும், நாகரிகத் தன்மையும் தான் மிகவும் அவசியம். சரிநிகரையும் நாம் அவ்வாறே உற்று நோக்குகிறோம். ஆனால் சரிநிகரோ பிழைநிகராக ஈ.பி.டி.பியினர் அவர்களின் தினமுரசு பத்திரிகையில் தங்களுக்கெதிராக தேர்தலில் நிற்பவர்களையும் அவர்களுடன் அரசியல் ரீதியாக முரண்பட்டவர்களையும் பழிவாங்கி எழுதிக் குவிப்பதைப் போல் உண்மைக்குப் புறம்பாக எழுதுவதில் எந்த அர்த்தமுமில்லை.

பழுகாமத்தில் இராணுவத்தினருடன் இணைந்து என்றும் மக்களுக்கெதிராக அடாவடித்தனங்களில் இறங்கியதில்லை. இவ்விடயம்

# முதுகு சொறிவதே விதியா?

சரிநிகர் இதழ் 52இல் திரு.தெல்லிப்பளை சின்னப்பா ராஜரட்ணம் அவர்களின் பேட்டியைப் படித்தேன்.

உங்கள் நிபந்தனைகளுக்கு சந்திரிகா உடன்பட்டு விட்டாரென்றால், இனப்பிரச்சினைக்கு என்ன அடிப்படையில் தீர்வு காணப்போகிறார்? என்பதனை மட்டும் முதலில் தமிழ் மக்களுக்கு தெளிவாக, திட்டவட்டமாக அறியத்தரல் வேண்டும்.

ஐக்கிய தேசியப் கட்சி யுத்தம்தான் தீர்வு எனக் கோடிட்டு பறைசாற்றி விட்டது. இருந்தும் அவர்களுக்கு இன்னும் முதுகு சொறிந்து கொண்டிருக்கும் தமிழ் இயக்கங்களும், கட்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. தெளிவான அரசியல் தீர்வின் அடிப்படையை கூடக் கூறாமல் தமிழ் மக்கள் என்ன வகையில் வாக்கைக் கொடுக்க முடியும்? இன்னும் புதியவர்கள் புதியவர்களுக்கு முதுகு சொறியும் நிலைதான் தொடரும்.

பிரேமதாஸா முதல் தொண்டமான், அமைச்சர் ஹமீத் கூட பிரபாகரனுடன் பேசுவதாகக் கூறிக் கொண்டே காலத்தைக் கடத்தினார்களே தவிர தீர்வைக் காணவில்லை. இவ்வளவு காலமும் ஏமாந்த, ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் சுயமாகச் சிந்திக்கும் காலம் வரவில்லை. தெளிவான தலைமையும் இல்லை.

தமிழர்கள் ஏலவே விட்ட தவறுகளை சீர்தூக்கி இயக்க, கட்சி முரண்பாடுகளைக் களைந்து ஒரே அணியில் திட்டமாக ஓர் வழியில் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தாலேயன்றி வேறு எந்த வால் பிடிக்கும் வேதாந்தத்தினாலும் தமிழர் மனித சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது.

சந்திரிகா பதவிக்கு வந்தால் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று உள்ளதா? சகல இன மக்களும் எம்முடன் ஒற்றுமையாக உள்ளனர். அவர்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளனர். இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றுதான்' என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதனை திரு.ராஜாரட்ணம் அவர்களுக்கு நான் முன்னேற்பாடாக தெரியப் படுத்த விரும்புகின்றேன்.

ஜெ.கௌரிதாஸன்
கொழும்பு-12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பா
ஷ
ம்



# தமிழ் முஸ்லீம் மக்களுக்கு ஒரு தேர்தல் – பொறி!

**எமது சகோதரப் பத்திரிகையான "யுக்திய"விலிருந்து நிஷாந்த எழுதுகிறார்**

கொழும்பில் மையங் கொண்டிருக்கும் இருபெரும் அரசியல் கட்சிகளான ஐ.தே.கவும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் நியாயமான சுதந்திரமான ஒரு தேர்தலை நடாத்துவதன் அவசியத்தைப் பற்றிப் பேசுகின்றன. பொதுவாகப் பேசும் போது தேர்தல் என்பது ஒரு நாட்டின் மக்கள் எல்லோருக்கும் தமது பிரதிநிதிகள் யார் எவர் என்பதைச் சுதந்திரமாகத் தெரிவு செய்ய வழங்கப்படும் ஒரு சந்தர்ப்பமாகும். எவ்வகையான பீதியோ, அச்சமூட்டலோ இன்றி இது இடம் பெற வேண்டும்.

அரசியல் யாப்பும் சட்டங்களும் கூறுகிறபடி தேர்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த விஷயத்தில் இறுக்கமும் உறுதியும் பேணப்படுவது அவசியமாகும்.

தேர்தல் துஷ்பிரயோகம் தொடர்பாக எழுந்த சில வழக்குகளில் இந்திய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள் இந்த அம்சங்களை உறுதி செய்கின்றன. இத்தகைய தொரு பின்னணியில் நோக்குமிடத்து, சுதந்திரமானதும், நியாயமானதுமான ஒரு தேர்தலை இலங்கையில் நடத்தவிழைவதாகச் சொல்லும் இருபெரும் கட்சிகளும் கனவு காண்கிறார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. வடக்கிலும், கிழக்கிலும் கணிசமான பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் ஆட்சியின் கீழேயே உள்ளன.

''ஏசியா வீக்'' சஞ்சிகையின் சமீபத்திய இதழ் ஒன்றுதரும் தகவலின் படி வடக்கில் 20%மான நிலப்பகுதியே இலங்கை இராணுவத்தின் வசம் உள்ளது. தேர்தல் தகவல் நிலையம் தருகிற தகவலின் படி இந்தப் பிரதேசங்களில் வாழ்கிற மக்கள் தொகை 28,000 ஆகும்.

இந்தத் தகவல்களை மட்டும் அடிப்படையாக வைத்துச் சிந்தித்துப் பார்க்கையில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தேர்தல்கள் நடாத்தப்பட்டால் அவை சுதந்திரமானதாகவோ, நியாயமானதாகவோ இருக்க முடியாது என்பது தெளிவாகிறது. இந்தப் பகுதிகளில் வாக்களிக்கத் தகுதியானவர்கள் எண்ணிக்கைக்கும் உண்மையிலேயே வாக்களிக்கப் போகிறவர்களின் எண்ணிக்கைக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி ஏற்படப் போகிறது.

வவுனியாவின் மொத்த வாக்காளர் தொகை 1,79,193 ஆக இருந்தாலும் 82,000 வாக்காளர்களே விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளனர். இவர்களையும் கணக்கிலெடுத்தால் மொத்தம் 100,000 வாக்காளர்களே எதிர்வரும் தேர்தல்களில் வடக்கில் வாக்களிக்கக் கூடியதாக இருக்கிறது. இவர்கள்தான் மொத்த வாக்காளர்கள் 5,96,413 (இந்தக் கணிப்பீடு கூட 1989ம் ஆண்டின் கணிப்பீடுதான்) பேரதும் எண்ணங்களைப் பிரதிபலிக்கப் போகிறார்கள் என்றால் அது மிகுந்த அநியாயமாகும்.

அங்குள்ள யதார்த்தத்தை வைத்துப் பார்க்கிற போது இந்த 100,000 வாக்காளர்கள் கூட நியாயமான, சுதந்திரமான முறையில் வாக்களிக்க முடியுமா என்பதும் சந்தேகமே. பெரும்பாலான வாக்காளர்கள் அகதி முகாம்களில் தான் சீவியம். வீடு, வாசல்களை இழந்த பல பேர் சொந்த இடங்களை விட்டு வேறுவேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டனர் அகதி முகாம்களில் வாழ்பவர்களில் பலருக்கு வாக்களிப்பதற்காகப் பதிவு செய்யும் வாய்ப்புக் கிட்டவில்லை.

எனவே இத்தகைய யுத்தப் பிரதேசங்களில் நியாயமான தேர்தல்கள் இடம் பெற முடியாது என்பது எனது முடிவு. ஜுலை 30 இலிருந்து ஓகஸ்ட் 1 வரை வவுனியாவுக்குச் சென்றிருந்த போது எனது கருத்து மேலும் உறுதிப்பட்டது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள செட்டிக்குளம் பிரதேசத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்துள்ள 30 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர் இம்முறை வாக்களிக்க முடியாத நிலையிலுள்ளனர். இவர்களைப் போல ஆயிரக்கணக்கானோர் உள்ளனர்.

சட்டரீதியாகப் பார்க்கும் போது கூட வடக்கில் தேர்தல்கள் நடைபெறுவதென்பது ஜனநாயக விரோத செயலாகும். இன்றைய சூழலில் வடக்கில் தேர்தல் நடாத்துவதென்பது குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் (ICCPR)25வது பிரிவுக்கு முரணாண செயலாகும்.(இந்த ஒப்பந்தத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது)

மனித உரிமைகள் பட்டயத்தையும் மீறுகின்ற ஒரு செயலே வடக்கில் தேர்தல்களை நடாத்துவது. யுத்தப் பிரதேசங்களின் நிலைமை தெரியாமல் கொழும்பிலிருந்து Remolt Controller மூலம் தேர்தல் நடத்துவது எவ்வகையிலும் ''சுதந்திரமான, நீதியான'' தேர்தல்களை உறுதிப்படுத்தாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இது பற்றி முதலில் உணர்ந்திருந்தது. வடக்கில் தேர்தல்கள் இடம்பெறுவது தொடர்பாக எதிர்ப்பு நடவடிக்கைகளை அவர்களே முதலில் ஆரம்பித்தனர். உயர்நீதிமன்றத்தில் அவர்கள் தொடுத்த வழக்கு நிராகரிக்கப்பட்டது. தேர்தல்களைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்குத் தேர்தல்கள் தொடர்பாக கதிர்காமர் சின்னத்துரை அவர்கள் மனித உரிமை மீறல்கள் என்ற வகையில் தொடுத்த வழக்கும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. இவர் சார்பாக வாதிட்ட சட்டத்தரணி டி.டபிள்யூ.அபயக்கோன் அவர்கள் யாழ்குடாநாட்டில் எவ்வகையான (இலங்கை) அரச நிர்வாகமுமே கிடையாது என்று குறிப்பிட்டிருந்தார். உண்மை நிலையும் அதுதான்.

எனினும் நமது இருபெரும் அரசியல் கட்சிகளும் யுத்தப் பிதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களின் அடிப்படை அரசியல், மனித, குடியியல் உரிமைகள் மீறப்படுவது குறித்து அக்கறைப்படவில்லை. யார் எக்கேடு கெட்டாலும் வடக்கில் தேர்தல்களை நடாத்தி முடித்து விடுவதே இரு கட்சியினரதும் குறியாகும்.

**உண்மையில் தெற்கில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தமிழ், முஸ்லீம் மக்களின் அரசியல், குடியியல் உரிமைகளைப் பேணுவதைவிட தமது பதவியையும், அதிகாரத்தையும் தங்க வைத்துக் கொள்வதிலேயே அக்கறை பிரதானமாக இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக தமிழ்,முஸ்லீம் மக்களுக்காக ஒரு காலத்தில் குரல் கொடுத்த இடதுசாரிக் கட்சிகளும் இன்று உயிர்ப்பற்றுப் போயுள்ளன.**

வடக்கில் தேர்தல்கள் நடைபெறக் கூடாது என்ற நிலைப்பாடு விடுதலைப் புலிகளின் நிலையைப் பலப்படுத்தி விடக்கூடும் என்று அவர்கள் கருதியிருக்கலாம். வடக்கில் தேர்தல் நடத்தப்படாமல் இருந்தால் அது உண்மையிலேயே விடுதலைப் புலிகளின் நிலையைப் பலப்படுத்தும் என்றாலும் கூட அடிப்படை அரசியல், குடியியல் உரிமைகள் பேணப்படுவது அதை விட முக்கியமானதாகும்.

வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படக் கூடாது என்று எழுந்து வரும் கோரிக்கைகளுக்கு நானும் முற்றாக ஆதரவு தெரிவிக்க விரும்புகின்றேன்.

வடக்கு கிழக்கில் நடாத்தப்படும் தேர்தலில் பங்குபற்றாமலோ அல்து வாக்களிக்காமலோ விடுவதன் மூலம் இத்தேர்தலை நிராகரிக்கின்ற தமது எதிர்ப்புணர்வை வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்கள் காட்டுவார்களானால் அது நியாயமானதென்றே நான் கருதுகின்றேன்.

பொய்மைக்கு துணைபோகாமல் இருக்கும் அவர்களது உரிமை கௌரவிக்கப்பட வேண்டியது. தவிரவும் ஆட்சிக்கு வந்த பிற்பாடு தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு ஒன்றுமே வழங்கப் போவதில்லை என்பது இதன் மூலம் தெளிவாகவே உள்ளது.

இன்றைய காலத்தின் தேவை பரந்துபட்ட ஒரு புதிய அரசியல் அமைப்பாகும். இலங்கை வாழ் மக்கள் எல்லோரதும் தார்மீக, யதார்த்த நிலைப்பாடுகளை உள்வாங்கி மலரும் ஒரு புதிய அரசியலே நமக்கு வேண்டியது.

**நிஷாந்த**

# தேர்தலைக் கண்காணிக்க பத்தாயிரம் தொண்டர்கள்

மனித உரிமைகள், அரசியலுரிமைகளுக்காகப் பாடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து சுதந்திரமான, நியாயமான தேர்தலுகான இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.(Movement for Free and Fair Elections - MFFE)மனித உரிமைகளுக்கான சர்வதேச சட்ட நிறுவனம் (International Human Rights Law Group)உட்பட வேறும்பல சர்வதேச அமைப்புக்களின் ஆதரவோடு இயங்க ஆரம்பித்துள்ள சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான இயக்கம் ஜுலை 29 அன்று காலை பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியது. இயக்கத்தின் சார்பில் சார்ள்ஸ் அபேசேகராவும், விமல் ஃபர்னாண்டோவும் குறிப்புரைகளை வழங்கினர்.

''கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்கள் அனைத்தும் ஊழல் நிறைந்ததாகவும், அதிகார துஷ்பிரயோகங்கள் நிறைந்ததாகவும் வன்முறைகள் மேலோங்கிய சூழலில் நடந்தவையாகவுமே உள்ளன. மக்கள் தங்களுடைய நியாயமான அபிலாஷைகளை, சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குரிய சூழல் நிலவவில்லை.



பத்திரிகையாளர் மாநாட்டில்

மக்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தங்களுடைய உரிமைகளையும், நியாயபூர்வமான கோரிக்கைகளையும் வென்றெடுக்க வேண்டுமானால் சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான இயக்கம் போன்ற சிவில் அமைப்புக்கள் தோன்ற வேண்டும்'' என்றுகுறிப்பிட்ட சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் மாவட்ட ரீதியாலும், கிராம ரீதியாலும் இம்முறை நடைபெற உள்ள தேர்தல்கள் 10,000 தொண்டர்களால் கண்காணிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளில் சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான இயக்கம் ஈடுபட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

யுத்தப் பிரதேசங்களில் தேர்தல் நடத்துவதற்கு சுதந்திரமான, நீதியான தேர்தலுக்கான இயக்கம் எதிரானது எனக் குறிப்பிடப்பட்டது. 22 தேர்தல் மாவட்டங்களில் 10 தேர்தல் மாவட்டங்களில் கண்காணிப்பு வேலைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய மாவட்டங்களில் தேர்தலுக்கு முன்னதாக ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிடும் எனவும் விமல் ஃபர்னாண்டோ தெரிவித்தார்.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களும் இலங்கை வர உள்ளனர் என்றும் உள்ளூர்க் கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சி ஒன்றை மனித உரிமைகளுக்கான சர்வதேச சட்ட நிறுவனமும் PAFREL என அழைக்கப்படும் People's Action for Free and Fair Parliamentary Elections நிறுவனமும் வழங்க உள்ளன.

வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் கண்காணிப்பாளர்கள் அனுப்பப்பட உள்ளனர். தேர்தல்கள் முடிந்ததும் தேர்தல்கள் தொடர்பான மிக விரிவான அறிக்கை ஒன்றை சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான இயக்கம் சர்வதேச அரங்கில் சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**– சுப்புக்குட்டி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமதி சரோஜினி யோகேஸ்வரன். முன்னாள் த.வி.கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் அவர்களின் பாரியார். இப்போது குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக்குழுவில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார். நேர்காணல் ஒன்றிற்காக அவருடன் சரிநிகர் தொடர்பு கொண்ட போது கேள்விகளை எழுத்தில் அனுப்புமாறும் தான் பதிலை எழுதி அனுப்புவதாகவும் ஆர்வத்துடன் கூறினார். சரிநிகரின் கேள்விகளுக்கு அவர் அனுப்பி வைத்த பதில்கள் இங்கு பிரசுரமாகின்றன.

# "தமிழ் மனங்களை ஏன் கசக்கிப் பிழிகிறீர்கள்?"

–கொழும்பு சுயேட்சைக்குழு வேட்பாளர் சரோஜினி யோகேஸ்வரன்



சரோஜினி யோகேஸ்வரன்

**நீங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணத்தைக் கூறுவீர்களா?**

வெற்றிவேல் யோகேஸ்வரன் அவர்களின் மனைவியாக வாழ்ந்தவள் தான் நான். எனக்கு வேண்டியதெல்லாம் எனது இனத்தின் விடுதலைதான். நாம் இருவரும் அரசியலில் அடைந்த சந்தோஷத்தைக் காட்டிலும் பட்ட துன்பங்கள் சொல்லிமாளாதவை. யாழ் கலவரத்தின் போது எமது வீடு தீக்கிரையாகியது. என் கணவரின் இலட்சியத்தை குறிக்கோளை தொடர்ந்தாற்றிட இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

**உங்கள் அரசியற் பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது? தற்செயலாகவா அல்லது...**

தற்செயலாக அரசியலில் பிரவேசித்தேன் என்று சொல்ல முடியாது. ஏனெனில் எனது கணவர் தீவிர அரசியலில் இறங்கிய நாள் தொட்டு அவருக்குப் பக்க பலமாக திரைமறைவில் செயலாற்றியுள்ளேன். நான் அரசியலில் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை நன்கறிந்தவள். ஏனெனில் அவரின் அரசியல் பாசறையிலே வளர்ந்தவள் என்றே கூறலாம். அந்தக் காலத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எனது காலஞ்சென்ற கணவரை சந்தித்தது எனக்கு நன்கு நினைவாக உள்ளது. ஒருமுறை ஒரு பத்திரிகையாளருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்த போது நான் அரசியல் விடயங்கள் நன்கு அறிந்தவள் என்று அவருக்குக் கூறியிருந்தார். நான் அரசியலில் ஈடுபடுவது தனக்கு விருப்பமில்லை என்பதை நிலைநிறுத்த, ஒரு குடும்பத்தில் ஒரு அரசியல்வாதி தான் என்ற தன் அபிப்பிராயத்தையும் எடுத்துக் கூறியிருந்தார். எனினும் நான் அரசியலுக்குப் புதிதானவள் அல்ல. நான் த.வி.கூட்டணியின் கொழும்புக் கிளை காரியதரிசியாகவும், நிர்வாகக் குழு அங்கத்தவராகவும் உள்ளேன். இவை யெல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது நான் அரசியலில் நன்கு பழக்கப்பட்டவள் என்றே கூற விரும்புகிறேன்.

**நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் மக்களது அரசியல் அனுபவத்தில் இந்தப் பாராளுமன்ற முறை தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்கும் என நம்புகிறீர்களா?**

இறுதிவரையும் சாத்வீக போராட்டத்தினாலேயே தமிழர் தம் சுயநிர்ணய உரிமையைப் பெறலாம் என்ற கருத்துக் கொண்டவள் நான். தமிழர் அரசியல் வரலாற்றினை பின்நோக்கிப் பார்த்தால் பாராளுமன்றம் தமிழர் உரிமைகளைப் பெற்றுத் தந்தது என்று கூறுவதற்கில்லை. எனினும் பாராளுமன்றம் ஒரு கருவியாக அமையும் என்பதை நாம் மறுக்க முடியாது. கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் முதல், இறுதியாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரை தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரவில்லை. சமஷ்டி ஆட்சி முறை மூலம் அதாவது ஒரு புதிய அரசியல் முறை மூலம் எமது இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம். ஆகையால் பாராளுமன்றத்தின் மூலம் தான் தமிழர் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கை உண்டு.

**உங்கள் சுயேட்சைக்குழுவில் வேட்பாளர் தெரிவில் யாழ்ப்பாணத்து உயர் சாதியினர் மட்டுமே உள்ளெடுக்கப்பட்டுள்ளதாக நிலவுகிற குற்றச்சாட்டை மறுப்பீர்களா? முஸ்லீம்களோ மலையகத்தைச் சேர்ந்த எவருமோ கூட உங்கள் பட்டியலில் இல்லையே?**

இந்தப் பட்டியலைத் தயாரித்த எமது குழுத்தலைவர் திரு.ஜி.ஜிபொன்னம்பலம் திறமைசாலிகளுக்கு முன்னுரிமை கொடுத்ததோடு இப் பட்டியலை குறுகிய கால எல்லைக்குள்ளும் தயாரிக்க வேண்டியிருந்தது. நாங்கள் திறமைசாலிகளை நாடிச் சென்றோமே தவிர சாதிப்பாகுபாட்டினை காட்ட அறவே யோசிக்கவில்லை. தமிழர் வாழ்வில் ஒரு சாரார் இந்த மாதிரி விடயங்களை உன்னிப்பாகக் கவனித்து எங்கள் ஒற்றுமையைச் சீர்குலைப்பதனால் தான் தமிழன் இன்னும் அடிமையாக வாழ்கின்றான். நீங்கள் இந்த நிலைப்பாட்டிலிருந்து எடை போடுவதே வெட்கங்கெட்ட விஷயமாகும். தமிழர் அரசியலில் சாதிபாகுபாட்டிற்கே இடமில்லை.

மற்றும் இந்திய வம்சாழியினரைப் போட முயற்சித்தோம். எவரும் முன்வரவில்லை. அது ஒரு கவலைக்குரிய விஷயம் தான். மற்றும் சாட்டுக்குப் போட விரும்பவில்லை. முஸ்லீம் சகோதரர்கள் அரசியலில் தனித்துவத்தை நிலைநாட்டப் பாடுபடும் அதே வேளையில் அவர்களை எமது பட்டியலில் சேரும்படி கேட்பது மடமைத்தனம். ஆகையால் தான் இவர்களும் பட்டியலில் இல்லை.

**உங்கள் கணவர் யோகேஸ்வரன் அவர்களது கொலைக்குக் காரணமானவர்களை யார் என்று சொல்வீர்களா?**

அது உலகம் அறிந்த விடயமாகப் போய்விட்டது.

**கொலை செய்தவர்களை தமிழ் மக்களது விடுதலைக்கு எதிரானவர்கள் என்று கூறலாமா?**

காலஞ்சென்ற எனது கணவர் அரசியலில் ஒரு தியாக புருஷர். இறுதி வரையும் தமிழன் தன் வாழ்விற்காக விடுதலைக்காக தனித்துவத்திற்காக ஒற்றுமைக்காக தன் உயிரைத் தியாகஞ் செய்தார். அவரைக் கொலை செய்த எந்த ஒரு தமிழ் மகனும் தமிழ் மக்களது விடுதலைக்கு எதிரானவர்கள் என்றுதான் கூற வேண்டும்.

**வடக்கு கிழக்கில் நடாத்தப்படுகிற தேர்தல் நியாயமற்றது என்கிற அபிப்பிராயம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

வடக்கில் தேர்தல் நியாமற்றது. ஏனெனில் யாழ் மாவட்டத்தின் மொத்த வாக்காளர் தொகை 6 இலட்சத்திற்கும் அதிகமாகும். ஆனால் இராணுவத்தால் மீட்டெடுக்கப்பட்ட பகுதியிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்திற்கும் குறைவாகவே உள்ளது. இந்த நிலையில் முழு யாழ் மாவட்டத்திற்குத் தேர்தல் நடைபெறுவதாக அறிவித்து ஆறாயிரம் வாக்காளர்களை 10 எம்பிக்களை தெரிவு செய்யும்படி கேட்பது. ஜனநாயகத்தை ஒரு கேலிக்கூத்தாக்குவதாகும். சரியான பிரதிநிதித்துவமும் யாழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. மேலும் இராணுவத்தால் மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் மிதவாத கட்சிகளின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இத்தகைய பாதுகாப்பற்ற சூழலில் எவ்வாறு ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்த முடியும்? அரசின் முடிவு தமிழர்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை மறுப்பதாகும்.

**இன்னமும் பாராண்ட தமிழன், மறத்தமிழன், தமிழன் தன்மானம் என்கிற வார்த்தை ஜாலங்களுக்குள் மக்கள் ஏமாந்துவிடுவார்கள் என்று நம்புகிறீர்களா?**

தமிழர்களின் அரசியல் வரலாறே ஒரு ஏமாற்றுப்படலமாக இருக்கும் போது தமிழன் தமிழனை எவ்வாறு ஏமாற்ற முடியும்? தமிழ்த் தேசிய இனம் என்றுமே விவேகத்துடனும் நிதானத்துடனும் அரசியல் விடயங்களை விழிப்புணர்ச்சியுடனும் கவனிக்கும் ஆற்றல்மிக்கது. இவ்வாறான நுணுக்கமான விஷயத்தை பூதக் கண்ணாடிக்குள் போட்டு தமிழ் மனங்களை ஏன் கசக்கிப் பிழிகிறீர்கள்.

**பாராண்ட தமிழன், மறத்தமிழன், தன்மானத் தமிழன் என்பவற்றில் வருகிற 'தமிழன்கள்' எல்லாம் ஒரு வகைப் பால் மறுப்பியல் என்று நீங்கள் கருதவில்லையா? வாக்காளர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்களாக உள்ள இன்றைய நிலையிலும்...**

பாராண்ட தமிழன்.மறத் தமிழன், தன்மானத் தமிழன் என்னும் சொற்றொடர்கள் யாவும் பொதுப்பாலை குறிப்பிடுவதோடு பாரதி கண்ட புதுமைப் பெண்ணினதும் பெருமையையும் உள்ளடக்கியுள்ளதாகவே நான் கருதுகின்றேன். தமிழன் வரலாற்றிலேயே கண்ணகி முதற்கொண்டு ஜான்சிராணி போன்ற தெய்வீகப் பெண்ணினத்தின் பெருமையை உள்ளடக்கிய, இருசாராருக்கும் பொதுவான மரபு இது என்றே கூறலாம். இத்தேர்தலையும் பெண்ணினம் தான் நிர்ணயிக்கப் போவது என்றால் மிகையாகாது. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்ற முதுமொழிக்கு இணங்க தமிழன் என்ற சொல்லில் தமிழிச்சியும் சேர்ந்துள்ளதால் பால்பாகுபாட்டிற்கு இடமே இல்லை.

**தமிழர் ஒற்றுமைபற்றி குறிப்பிடும் உங்களது சுயேட்சைக்குழு ஏன் மற்றைய தமிழ் அமைப்புகளுடன் ஐக்கியத்திற்கு வரமுடியவில்லை?**

எமது குழு ஒரு சாத்வீக அமைப்பு. குழுக்களாகப் பிரிந்து பல கட்சிகளாக உள்ள தமிழ் அமைப்புகளுடன் எவ்வாறு ஒற்றுமைப்பட முடியும்? அகிம்சை வழியில் செல்லும் நாம் மிதவாதக் கட்சிகளோடு ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளோம். தமிழினத்தின் மீது பற்றிருந்தால் சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கையிருந்தால் இயக்கங்களையும் கட்சிகளையும் கலைத்து விட்டு எம்முடன் வந்து இணையுங்கள் என்று தான் நான் கூறுவேன். பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒருபோதும் ஒட்டாது.

பஞ்சமன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "இனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஆர்வம் யாருக்கும் இல்லை!"

**-ஈ.பி.ஆர்.எல்.எப். வன்னி வேட்பாளர் குமாரசிங்க**

**வன்னியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) சார்பில் தேர்தலில் போட்டியிடும் எஸ்.கே.குமாரசிங்க அவர்கள் வவுனியா, மடுக்கந்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எண்பதுகளின் ஆரம்பத்தில் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) வவுனியாவில் இயங்கிய போது அதன் முக்கிய பங்காளியாக இருந்தார். பின்பு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பால் (PLOTE) ஈர்ப்புக் கொண்டு அதனோடு இணைந்து கொண்டார். PLOTE இல் அதிருப்தியுற்று வெளியேறிய பிற்பாடு 1985இல் அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு ஆறு வருடங்கள் சிறையிலிருந்தவர். சித்திரவதை செய்யப்பட்டதால் ஏற்பட்ட வடுக்கள் தனது உடலில் இன்னும் இருப்பதாகக் குறிப்பிடும் குமாரசிங்க அவர்கள் சரிநிகருக்கு வழங்கிய பேட்டி:**

**நீங்கள் தமிழ்க் கட்சியொன்றில் வேட்பாளராக இருக்க விரும்பிய காரணம் என்ன?**

ஈ.பி.ஆர்.எல்.எப் என்பது தமிழ்க் கட்சியொன்றல்ல. எங்கள் கட்சி தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கை மையமாகக் கொண்ட கட்சியாக இருக்கலாம்- ஆனால் அதனைத் தமிழ்க் கட்சியாக நான் பார்க்கவில்லை. இடதுசாரி அரசியலைக் கொண்ட எனக்கு இன, மத, மொழி பேதங்களைப் பற்றி கவலையில்லை. எனவேதான் ஈ.பி.ஆர்.எல்.எப் என்னைப் போட்டியிட அழைத்த போது விரும்பி ஏற்றுக் கொண்டேன்.

தேவையேற்பட்டால் போனஸ் ஆசனத்தின் மூலமோ தேசியப்பட்டியல் மூலமோ என்னை நியமிக்கத்தயார் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் கூறியிருக்கிறார்கள்.

**வடக்கு கிழக்குப் பிரச்சினையை நீங்கள் எவ்வாறு அணுகுகிறீர்கள்?**

ஜீ.ஜீ.பொன்னம்பலம், ராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் மட்டுமன்றி மைத்திரிபால சேனநாயக்க கே.பி.இரத்நாயக்க, போன்ற தலைவர்கள் கூட இலங்கையர் என்ற ரீதியில் சிந்தித்தார்கள், செயற்பட்டார்கள், ஆனால் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததன்பின் அவர்கள் இனவாதத்தை அரசியல் கருவியாக்கினர். வவுனியா பிரதேசத்தில் வாழும் சிங்களவர்கள் இதனால் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கும், தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலுக்கும் இலக்கானார்கள். இது மிகவும் துர்திர்ஷ்டமான ஒரு நிலைமையாகும்.

இப்பிரச்சினைக்கான தீர்வை எந்தவொரு அரசாங்கமும் தராமல் பலவகையான தந்திரங்களைக் கையாண்டு இனங்களுக்கிடையே இடைவெளியை உருவாக்கி வருகின்றனர். இன்றோ் தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகளின் பங்கர்களில் இருந்து கொண்டு போராடுகிறார்கள். சிங்கள இளைஞர்களோ இராணுவத்தில் சேர்ந்து போராடுகிறார்கள். இதன்மூலம் அவர்கள் இனவாத அரசாங்கத்தை பாதுகாப்பதற்காகத் தங்கள் உயிர்களை இழக்கிறார்கள்.



குமாரசிங்க

**சிங்களப் பிரதேசங்களில் ஈ.பி. ஆர்.எல்.எப்பிற்கு எத்தகைய ஆதரவு உள்ளது?**

முன்னர் சிங்களப் பிரதேசங்களில் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க. ஆகிய கட்சிகளே அரசியல் நடத்தின. ஆனால் வவுனியாவில் ராஜா குகனேஸ்வரன் எம்.பியாகிய பிற்பாடு, அவர் சிங்களப் பிரதேசங்களுக்கும் போய் அவர்களின் பிரச்சினைகளில் பங்கு கொண்டார். அவர் முதலாளித்துவ அரசியல்வாதிகளைப் போல் நடந்து கொள்ளாமல் சாதாரணமக்களில் ஒருவராகவே சென்றார். ஆனால் இதுவரை திருமதி ராஜமனோகரி புலேந்திரன் வாக்குக்காக தவிர வேறெதற்காகவும் சிங்களப் பிரதேசங்களுக்குப் போனதில்லை. குகனேஸ்வரன் சிங்கள பிரதேசங்களுக்குப் போகத் தொடங்கிய பிற்பாடு ராஜமனோகரி புலேந்திரனும் தலைகாட்டத் தொடங்கி விட்டார். இப்படித்தான் ஐ.தே.க சிங்களப் பிரதேசங்களில் அரசியல் செய்து வருகிறது. தெற்கில் ஐ.தே.க தமிழ் வாக்குகளை கொள்ளையடிப்பதைப் போல் தான் வடக்கு கிழக்கில் சிங்கள வாக்குகளும் ஐ.தே.கவால் கொள்ளையடிக்கப்படுகிறது.

**சிங்கள வாக்குகள் வவுனியாவில் எவ்வளவு இருக்கிறது?**

இப்போது 72,434 வாக்குகள் இருக்கின்றன. இவற்றுள் சிங்கள வாக்குகள் 6000-7000 தான் வரை இருக்கும்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு பின்தங்கிய பிரதேசங்கள் என்று தெரிந்தும் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்காமலேயே உள்ளது. அதற்காக இப்பிரதேசங்களில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு மாத்திரம் தான் பிரச்சினை இருக்கிறது எனத் தென்னிலங்கை சிங்களவர் நினைத்தால் அது தவறு. இங்கு பேருக்கே நாங்கள் சிங்களவர் குறைந்தபட்சம் சிங்களத்தில் கல்வியைத் தொடர்வதற்குக் கூட மிகுந்த சிரமமுள்ளது. ஆனால் கல்வி இராஜாங்க அமைச்சர் பிரதிநிதித்துவம் செய்வது வவுனியாவை! இதுதான் நிலை.

**கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடாத ஈ.பி.ஆர். எல்.எப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது வெற்றியீட்டலாம் எனும் நம்பிக்கை உள்ளதாலா?**

பாரம்பரியக் கட்சிகள் செயற்பட்டதைப் போல் ஈ.பி.ஆர்.எல்.எப் செயற்படப் போவதில்லை. மனிதத்தேவைகளை புரிந்து கொண்டு சகோதரத்துவத்துடன் பொதுப் புரிந்துணர்வுடன் செயற்படுவோம். எனவே எங்களுக்கு இனவாதமற்ற அரசியல் கண்ணோட்டமுண்டு. அவ்வரசியல் கண்ணோட்டத்தைப் புரிந்து கொண்ட பௌத்த பிக்குகள் உட்பட பலர் எங்களுடன் ஒத்துழைக்கின்றனர். இக்காரணங்களைக் கொண்டு வவுனியாவில் நாங்கள் வெல்ல முடியும் என நம்புகிறோம்.

**வவுனியாவில் பாதுகாப்பு படையினர் தவிர்ந்த ஏனைய ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

உண்மையில் இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்காமல் ஆயுதக்குழுக்களை வளர்த்து விட்டு அவர்களை ஆயுதபாணிகளாக்குகிறது அரசு. இவர்களின் தவறான நடவடிக்கைளுக்கு அரசாங்கத்தினது உதவியும் பெறப்படுகிறது. இதனால் வவுனியாவில் மட்டுமல்ல; முழு வடக்கு கிழக்கு மற்றும் தென் பகுதியிலும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

வருடக்கணக்காக மக்கள் அகதி முகாம்களில் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கத்துக்கோ தமிழ் கட்சிகளுக்கோ இதுபற்றி அக்கறை கிடையாது. எனவே யாருக்கும் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற ஆர்வமோ துடிப்போ இல்லை.

**● என். எஸ். குமரன் ●**

---



ஒலிவர் வேல்முருகன்

# "புலிகள் பயங்கரவாதிகளா இல்லையா என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்"

**-ந.ச.ச.கட்சி வன்னி வேட்பாளர் ஒலிவர்**

**நவசமசமாஜக் கட்சியின் வவுனியா வேட்பாளர் ஒலிவர் வேல்முருகன் சரிநிகருக்கு அளித்த பேட்டியின சாராம்சத்தைத் தருகிறோம்:**

வட கிழக்கில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை நாம் பகிஷ்கரிக்கக் கூறினோம். காரணம் யுத்தத்தின் மத்தியில் அளவிட முடியா அழிவுகளை சுமந்த வண்ணம் வாழும் சிதறடிக்கப்பட்ட மக்கள் வாக்களிக்க முடியாத நிலை காணப்பட்டது. எனினும் அத்தேர்தலை நடாத்தி புலிகளைத் துரத்தி விட்டோம் என்றும் நாட்டில் அமைதி, சமாதானம் நிலவுகின்றது எனவும் காட்டுவதற்காகவே அரசாங்கம் முயன்றது. ஆனால் அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ் குழுக்கள் மண்ணையும் மக்களையும் காக்கிறோம் என்று கூறிக் கொண்டு அற்பசலுகைகளுக்காக நாளாந்தம் ஒவ்வொரு அங்குலமாக நிலத்தைப் பிடுங்கிக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

மறுபுறம் தனிநாடு அமைப்பதற்கு ஆணை தாருங்கள் என்று கேட்டு, 18 எம்பிக்களை தமிழினத்தின் 18 தூண்களாகக் கருதி பாராளுமன்றம் அனுப்பினோம். அவர்கள் எதனைச் சாதித்தார்கள்? பாராளுமன்றத்தில் எதனையும் சாதிக்க முடியாது என்பதனாற் தானே அதனை விட்டு வெளியேறிச் சென்றார்கள். இவ்வெளியேற்றத்தின் தொடர்ச்சியே ஆயுதப் போராட்ட வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தியது ஆயின் போனவர்கள் இப்போ மீண்டு வந்து தேர்தலில் ஏன் குதித்துள்ளார்கள்?

இப்படிப்பட்டவர்களும் அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவளித்து பாராளுமன்றில் கையுயர்த்தி மகிழ்ந்தவர்களும் "நான் திறம்; நீ திறம்" என்று வாக்குக் கேட்கிறார்கள். இவர்கள் எவரிடமாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு உண்டா? புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறி ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து புலிகளை அழிக்க அரசாங்கம் முனைகின்றது. இதனை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்.

ஏனெனில் புலிகள் பயங்கரவாதிகளா அல்லவா என்பதனையும் அவர்களை அழிக்க வேண்டுமா என்பது தொடர்பாகவும் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டியவர்கள் மாறாக சிங்கள இராணுவத்தினருக்கோ அன்றி அவர்களின் கைக்கூலிகளுக்கோ இதனைத் தீர்மானிக்கும் அதிகாரம் இல்லை.

எனவேதான் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் யுத்தத்தினை எதிர்த்தும், திறந்த பொருளாதாரக் கொள்கையின் அவலங்களை அம்பலப்படுத்தவும் தேர்தல் என்றவுடன் குடை, கொடி, ஆலவட்டங்களுடன் திடீரெனத் தோன்றிப் பொய் வாக்குகளின் மூலம் மீண்டும் அரசியல் துரோகம் செய்யப்புறப்பட்டிருக்கும் தமிழ் ஆயுதக்குழுக்கள், அரசியல் குழுக்களை அம்பலப்படுத்தவுமே இத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றோம்.

கடந்த தென் மாகாண சபைத் தேர்தலில் கூட காலி மாவட்டத்தில் போட்டியிட்டேன். ராஜிவிற்கு அடித்து புகழ் பெற்றவரோடு போட்டியிட்டு 14 வாக்குகள் அதிகமாகப் பெற்றேன். ஆயினும் அங்கு வெற்றி பெறுவது அல்ல எனது நோக்கம் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் படி சொல்வதற்கு கிடைத்த வாய்ப்பே பிரதானமானது. அந்த வகையில் இனவாதத்திற்கு எதிரான கருத்தை வைத்து தென்பகுதியில் 1214 வாக்குகளைப் பெற்ற தென்றவகையில் எமக்கு வெற்றியே.

அதேபோன்றுதான் இத்தேர்தலையும் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதற்கான மேடையாகவே நாம் பயன்படுத்துகிறோம். இம்மாவட்டத்திலும் யாழ்ப்பாணத்திலும் நடக்கும் முறைகேடான தேர்தலுக்கு எதிராக கிடைக்கும் வாக்குகளை நிராகரிக்கும் வாக்குகளாகவே கருதுகின்றோம்.

**● பரன் ●**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் மக்களாவது அரசியல் உரிமையாவது மண்ணாங்கட்டியாவது!

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லீம் மக்களது தலையில் கட்டப்பட்டுள்ள இன்னுமொரு பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 16ம் திகதி நடைபெறப் போகிறது. அரசாங்கத்தால் யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில், யுத்தத்துக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களிடம் உள்ள வாக்குரிமையின் பேரால் பாராளுமன்றத்துக்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

எமது யுத்தபணி தொடரப் போகிறது; உங்களுக்குகெதிரான யுத்ததை நாம் நடத்தத்தான் போகிறோம்; ஆனாலும் நாம் நடாத்தும் தேர்தல்கள் ஒவ்வொன்றிலும் நீங்கள் தவறாமல் வாக்களித்து இந்த நாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றது




என்பதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த தேர்தலின் மூலம் அரசாங்கம் விடுத்துள்ள செய்தி.

சிறுபான்மை இனங்களை பெரும்பான்மை இனமான விருட்சத்தின் தயவில் வாழ வேண்டிய கொடிகள் என்று வர்ணிக்கத் தயங்காத ஒரு அரசுத் தலைவரின் அரசாங்கம் இப்படி ஒரு தேர்தலை நடாத்தத் துணிந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை தான்.

ஆனால், எந்த மக்கள் மீது இந்த அரசு வெறியோடு யுத்தத்தை நடாத்தி வருகிறதோ, எந்த மக்களது உடமைகளை அழித்து துவம்சம் செய்தும், அவர்களையும் அவர்களது குழந்தைகளையும் பட்டினி போட்டுச் சாகடித்தும் வருகிறதோ அந்த மக்களை தமக்கு வாக்குப் போட்டு, அவர்களது பிரதிநிதிகளாகத் தம்மைத் தெரிவு செய்துவிடும்படி ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொண்டு போட்டியில் குதித்துள்ள தமிழ், முஸ்லீம் வேட்பாளர்களின் நடவடிக்கைகள் வெறும் ஆச்சரியத்தை மட்டுமல்ல ஒருவருக்கு அதிர்ச்சியையும் கூட ஏற்படுத்தக் கூடியன

முஸ்லீம் மக்களது பிரதிநிதிகளாக வரத்துடிக்கும் அரசியல் வாதிகளாவது, முஸ்லீம் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் அல்லது அரசின் யுத்தத்தாலோ, புலிகளால் விரட்டியடிக்கப்பட்டதாலோ இடம் பெயர்ந்து வாழ்கின்ற பிரதேசங்கள் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானவை என்ற வாதத்தை முன்வைக்கலாம். ஆனால் தமிழ் மக்களது பிரதிநிதிகளாக வரத் துடிப்பவர்களோ?

இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்ற தேர்தல்களின் மூலமாக தாம் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, இலங்கைப் பாராளுமன்றத்தினுள் நுழைவதன் மூலமாக யுத்தத்தால் துடித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தரமுடியும்; அவர்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி விட முடியும் என்று நம்பிக்கையைக் கொண்டிருப்பது பற்றி யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை; அல்லது அந்த நம்பிக்கையால் தான் தாம் இந்த அரசியலில் ஈடுபடுகிறோம் என்று கூறிக் கொள்வதிலும் கூட யாரும் குறை கண்டு கொள்ள வேண்டியதில்லை.

ஆனால் எந்தத் தேர்தல் நடைமுறையை அவர்கள் ஜனநாயகம் என்று பீற்றீக் கொள்கிறார்களோ எந்தத் தேர்தல் மூலமாக அவர்கள் தமிழ் மக்களது அரசியல் உரிமைகளை காக்கப் போவதாகக் கூறுகிறார்களோ அந்தத் தேர்தல் நடாத்தப்படுகின்ற சூழலை, அது நடாத்தப்படும் தன்மையைப் பற்றிக்கூட அவர்கள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை மாறாக, தமது ஆசனங்களில் -பாராளுமன்ற கதிரையில் -போய் குந்திவிட வேண்டுமென்கின்ற வெறியினால் உந்தப் பட்டவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றார்கள். இந்தப் பதவி வெறியானது அவர்களுக்கு நடாத்தப்படும் தேர்தலின் பின்னணி நோக்கம் பற்றிய அக்கறையைக் கூட இல்லாமல் செய்து விட்டது.

ஐ.தே.க அரசுக்கு மாற்றாக ஆட்சியமைக்கும் நோக்குடன் தேர்தலில் குதித்துள்ள சி.ல.சு.க.தலைமையிலான பொ.ஐ.மு.இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளதனால், இத்தகைய தீர்வு முயற்சியில் தமிழ் மக்களின் சார்பில் பேசி அந்த சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்த தமிழ் மக்களுக்கு சிறந்த தலைமைத்துவம் தேவை என்பதும், அதற்கான தகுதி தமக்கே உள்ளது என்பதும் தான் தேர்தலில் போட்டியிடும் த.வி.கூ, தனது தேர்தல் பங்குபற்றலுக்கு கண்டுபிடித்துள்ள நியாயம்.

இதேவேலையை இதைவிடச் சிறப்பாகச் செய்யமுடியும் தமக்கு என்று கூறுகிறது ஈ.பி.ஆர்.எல்.எப். சந்திரிகாவுக்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதில் உள்ள அக்கறை பொ.ஐ.முவிலுள்ள இடதுசாரிக் கட்சிகளது சிறுபான்மையினர் மீதுள்ள தொடர்ச்சியான கரிசனை, தனிப்பட்ட முறையில் தாம் அவதானித்த யுத்தத்தை நிறுத்துவது தொடர்பாக பொ.ஐ.முவிலிருந்து வரும் சமிக்ஞைகள் என்பவற்றை தனது தேர்தல் பங்கு பற்றலுக்கான நியாயங்களாக கூறுகிறது ஈ.பி.ஆர்.எல்.எப்.

''தமிழனின் தன்மானம்'', ''தமது நெஞ்சுரம்'' என்பவை காரணமாக தமக்கே தமிழ் மக்களது பிரதிநிதிகளாகும் தகுதி உள்ளதாக கூறுகிறது ஒற்றுமை முன்னணி.

இவ்வாறு ஒவ்வொரு தமிழ்க் கட்சிக்கும் ஒவ்வொரு நியாயம்!

வரலாறு முழுவதும் தமது பொய்மைகளுக்கு நியாயம் கற்பிப்பதையே அரசியலாக கொண்டு வந்த கூட்டணி முதல் தீவுப்பகுதியில் குறுநில மன்னர்களாக, முன்னாள் பிரேமதாச சக்கரவர்த்தி காலத்தில் முடி சூட்டப்பட்ட ஈ.பி.டி.பியினர் வரை எல்லோருக்



ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தா

கும் பொதுவாகவும், (அவர்களது கதிரைகளைக் கைப்பற்றுவதற்கான இலட்சியத்திற்கு) வாய்ப்பாகவும் அமைந்திருக்கிறது. தமிழ் மக்களது அரசியல் சூழல்; அவர்களது வாழ்க்கை நிலை.

தமக்குள்ளே மாறி மாறி மோதிக் கொள்ளும் இக்கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரலெழுப்புவதில்லை, மாறாக 'பதவிக்காகப் போட்டியிடுவது என்ற கொள்கையில் மட்டும் ஒற்றுமையாக நிற்கின்றார்கள். எந்த ஒரு விடயம் எல்லா அரசியல் கட்சிகளையும் இணைக்க முடியுமோ அந்த விடயம் தான் அக் கட்சிகள் அனைத்திற்கும் பொதுவான இலட்சியமாக இருக்க முடியும் என்ற கூற்று உண்மையானால், அவர்கள் தமது சரியான இலட்சியத்தில் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்களுக்கிடையிலுள்ள சர்ச்சைகள் எல்லாம், வெறும் சில்லறைச் சர்ச்சைகளே!

அப்படி இல்லையென்றால், பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட இறங்க முதல் மிகமிக அடிப்படையான சில விடயங்களை நிறைவேற்றுவதை தேர்தலுக்கான முன்நிபந்தனையாக இந்த அரசாங்கத்திற்கு இக்கட்சிகள் எடுத்துக் கூறியிருக்கும். இவற்றை அரசு மறுக்கும் பட்சத்தில் தேர்தலில் போட்டியிட மாட்டோம் என்ற முடிவை இக்கட்சிகள் எடுத்திருக்கும்.

அதாவது ,

1) தேர்தலுக்கு அவசியமான, முன்நிபந்தனையாக அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்க வேண்டும்.

2) வடக்கு கிழக்கில் ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் புலிகளிடம் தேர்தல் நடாத்துவது தொடர்பான அவர்களது அபிப்பிராயம் என்ன என்று அறியும் முயற்சியை அரசு செய்ய வேண்டும். (மாறாக யாழ்ப்பாணம் போய் அரசு சார்பாக பேச முயன்ற அமைச்சர் தொண்டமான், சபாநாயகர் முகமது ஆகியோரை தடுத்து நிறுத்தியது)

3)போக்குவரத்து தொடர்பு சாதன வசதிகளை ஏற்படுத்துவதற்கு வசதியாக, பொருளாதாரத் தடையை அரசு நீக்கியிருக்க வேண்டும்.

4) முகாம்களிலும், பிற இடங்களுக்கும், இந்தியவுக்கும் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வாக்களிக்கும் மனோநிலை வரவேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து அவர்கள் மீள குடியேறவோ- அல்லது முடிந்தளவு வசதியுடன் இருக்கவோ ஏற்ற ஆரம்ப வேலைகளை யாவது செய்ய வேண்டும்.

5) 1989ம் ஆண்டுக்குப் பிற்பாடு புதுப்பிக்கப்படாத வடமாகாண வாக்காளர்கள் இடாப்பைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் பட வேண்டும்.

6) இந்த அடிப்படையான விடயங்களை செய்ய முடியாத பட்சத்தில் செல்லமுடியாத பிரதேசங்களுக்கான தேர்தலை ஒத்திப் போட வேண்டும். என்கின்ற விடயங்களை நிறைவேற்றாமல், பாராளுமன்ற 'ஜனநாயக' தேர்தல் நடத்தப் போவதாக கூறுவது சுத்தமான மோசடி என்பதை இக்கட்சிகள் எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். இந்த நிபந்தனைகட்கு அரசு மறுக்குமானால் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தமிழ்க் கட்சிகள் என்றமுறையில் ஒதுங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழீழமே/ ஈழமே என்று கூறியவை தான் இன்று தேர்தலில் நிற்கின்ற அனைத்து கட்சிகளும்




அப்படிக் கூறியவர்கள், இப்போதும் தமிழ் மக்களின் அரசியல் காரணங்களுக்காகவேயன்றி தமது பதவிகட்காக தேர்தலில் நிற்கவில்லை என்று கூறுவதானால் குறைந்தபட்சம் இதைச் செய்யும் 'நெஞ்சுரம்' இருந்திருக்க வேண்டும்; அதையும் மீறி அரசாங்கம் தேர்தலை நடாத்தினால், இத்தேர்தலை பகிஷ்க்கரிக்குமாறு மக்களிடம் கோரியிருக்க வேண்டும். பெருமளவு மக்களின் ஆதரவு தமக்கே உள்ளதாகக் கூறிக் கொள்ளும் ஒவ்வொரு கட்சியும் இதைச் செய்ய முடிவு செய்திருந்தால், அது அரசின் பாரபட்ச இனவாத நடவடிக்கைக்கு எதிரான ஒரு போராட்டமாக, எதிர்ப்புக் குரலாக இருந்திருக்கும்.

ஆனால் இலட்சியம் பதவியாக இருக்கும் போது இவற்றை எப்படிச் செய்ய முடியும்?

அவர்களுடைய நோக்கெல்லாம் எப்படி பதவியைக் கைப்பற்றுவது எப்படி தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வது என்பதாகவே இருக்கும் போது இதை அவர்கள் எப்படிச் செய்வார்கள்?



புளொட் சித்தார்த்தன்



ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் பிரேமச்சந்திரன்



ஈரோஸ் சங்கர் ராஜி

ஆக, இத்தேர்தலைப் பொறுத்த வரை அது தமிழ் அரசியல் கட்சிகளுக்கு, தமது 'அரசியற்' பிழைப்பை நடாத்துவதற்கு வாய்த்துள்ள ஒரு சந்தர்ப்பம்.

தமிழ் மக்களாவது! அரசியல் உரிமையாவது! மண்ணாங்கட்டி!

**நாசமறுப்பான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐ.தே.க., பொ.ஐ.மு தேர்தல் வி

# வட — கிழக்கு

## மீதான

# போர்ப் பிரகடன

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சியமைக்கப் போ..ப வர்கள் தாங்களே என்ற நம்பிக்கை யுடன், தாம் ஆட்சிக்கு வந்தால் என்னென்னவெல்லாம் செய் வோம் என்று கூறும் தேர்தல் விஞ் ஞாபனங்களை இருபெரும் கட்சிக ளான ஐ.தே.க.வும், பொ.ஐ.மு.வும் வெளியிட்டுள்ளன.

''இளைஞர்களின் யுகமான 2000 ஆம் ஆண்டை நோக்கி'' என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள் ளது ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞா பனம். இந்த தேர்தல் விஞ்ஞாப னத்தை ஐ.தே.கட்சியின் விஞ்ஞாப னம் என்று கூறுவதைவிட அரசாங் கத்தின் விஞ்ஞாபனம் என்றே சொல்லலாம். ஐ.தே.கவினருக்கு தாம் தேர்தலில் நிற்கும் ஒரு கட்சி என்பதை விட ஆட்சியிலிருக்கும் ஒரு அரசாங்கம் என்ற உணர்வே மேலோங்கி இருப்பது அவர்களது ஒவ்வொரு வார்த்தைகளிலும் தெளிவாக வெளிப்படுகிறது. குறிப் பாக அவர்களது வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பான நிலைப் பாடு இவ்வாறு தொடங்குகிறது.

'வடக்கு கிழக்குபிரச்சினைக்கு அர சியல் தீர்வு ஒன்று காணப்படுவது அவசியம் என்பதே **அரசாங்கத் தின்** உறுதியான முடிவாகும்;

ஆக, அதன் விஞ்ஞாபனம் முழுவ துமே ஐ.தே.கவின் தேர்தல் விஞ் ஞாபனம் என்பதற்குப் பதில் அர சாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன மாகவே கொள்ளப்பட வேண்டி யுள்ளது.கடந்த 17வருட காலமாக செய்யாதவற்றை, செய்ய நினைக் காதவற்றை இப்போது புதிதாக செய்யப் போவதாக அறிவித்திருக் கும் அரசாங்கத்தினை நம்புவதற்கு ஒருவர் ஒன்றில் வரலாற்றுக் குருட ராக இருக்க வேண்டும்; அல்லது ஐ.தே.க. வினால் தனிப்பட்ட இலா பங்களைப் பெறுபவராக இருக்க வேண்டும்.

நாட்டின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாக ஐக் கிய தேசியக் கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன தெரிவித் திருக்கிறது என்ற ஆவலுடன் ஒரு வர் அதனைப் புரட்டினால் அவ ருக்கு மிஞ்சப் போவது வெறும் ஏமாற்றமே. கடந்த 17வருட காலம் முழுவதும் சொல்லி வந்த அதே யுத்தப்பிரகடத்தையே அது இந்தத் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனத்தி லும் சொல்லியிருக்கிறது.

வடக்கு கிழக்கில் நிலவுவது இனப் பிரச்சினையல்ல. அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்று கூறி வந்த ஜனாதிபதியின் முன்னுரையுடன் தொடங்கும் இந்த நாற்பத்தெட்டுப் பக்கங்கள் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனம் இனப்பிரச்சினைக்கென ஒதுக்கி யுள்ளது முக்கால் பக்கம் மட்டுமே. இதுவே இந்தப் பிரச்சினையை எவ் வளவு சாதாரண பிரச்சினையாக ஐ.தே.க அணுகுகிறது என்பதைப் புரிந்து கொள்ள இது போதுமான தாகும்.

ஆனால் ஒரு சிறு வித்தியாசம். தேர் தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சி னையை அது பயங்கரவாதப் பிரச் சினை என்று கூறவில்லை. மாறாக வடக்கு கிழக்குப் பிரச்சினை என்று தெரிவித்துள்ளது.

'வடக்கு கிழக்குப் பிரச்சினை'க் கான அதன் தீர்வு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்ற முடிவு மட்டுமே! த.வி.புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்க முயன்றது, சர்வகட்சி மாநாட்டை நடத்தியது, பாராளுமன்றத் தெரி வுக்குழுவை உருவாக்கியது என்ப வைகளை அது பட்டியல் போட்டு இனப்பிரச்சினையில் தனது அக் கறை என்ன என்பதை காட்ட முயல்கிறது.

தமது அரசியல் தீர்வு கூட மக்க ளால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும், வடக்கு கிழக்கு இணைப்பு ஒரு சர்வஜன வாக்கெ டுப்பு மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும், அது தெரிவித் துள்ளது. அதே பழைய வார்த்தை கள். இதில் வேடிக்கை என்னவென் றால் மக்கள் தமது வாக்குரிமையை பயமின்றியும், தடையின்றியும் பிர யோகிக்க கூடிய வாய்ப்பு இருந் தால் மட்டுமே இந்த சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்த முடியும் என்றும் அதே இடத்தில் வெட்கம் கெட்டு அறி வித்திருக்கிறது. இந்த விஞ்ஞாப னம்! பாராளுமன்றத் தேர்தலுக்கு இல்லாத 'பயமும் தடையும்' சர்வ ஜன அபிப்பிராய வாக்கெடுப்புக்கு மட்டும் எங்கிருந்து வந்துவிடப் போகிறது?

தனது வாதத்திற்கு வசதியாக எதை வேண்டுமானாலும் சொல்லிவிட் டுப் போகலாம் என்று எண்ணிச் செயற்பட ஐ.தே.கவுக்கு மட்டும் தான் முடியும்!

உண்மையில் ஒரு சர்வஜன அபிப் பிராய வாக்கெடுப்புக்கு நிலைமை இப்போது சரியில்லை என்றால் பாராளுமன்றத் தேர்தலையுமல் லவா நடத்தியிருக்கக்கூடாது?

'அரசியல் தீர்வு காண வேண்டும்' என்று சொல்லும் போது கூட, அதையும் தயங்கித் தயங்கி பலநி பந்தனைகளுடன்தான் சொல்கிறது ஐ.தே.க.

இலங்கையின் ஐக்கியத்தினையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பேணும் வித்திலேயே ஒரு அரசி யல் தீர்வு அமைய வேண்டும் என் றும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைவதை ஒரு போதும் அங்கீக ரிக்க முடியாது என்றும் அரசியல் தீர்வுக்கு அது முன்நிபந்தனை விதிக்கிறது.

மனப்பூர்வமான ஒரு அரசியல் தீர் வுக்கு அது ஒரு போதும் வரப்போ வதில்லை என்பது இதன் மூலம் தெட்டத்தெளிவாகி விட்டுள்ளது. கூடவே ஒரு 'நியாயமானதும், நீதி யானது'மான தீர்வு காணப்படும் வரை, அப்பிரதேச மக்களது நலன் களைக் காக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்கிறது என்றும் அவர் களுக்குரிய தேவையான விநியோ கங்களை செய்து வருகிறது என்றும் அவற்றை தமது வீரமிக்க ஆயுதப்ப டையினர் செய்து வருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளது! ஆம். பாலுக்குப் பூனையை காவல் வைத் திருக்கிறது ஐ.தே.க. தாண்டிக்கு ளத்தில் வைத்து அத்தியாவசியப் பொருட்களையெல்லாம் ஐ.தே.க வின் 'வீரமிக்க படையினர்' பிடுங் கியெடுப்பதன் மூலம் பாதுகாப்ப ளித்து வருகிறார்கள்.

ஆக, மொத்தத்தில் சொல்லாமல் சொல்லியிருப்பது இதைத்தான்: அரசியல் தீர்வு எங்கள் சொல்; யுத்தமே எங்களது செயல்!







UNP MANIFESTO 1994

North and East Issue

It is the firm view of the Government that a political solution must be found to the North East problem. The Government has demonstrated this position in no uncertain terms. The initiatives taken by the Government in summoning the LTTE for talks, the initiatives taken by the All Party Conference and the initiative taken by the All Party Parliamentary Select Committee are well known.

...hed must be endors...

We are of the view that any political sol... people. Further the qu... be only achie...

We conside... ethnic and rel... rights of the m... rights, and econ... groups.

The PA bel... problems of o... that wi...

## நீலமோ பச்சையோ இரண்டுமே ஏ

ஆளுங்கட்சியான ஐ.தே.க, பொ.ஐ.முன்னணி ஆகியவை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன. ஒருவருடைய விஞ் ஞாபனத்திலிருந்து இன்னொருவர் சில பகுதிகளை திருடிவிட்டதாக பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்ட இக்கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாப னங்கள் இப்போது பகிரங்கமாக்கப்பட்டுவிட்டன.

அரசியல், பொருளாதார கொள்கைகளில் எல்லாம் ஒரே விதமானதாக காட்சியளிக்கும் இவ் விஞ்ஞாபனங்கள் இரண்டும், ஜனாதிபதி ஆட்சி யினை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றியே பேசுகின்றன. ஜனாதி பதி பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லும் கடப்பாடுள்ளவராவார் என்று ஐ.தே.கவின் விஞ்ஞாபனம் கூற, பொ.ஐ.மு விஞ்ஞாபனம் அதை இல்லாமல் ஆக்கிவிடுவதாக கூறுகிறது.

அமைச்சர்கட்கு பென்ஸ், பி.எம்.டபிள்யூ கார்கள் வழங்கிய சகாப் தத்தை முடிவுக்கு கொண்டு வருவதென்றும், 20க்கு மேற்பட்ட மந்திரி கள் மட்டுமே தமது ஆட்சியில் இருப்பர் என்றும் பொ.ஐ.மு. அறிவித்தி ருக்கும் அதே வேளை, ஐ.தே.கவோ பாராளுமன்ற அங்கத்தவர்கள் விசேட சலுகைகள் படைத்தவர்களாக இயங்க அனுமதிக்கப் போவ தில்லை என்றும், அரச நிலங்களைக் கொள்வனவு செய்யவோ, சலுகை விலையில் வாகனங்களை இறக்குமதி செய்யவோ அனுமதிக்கப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது!

வேலையற்ற 18வயது நிரம்பிய ஒவ்வொரு இலங்கைப் பிரஜைக்கும் மாதாந்தம் ரூபா 1200 உதவி தொகை வழங்கப்படும் என்றும் 30 வயதுவரை, அவர் இவ்வுதவித் தொகையைப் பெறமுடியும் என்றும் ஐ.தே.க கூற, பொ.ஐ.முவோ 18வயது நிரம்பியவர்களுக்கு 1500 ரூபாவை வழங்குவதெனவும், குறைந்த வருமானமுள்ள குடும்பங் கட்கு 2000 ரூபா வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

பத்திரிகைச் சு... ருமே அதை ... 'லேக்கவுஸ்' ... னால், பொ... அறிவித்துள்ள...

எல்லாவிதத்தி... னையில் மட்... தீர்வு' காணப்...

மக்களுக்கு இ... தனி அணியா... தேர்தல் விஞ்... விளக்கங்கள் ... கோஷ்டியா ...

இப்படிப் பார்... யைச் சேர்ந்த... முன்னாள் உ... வரை பொ.ஐ... கட்சி முகங்க...

நீலமா பச்சை... எதை வைத்... மென்றால் எ... தான் என்று ... தில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

...ஞாபனங்கள்:

# ...மக்கள்

# ...ங்கள்!



## PEOPLES' ALLIANCE MANIFESTO




**-அரவிந்தன்**

## ...ணங்கள் தான்!

...ம் பற்றியோ - சொல்லத் தேவையில்லை. இருசாரா
...யே தீருவதென்று அறிவித்துள்ளார்கள்.
...த்தை ஐ.தே.கட்சி 'மக்கள்'மயமாக்குவதாக கூறி
... அதை பங்குச் சந்தைக்கு விடுவதாக

...த்துப் போகும் இக்கட்சிகள் தேசிய இனப்பிரச்சி
...றுபடுவார்களா என்ன? இருவருமே 'அரசியல்
...தாக அறிவித்துள்ளார்கள்.

...து உள்ள குழப்பம் எல்லாம் இவர்கள் ஏன் தனித்
...ட்கிறார்கள் என்பதுதான்!
...த்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கொள்கை
...ம் போனபின் எஞ்சியிருப்பது எல்லாம் சந்திரிகா
...ஷடியா நல்லது என்பது தான்.

...யும் குழப்பும் விதத்தில் இருபுறமும் இரு அணி
...ம் கலந்து விட்டுள்ளார்கள்.
...நாயகர் காமினி பொன்சேகா முதல் செல்லச்சாமி
...ல் உள்ளார்கள் என்றால், ஐ.தே.கவிலும் சுதந்திர
...க்கின்றன.

...லது?
... இந்த தேர்தலில் மக்கள் முடிவு கட்டுவது? நீல
...ச்சை என்றால் என்ன. இரண்டுமே வர்ணங்கள்
... கொள்பவர்களுக்கு இந்தச் சிக்கல் ஏற்ப் போவ



ஐ.தே.கவின் பதினேழு வருட பயங்கரவாத ஆட்சிக்கு மாற்றாக ஜனநாயகபூர்வமான ஒரு மக்கள் ஆட்சியை தரப்போவதாக கூறிக் கொண்டு தேர்தலில் குதித்துள்ள பொ.ஐ.முன்னணியும், 'ஊழல், பயங்கரவாதம் என்பனவற்ற, மனித விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு பிரகாசமிக்க சமுதாயத்திற்காக' என்று தலைப்பிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. கையுயர்த்திக் காட்டும் சந்திரிகாவினதும் ஸ்ரீமாவோவினதும் படங்களை முகப்பட்டையில் பொதித்துள்ள இந்த விஞ்ஞாபனத்தை கூர்ந்து படிக்கும் ஒருவர் இது கூட ஐ.தே.கவிற்கு மாற்றான ஒரு அரசாங்கத்தை தரப்போகிறதா என்ற சந்தேகத்திற்குள்ளாவது தவிர்க்க முடியாதது.

பொ.ஜ.முவின் விஞ்ஞாபனத்தை விட, ஐ.தே.கவின் மீது ஏற்பட்ட வெறுப்புக்காரணமாக விருத்தியுற்ற சந்திரிகா அலையே இன்று பொ.ஜ.மு பற்றிய அபிப்பிராயங்களை பரவலாக்கி வருகின்றது. சந்திரிகாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள, உடன்பாடு கொண்டுள்ள அனைத்து சிறுபான்மையினங்களது தலைவர்களும் தமது கோரிக்கைகள் பொ.ஜ.முவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறுவதை விட சந்திரிகா ஒப்புக்கொண்டார் என்றே கூறி வருகின்றனர்.

சந்திரிகா அலை பெரிதாக ஓங்கியிருக்கும் இந்நிலையில் சந்திரிகா கூறுபவையெல்லாம் மக்களுக்கான அவரது தீர்வுகள் என்பது போல பேசப்பட்டு வருகின்றன. ஆனால் தேர்தல் கால மேடைப் பேச்சுக்களை விட அவர்கள் விஞ்ஞாபனத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பவையே முக்கியமானவை.

32 பக்கங்கள் கொண்ட அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரைப்பக்கத்தையே இனப்பிரச்சினை தொடர்பாகச் சொல்வதற்கு அது ஒதுக்கியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.கவைப் பொறுத்தவரை ஒப்பந்தங்களைக் கிழித்து வீசுவதில், கொடுத்த வாக்குகளை காற்றில் விடுவதில் அதற்கு ஒரு வரலாறே உண்டு. இன்றைய சந்திரிகாவின் தகப்பனாரான பண்டாரநாயக்க, தாயார் ஸ்ரீமா இருவருமே இவற்றில் பிரசித்தமானவர்கள். இவர்களின் மகளான சந்திரிகா மட்டும் கொடுத்த வாக்கை காப்பாற்றுவார் என்பதை எப்படி நம்ப முடியும்?

சென்ற பொதுத் தேர்தல் காலத்தில் வைக்கப்பட்ட ஜனநாயக மக்கள் முன்னணி (DPA) தீர்மானங்களை தோல்வியின் பின் ஒருதலைப்பட்சமாக வீசியெறிந்தது இதே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தான் என்பது எந்த சிறுபான்மையினங்களின் தலைவர்களுக்கும் தெரியாததல்ல!

ஐ.தே.கவின் எதேட்சாதிகாரம், ஜனநாயக விரோத பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சிக்கு மாறாக பொ.ஐ.முவினால் வைக்கப்பட்டுள்ள இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த கால ஐ.தே.க ஆட்சி கால நடைமுறைகளுக்கு பதிலளிப்பதாக வைக்கப்பட்ட ஒன்றாகவே உருவாக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவிடம் காணப்படும் அதே சிங்களப் பௌத்த மேலாதிக்க கண்ணோட்டம் அப்படியே இதன் விஞ்ஞாபனத்திலும் வெளிப்படுகிறது. உதாரணமாக இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகையில் அது இவ்வாறு எழுதுகிறது:

''பெரும்பான்மை சிங்கள பௌத்த சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளை மற்றைய இன,மத குழுக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும் என நாம் கருதுகிறோம்''

வழமையான சிங்களப் பேரினவாதிகளின் / சிங்கள அரசியல்வாதிகளின் சிறுபான்மையினங்கள் தொடர்பான அறிக்கைகள் எல்லாம் எப்படி அமையுமோ அப்படித்தான் இதுவும் அமைந்துள்ளது. சிறுபான்மை இனங்களின் உரிமை பற்றி பேசும் ஒவ்வொரு வார்த்தையின் போதும் பெரும்பான்மை சிங்கள இனத்தின் உரிமை பாதுகாக்கப்படும் என்று வலியுறுத்தப்படுகிறது. சிறுபான்மையின மக்கள் தமது உரிமைகளைப் பெறுவது




பெரும்பான்மையின மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகும் என்று அர்த்தப்படும் விதத்திலான இந்தக் கண்ணோட்டம் அந்த சிங்கள பௌத்த இனவாதிகளது கண்ணோட்டத்திலிருந்து வேறுபட்டது அல்ல!

இது தவிர, பொ.ஐ.மு. தன்னை சிறுபான்மை இனங்களதும் கட்சியாக கருதவில்லை. பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களின் கட்சியாகவே கருதுகிறது. உண்மையில் பொ.ஐ.முன்னணி என்ற பேருக்குப் பதில் சிங்கள மக்கள் ஐக்கிய முன்னணி என்று போட்டிருக்கலாம்!

உதாரணமாக மேலே குறிப்பிட்ட இனப்பிரச்சினை தொடர்பான அதன் நிலைப்பாட்டை விளக்கும் விதத்தில் இதனைப் பார்க்கலாம். 'ஏனைய இனமத குழுக்களது உரிமைகளைப் பாதுகாக்கும் கடமையும் எம்முடைய கடமை' என்ற வார்த்தை, சிறுபான்மை இனமத குழுக்களை பொ.ஐ.மு.விலிருந்து புறந்தள்ளிவிடுகிறது!

சிறுபான்மையினங்கள் தொடர்பாக சிங்களப் பேரினவாதிகளால் தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வருகிற அதே மலினத்துவ கோஷங்களையும் முழக்கங்களையும் அப்படியே எடுத்துப்பாவிப்பதற்கு கொஞ்சமும் தயங்கவில்லை பொ.ஐ.மு.

உதாரணமாக, த.வி.புலிகள் தொடர்பாக அது இப்படிக் கூறுகிறது:

''த.வி.புலிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து அவர்களை ஐந்து நட்சத்திர ஹோட்டங்களில் தங்க வைத்திருந்தது இந்த ஐ.தே.க அரசே. இது த.வி.புலிகளுக்கு நகரத்திலும் வடக்கிலும் தம்மை நன்றாக தயார் செய்ய உதவியுள்ளது! இந்தப்படுகொலைக் குழுக்கள் ஐ.தே.கவின் தலைமையின் நலன்களுக்கு இசைவாக சேவையாற்றி வந்துள்ளன.''

முதலாவதாக, புலிகள் இலங்கை அரசாங்கத்தின் தலைவருடன் - ஜனாதிபதியுடன் -பேச கொழும்பு வந்திருந்தார்கள். புலிகளை ஜனாதிபதியே பேச அழைத்திருந்தார். பேச்சுவார்த்தைக்கு அழைத்த புலிகளை ஜனாதிபதி, 5 நட்சத்திர ஹோட்டலில் வைப்பதற்குப் பதிலாக வேறெங்கே வைத்திருக்க முடியும்? ஒரு வேளை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பேச வந்தால் புலிகள் தாமே வெள்ளவத்தையிலோ அல்லது பம்பலப்பட்டியிலோ வாடகைக்கு அறை எடுத்து தங்க வேண்டும் என்று கூறும் போலும்! இந்த இடத்தில் உண்மையில் முக்கியமானது இனவாதிகள் கூறுவது போல தங்க வைக்கப்பட்ட இடம் ஐந்து நட்சத்திர ஹோட்டல் என்பதல்ல. என்ன விடயம் பேசப்பட்டது என்பதே. புலிகளை படுகொலைவாதிகள், பயங்கரவாதிகள் என்று சொல்லும் அதே பொ.ஐ.மு. ஜே.வி.பி பற்றி பேசும் போது மட்டும் கிளர்ச்சியாளர்கள் என்று கூறுகிறது. இது மிகத் தெளிவாக புலிகளுக்கும் - ஜே.வி.பிக்கும் இடையில் பொ.ஐ.மு. காட்டும் வேறுபாடு இனவாத அடிப்படையிலானது என்பதையே காட்டுகிறது. சிங்கள பௌத்த இனவாதிகளுடைய மனதைத் திருப்திப்படுத்த இப்படி மலினத்தனமாக முனையும் பொ.ஐ.மு. எப்படி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் தன்னுணர்ச்சியை கொண்டிருக்க முடியும்?

இந்த லட்சணத்தில் புலிகளுடன் பேச சந்திரிகா யாழ்ப்பாணம் போவார் என்று வேறு கூறுகிறார்கள்!

கொலைகாரர்கள் என்று கூறிக் கொண்டே பேசப் போவதில் எந்த முரண்பாட்டையும் பொ.ஐ.மு.காணவில்லையோ என்னவோ?

இனப்பிரச்சினைக்கு தீர்வாக பொ.ஐ.மு.தெரிவித்துள்ள கருத்துக்களைப் பார்ப்போம்;

பூகோளப் பொருளாதார சமூகக் காரணிகளைப் பொறுத்து புதிய நிர்வாக அலகுகளை உருவாக்குதலை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு முயற்சியாகவும், இந்நிர்வாக அலகுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பான ஆலோசனைகளை எல்லா இனக்குழுமங்களிடம் இருந்தும் பெறுவதாகவும் பொ.ஐ.மு. கூறுகிறது.

கடந்த 17 ஆண்டுகால ஐ.தே.க. ஆட்சியின் போது வளர்ந்து பூதாகரமான பிரச்சினையாக மாறியுள்ள இனப்பிரச்சினைக்கு பொ.ஐ.முவிடம் இப்போது கையிலிருப்பது வெறுமனே நிர்வாக அலகுகள் தொடர்பான கருவளவிலான சிந்தனை மட்டுமே.

கடந்த ஓராண்டு காலமாக திரும்பத் திரும்ப பொ.ஐ.மு. பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தயாரித்து வருவதாக கூறி வந்த போதிலும் அது பற்றி எந்த விபரத்தையும் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கவில்லை.

இதன் தர்க்கரீதியான விளைவு வடக்கு கிழக்கு மக்கள் மீதான போர்ப்பிரகடனமேயன்றி வேறல்ல!

பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்தாலும் வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைக்கப் போவது அதே ஷெல்லடியும் குண்டுத் தாக்குதலும் தான்!

ஆக, மொத்தத்தில் ஐ.தே.கவும் சரி பொ.ஐ.முவும் சரி, இனப்பிரச்சினையை ஒரு முக்கியமான பிரச்சினையாக கருதவேயில்லை. சிறுபான்மையின மக்களை ஏமாற்றுவதில் ஒன்றுக்கொன்று எந்தவிதத்திலும் சளைத்தவை இல்லை என்பதை போட்டி போட்டுக் கொண்டு காட்டியிருக்கின்றன.

ஆட்சி யார் கையில் போனாலும் சிறுபான்மையின மக்கள் நிலை அதேதான் என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள். வடக்கு கிழக்கு மக்கள் மீதான போருக்கு முன்னுரை கூறியுள்ள கட்சிகளின் விஞ்ஞாபனங்கள் சிறுபான்மையினங்கள் தமக்கு ஏதாவது தேவையென்றால் அவை நம்பிக்கை வைக்க வேண்டியது இவர்களிடம் அல்ல, தம்மீது தான்! தமது பலத்தின் மீதுதான் என்ற உண்மையை மேலும் தெளிவாக்கி விட்டுள்ளது!

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மு.சிவசிதம்பரம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர். சரிநிகர் நேர்காணலிற்காகத் தொடர்பு கொண்ட போது அவர் வவுனியாவில் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தார். தொலைபேசி மூலம் வவுனியாவிலிருந்த அவருடன் உரையாடியதில் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.**



த.வி.கூ. தலைவர் மு.சிவசிதம்பரம்

# வன்னியிலும் கிழக்கிலும் போட்டியிடுவது சரியானதே என்கிறார் சிவசிதம்பரம்

**யாழ் மாவட்டத் தேர்தலை நிராகரித்த நீங்கள் அதே நிலைமையைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதனை எவ்வாறு நியாயம் என்பீர்கள்?**

வன்னி தேர்தல் தொகுதியின் நிலைமையும் யாழ் மாவட்ட நிலைமையும் முற்று முழுதாக வேறுபட்டது. வன்னியில் தெல்லிப்பழை போன்ற இடத்தில் நியமனப்பத்திரங்களை நாம் தாக்கல் செய்யவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தான் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மக்கள் சுதந்திரமாக நடமாட முடியும். எவரும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யலாம். மற்றும் வன்னியில் எந்தப்பகுதியும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் இல்லை. இங்குள்ள வீதிகளில் குண்டுகள் தாட்டு வைக்கப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவில்லை. வன்னியில் தேர்தல் நடத்தப்பட்டது.

**வாக்களிக்க முடியாத 80 ஆயிரம் மக்களின் உரிமை வன்னியில் பாதிக்கப்படுவதாக நீங்கள் கருதவில்லையா?**

சரி, அப்படி பாதிக்கப்படுகிறது தான். அதற்காக முற்றுமுழுதாக தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாராளுமன்றத்தில் இல்லாமல் செய்வதா?

**ஆயின் வன்னியிலும் கிழக்கிலும் தேர்தலில் நீங்கள் போட்டியிடக் காரணம் என்ன?**

தமிழர்களுடைய பிரச்சினைகளை உலகுக்கு காட்டுவதற்கே போட்டியிடுகிறோம், எங்களால் மட்டும் தான் பிரச்சினைகளை எடுத்துக் கூறமுடியும். மற்றவர்களால் அல்ல. எங்களுக்குத்தான் அந்த அனுபவமும் அனுதாபமும் உண்டு. அதற்காகவே தமிழர்களுடைய வாக்கைக் கேட்கிறோம்.

இத்தகைய சந்தர்ப்பம் 77 தேர்தலில் உங்களுக்கு கிடைத்திருந்தது. அப்போது நீங்கள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியாகவும் இருந்தீர்கள். அப்போது செய்ய முடியாத சாதனையை இனிவரும் காலங்களில் செய்யமுடியுமென நம்புகிறீர்களா?

சாதனை செய்திருக்கிறோம். ஒரு சிலர் அதனை ஏற்காது விடலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு சாதனையே. ஒருவேளை நீங்கள் இந்தியாவுக்கு மாறாக இருக்கலாம்,. இதுபோலவே தமிழர்களுடைய பிரச்சினைகளை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளை உலகளாவியரீதியில் எடுத்துச் சென்றோம். அதுபோலவே இனிவரும் காலங்களிலும் செய்வோம் என நம்புகிறோம். அவநம்பிக்கையில் உலகம் நடப்பது இல்லை. நம்பிக்கையில்தான் உலகம் நடக்கிறது.

**பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் சந்திரிகா பண்டார நாயக்கா அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கவுள்ளார். அவ்வாறு தீர்வை முன்வைக்கும் போது தமிழர்களுக்கு நியாயமான தீர்வை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சட்ட நுணுக்கம் தெரிந்த எம்மை பாராளுமன்றம் அனுப்புங்கள் என்று கேட்டிருந்தீர்கள். ஆயின் 70ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசுதானே தமிழ் மக்களுக்கு சோல்பரி யாப்பில் இருந்த பெயரளவிலான சலுகைகளைக் கூட ஒன்றும் விடாமல் பறித்தது. இந்நிலையில் இம்முறை சந்திரிகா தமிழர் பிரச்சினையை தீர்ப்பார் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?**

**அவ்வாறு சந்திரிகா பிரச்சினையை தீர்க்காவிட்டால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறுவீர்களா?**

உண்மையில் உத்தரவாதம் இல்லை. ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினை நீக்க எமது ஆதரவு அவர்களுக்கு பாராளுமன்றில் தேவை. எனவே அந்த நேரத்தில் எமது நிபந்தனையினை முன்வைப்போம். இல்லாவிடில் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் போராட்டம் நடத்துவோம்.

**1989ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை மக்கள் நிராகரித்திருந்தார்கள் என ஏற்றுக் கொள்வீர்களா?**

மக்கள் நிராக்ரித்து இருந்தார்கள். ஆனால் அதற்கு காரணம் நாம் ஏனைய ஆயுதக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்தமையே ஆகும்.

# "பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை விட அடுப்படி வேலைகளில் ஈடுபடுவதே நல்லது"

## பொ.ஐ.மு. கம்பஹா மாவட்ட வேட்பாளர் - நீல் ரூபசிங்க



நீல் ரூபசிங்க

**கம்பஹா மாவட்டத்தில் பொது சன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் *நீல் ரூபசிங்க* அவர்கள் நீண்டகாலமாகத் 'தடித்த' ஐ.தே.க உறுப்பினராக இருந்தவர். வத்தளையைச் சேர்ந்த நீல் அவர்கள் சிங்களத் திரைப்படத் துறையிலும் பல வழிகளில் ஈடுபட்டுள்ளார். 1983 ஆம் ஆண்டு ஐ.தே.கவை விட்டு சி.ல.சு.கட்சியில் சேர்ந்து கொண்ட போதிலும் நீல் "ஐ.தே.க ஒரு மிகவும் மோசமான கட்சியாக மாறிவிட்டது" என்று குற்றம் சாட்டுகிறார்.**

**கிட்டத்தட்ட 14,000 தமிழ் வாக்காளர்களையும் 3,000 முஸ்லீம் வாக்காளர்களையும் கொண்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் பெரும்பாலான தமிழ், முஸ்லீம் வாக்குகள் தனக்கே கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்த நீல் ரூபசிங்க சரிநிகருக்கு வழங்கிய பேட்டியைக் கீழே தருகிறோம்:**

**பொ.ஐ.முன்னணி எப்படி யுத்தத்தை நிறுத்தப் போகிறது என்று கொஞ்சம் விளக்கமாகச் சொல்வீர்களா?**

எப்படியும் நாங்கள் யுத்தத்தை நிறுத்தத்தான் வேண்டும். யுத்தம் நிறுத்தப்படாவிட்டால் நாம் ஆட்சி செய்யவே முடியாது. உண்மையில் யுத்தத்தை வேண்டுமென்றே நீடித்து வைத்திருப்பது ஐ.தே.கட்சி அரசாங்கமேயாகும். யுத்தம் நடைபெறாவிட்டால் ஐ.தே.க அரசு உயிர் வாழ முடியாது. எங்களுடைய நிலை அப்படியல்ல.

**உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு வரிகூட விடாமல் வாசித்துப் பார்த்தோம். யுத்தத்தை நிறுத்தவும் இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் திட்டவட்டமான உருப்படியான எந்த ஆலோசனைகளையும் நாம் காணவில்லையே?**

எப்படியும் நாங்கள் யுத்தத்தை நிறுத்துவோம். பேச்சு வார்த்தைகள் நடத்துவோம். அதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்போம்.

**நல்லது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்படாவிட்டால் என்ன செய்வீர்கள்?**

பாருங்கள்! எல்லா இடங்களிலும் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். யுத்தத்தினால் எல்லா மக்களுமே வெறுப்படைந்திருக்கிறார்கள். எல்லோருக்கும் இப்போது ஒரு சமாதானம் தேவை. விடுதலைப்புலிகளையும் வடக்குக் கிழக்கு மக்கள் அவ்வாறே நிர்ப்பந்திப்பார்கள் என்று நான் நம்புகிறேன். மக்கள் சக்திதான் இப்போது தேவை.

**உங்களுடைய தொகுதியில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கான உங்களுடைய வேலைத் திட்டம் என்ன?**

தமிழ் பேசும் மக்களுக்கு எங்களுடைய பகுதியில் நிறையப் பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் அவர்களுடைய மொழியில் பணியாற்ற முடிவதில்லை. 1,200க்கு மேற்பட்ட தமிழ் மொழி பேசும் மாணவர்களுக்கு என ஒரு பாடசாலை இல்லை. கடந்த பதினேழு வருட ஐ.தே.கட்சி எல்லாச் சிறுபான்மை மக்களது வாக்குகளையும் இப்பகுதியில் வாங்கி விட்டு அவர்களுக்கு ஒன்றுமே செய்து தரவில்லை. என்னை ஆதரிப்பதற்கென ஒரு தமிழ்க் கொமிட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ஒரு தமிழ் மொழிப் பாடசாலை அமைப்பதிலிருந்து ஏனைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பேன் என நான் உறுதி மொழி கொடுத்துள்ளேன்.

**249 வேட்பாளர்களைக் கொண்ட பொ.ஐ.மு. பட்டியலில் 39 பேரே தமிழ், முஸ்லீம் வேட்பாளர்கள். இந்த நிலையில் பொ.ஐ.முன்னணி தமிழ், முஸ்லீம் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று எப்படிச் சொல்ல முடியும்?**

எவ்வளவு தமிழ், முஸ்லீம் வாக்காளர்கள் உள்ளனர் என்பதைப் பொறுத்தே வேட்பாளர்களை நியமிக்க முடியும்.

**அப்படியானால் பதுளை மாவட்டத்தில் 80,000 தமிழ் பேசும் வாக்காளர்கள் உள்ளனர். உங்களுடைய கட்சி ஒரு தமிழ் வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லையே?**

உங்களுடைய இத்தகவல் உண்மைதானா?

**நூறுவீதம் உண்மை. நீங்கள் வேண்டுமானால் உங்களுடைய செயலாளர் டி.எம்.ஜயரத்னவைக் கேட்டுப்பார்க்கலாம்.**

நான் பதுளை மாவட்டத்தைப் பற்றிப் பேசுவது சிரமம். கம்பஹா மாவட்டம் பற்றிக் கேளுங்கள்.

**ரி.என்.எல் (TNL) தொலைக்காட்சியில் பொ.ஐ.முன்னணியின் வாசுதேவ நாணய்க்கார அவர்களுக்கும் ஐ.தே.கவின் ஜினதாச நியதபாலவுக்கும் இடையே நிகழ்ந்த விவாதத்தில் வாசுதேவ அவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள் உங்களுடைய கட்சிக்குள் பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டுள்ளதாகத் தெரிகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை?**

வாசுவுடன் எனக்கு உடன்பாடில்லை. எங்களுடைய முன்னணிக்கெதிரான பிரதானமான குற்றச்சாட்டே நாம் தீவிரமான கொம்யூனிஸ்ற்றுகளுடன் இருப்பது என்பதாகும். பொ.ஐ.முன்னணி ஒரு இடதுசாரிக் கட்சியல்ல. எனினும் நாம் எல்லோரையும் இணைத்து வேலை செய்யவே விரும்புகிறோம்.

**ஆனால் வாசுதேவ அவர்களின் நிலைப்பாடு பொ.ஐ.முன்னணியின் நிலைப்பாட்டை விட எவ்வளவோ மேலானது அல்லவா?**

வாசுவின் நிலைப்பாடு எப்படி நல்லது என்று சொல்கிறீர்கள்?

**உதாரணமாக வடக்குக் கிழக்கு இணைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் அவர்களுடைய பிரதேசங்கள் தொடர்ச்சியாக இருக்கிற மாதிரி ஒரு அரசி**

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வாறார் வாறார் புள்ளடியார்!

## மாதவன்

1981,82 இல் யாழ் குடாநாடெங்கும் ஒரு நாடகம் மேடையேறித் திரிந்தது. அளவெட்டி படைப்பாளிகள் வட்டத்தினரின் 'திருவிழா' நாடகம் அது. மாவை நித்தியானந்தன் அப்பிரதியை எழுதியிருந்தார். இப்போது அந்நாடகம் நினைவிற்கு வருகிறது. த.வி. கூட்டணியினரின் அரசியல் வரலாற்றைக் கிண்டல் செய்கிற நாடகம். இப்போதும் நிலைமை அதேதான். ஆனால் சிறு வித்தியாசம். த.வி.கூட்டணியினருடன் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் , ரெலோ, ஈரோஸ் என்கிற ஆயுதம் தூக்கிய குழுக்களும் இச் சாக்கடையில் சங்கமாகியுள்ளது.

'திருவிழா' நாடகத்திலிருந்து சில பாடல் வரிகளை இடையிடை குறித்தும் கொள்ளலாம்.

**''எனக்குப் புள்ளடி போடுங்கோ..**
**எனக்குப் புள்ளடி போடுங்கோ...**
**என்று சந்திகளில்**
**நின்று கத்துவார் (என்க்கு)**
**எல்லோர் முன்னாலும்**
**பல்லைக்காட்டுவார்**
**(எனக்கு)**
**தங்களின் வால்களில்**
**தொங்கிடச் சொன்னார்**
**(எனக்கு)**
**இப்படி எங்கள்**
**தலைவர்கள் உரைத்தார்**
**(எனக்கு)**
**பொய்யும் புளுகும் புரட்டும் சீ..**
**புழுத்துப் போன அரசியலே...**

இத்தேர்தலில் தலையாய பங்கு வகிப்பது த.வி.கூட்டணியினர்தான். இவ்வளவு காலங்களிலும் எவ்வளவு திருகுதாளங்கள் செய்தனர். ஆரம்ப் காலங்களில் தமிழ் காங்கிரஸ், தமிழரசு எனப் பிரிந்து நின்று, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, மந்திரிப்பதவி பிடித்து தமக்குள் குஸ்தி போட்டுக் கொண்டவர்கள். இனித் தமது பருப்பு வேகாது என்று தெரிந்தவுடன் தமிழர் விடுதலைக்கூட்டணி எனச் சங்கமமானவர்கள். அவர்களது முதலாவது பொதுத் தேர்தல் 1977இல் அமைந்தது. ஒரு வருடத்திற்குள் தமிழீழம் அமைப்போம் என்றார்கள்'' அடுத்த தைப்பொங்கல் தமிழீழத்தில் நடைபெறும்'' என்பது தானைத் தளபதி அமிர்தலிங்கத்தின் பேச்சு. சாவகச்சேரி எம்.பி. வி.என் நவரத்தினரம் ''தமிழீழம் கிடைக்கும் வரை தாடி வெட்டமாட்டேன்'' என்று தாடி வளர்த்தார். த.வி.கூவிரை அமோகமாக வெற்றியீட்டச் செய்தனர் தமிழ் மக்கள். ஆண்டு ஒன்றாகி விட்டது. நாடு இரண்டாகவில்லை. தமிழீழம் கேட்டார்கள், ஜப்பான் ஜீப் கிடைத்தது. அதுவே சுகம் என்று திரிந்தார்கள். எம்.பியானதற்கு அவர்கள் குறைவைக்கவில்லை. சிவசிதம்பரம் சிம்மக்குரலில் பாராளுமன்றத்தில் கர்ஜித்தார். ஏனைய எம்பிக்கள் உள்ளூர் முதலாளிகளின் கோட்டாவுகளுக்காக அமைச்சர்களது வீட்டின் பின்கதவைத் தட்டினார்கள் யோகேஸ்வரன் எம்பி புத்தரின் பல்லைக் காவித்திரிந்தார். அமிர்தலிங்கம் தனது மகனுக்கு லண்டனில் அட்மிஷன் எடுத்தார். அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் அமிர்தலிங்கத்தின் ஜீப்பைக் கொண்டு பெண்களின் பின்னால் சுற்றினார்.

இதுதான் கூட்டணியினரின் சாதனை. இன்னமும் வேண்டுமா?

வந்தது மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல். தமது 'அரசியலைத்' தூசுதட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். பாராளுமன்றத்துக்குள் தம்மை நுழைய விடவில்லையென்று கோபித்துக் கொண்டிருந்த 'பொட்டர்' நடராசாவை தலைமை வேட்பளாராக்கி திருவிழா கொண்டாடத் தொடங்கினார்கள். பிறகும் தமிழீழம், தமிழர் உரிமை என மேடைக்கு மேடை பேச்சு.

**''பெரிய தேர்தல் சிறிய தேர்தல்**
**குட்டித் தேர்தல் குஞ்சுத் தேர்தல்**
**ஒன்று முடிய இன்னொன்று**
**எந்தநாளும் திருவிழாத்தான்...''**

எப்படியோ ஏதோவிதமாக இவர்களுக்கு தேர்தல் வந்துவிடும். ஏதோ ஒரு சாட்டுடன் தேர்தலில் பங்கு பற்றி வென்றுவிடுவார்கள். இவர்களது அப்புக்காத்து மூளைக்குச் சாட்டுத் தேடுவது பெரிய வேலையா? இவர்களது கிரிமனல் மூலைதான் 1982இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தனா வெல்லவதற்கு வழிவகுத்துக் கொடுத்தது. அப்போது கூட்டணியினரின் இன்னொரு முகம் யூ.என்.பியாக இருந்தது. உண்மையிலேயே அப்போது அமிர்தலிங்கத்தின் முகத்தை திருப்பிப் பார்த்திருப்பீர்களானால் ஜே.ஆரின் முகத்தை அதில் கண்டிருப்பீர்கள்.

இவர்களது அர்சியல் வாழ்வுக்கும் அஸ்தமனம் வந்தது. சொகுசாக வாழ்ந்த இவர்கள் மீண்டும் மக்களிடம் வரவேண்டி வந்தது.

**''அடிபட்டோம் மிதிபட்டோம்**
**உதைபட்டோம் வதைபட்டோம்**
**உங்களுக்கு உரிமை வேண்டி**
**சிறைகூடச் சென்றுள்ளோம்**
**எங்களுக்கு வாக்களிப்பீர்....''**

என்று வந்தார்கள்.

**சிறை எங்கே சென்றாராம்**
**குளிர்ச்சியான மாளிகையில்**
**ஹவ்ஸ் அரஸ்ரில் இருந்தீர்கள்**
**மூன்று வேளை சாப்பாடு**
**மூக்கு முட்டத்தின்றீர்கள்**
**அடிபட்டோர் மிதிபட்டோர்**
**ஆராரோ எவரெவரோ?''**

என்று இளைஞர்கள் சொன்னார்கள். நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலில் கூட்டணியினர் தமது பழைய ஆயுதமான உ்ண்ணாவிரதத்துடன் வந்திருந்தனர். அங்கிருந்த இளைஞர்கள் பலர் பலவந்தமாக இவர்களுக்கு உணவினை ஊட்டி உண்ணாவிரதத்தை முடித்தார்கள். அத்துடன் கூட்டணியினர் அரசியல் அஸ்தமனம் கண்டது. பெட்டி படுக்கைகளுடன் ஊரை விட்டு ஓடினார்கள். மக்கள் இவர்களை நிராகரிக்கத் தொடங்கினார்கள். பின்னர் ஐ.பி.கே.எப் வந்து நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டனர். தளபதிகள் இருவரும் (அமீர், சிவா) மண்கவ்வினர். மக்களால் நிராகரிக்கப்பட்ட அமிர்தலிங்கம் சூழ்ச்சிகளால் தேசியப்பட்டியல் எம்பியானார். அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் கொல்லப்பட்டனர். இப்போது மழைவரப் போவதை அறிந்த புற்றீசல்கள் போல கனடாவிலிருந்து ஆனந்த சங்கரியும் லண்டனிலிருந்து சம்பந்தரும் பிற கூட்டணியினரும் வந்துள்ளனர்.

**''வாரார் வாரார் புள்ளடியார்**
**திரும்பி வாரார் புள்ளடியார்**
**ஆடிவாரார் புள்ளடியார்**
**தேடி வாரார் புள்ளடியார்**
**குட்டித் தேர்தல் வைக்கவும்**
**கெட்டித்தனத்தை கணிக்கவும்**
**பட்டம் பதவி கொடுக்கவும்**
**திட்டம் கொண்டு வருகிறார்''**

இனியென்ன? தேர்தல் திருவிழா கடைவிரித்து விட்டார்கள். அத்துடன் அறிக்கை வேறு. ஆயுதக்குழுக்களுடன் கூட்டுச் சேர மாட்டோமாம்? தங்களது கை சுத்தமானது எனக் காட்ட பகீரதப் பிரயத்தனம். கூட்டணியாளர்களே! உங்களது தானைத் தளபதி அமிர்தலிங்கம் சங்கிலியனின் கையிலிருந்த வீர வாளைப் பறித்து அதனை உயர்த்தியபடி ''ஆயுதம் ஏந்தவும் தயங்க மாட்டோம்'' எனச் சூளுரைத்ததனை மறந்து விட்டீர்களா?

மேஜர் அல்பிரட் துரையப்பாவையும், பொத்துவில் கனகரத்தினத்தையும் சுட்ட கைகள் உங்களது அல்லத்தான். என்றாலும்....? ஐயா, சிவசிதம்பரத்தாரே ரெலோ தலைவர் தங்கத்துரை, குட்டி மணி ஆகியோருக்காக நீங்கள் வழக்குப் பேசினீர்களே? அது ஆயுதங்களை ஏந்தியவர்களுடன் தொடர்பு கொண்டதாக கொள்ளப்படக்கூடாதா? ஒருவேளை உங்கள் தொழிலைச் செய்ததாக சொல்வீர்களோ என்னமோ? எல்லாவற்றுக்கும் மேலாக 1983இல் தமிழ் நாட்டிலிருந்து அமிர்தலிங்கம் இங்கிருந்த மாவை சேனாதிராசாவுக்கு கடிதம் எழுதி தனது மருமகன் வள்ளுவன் மூலம் அக்கடிதத்தைக் கொடுத்தனுப்பி இலங்கை அரசாங்கத்திடம் வள்ளுவன் பிடிபட்டு உண்மையெல்லாம் கக்கி, எங்களது தளபதியர் அமிர் அண்ணா ஜே.ஆரின் வீட்டினரது பின்கதவைத் தட்டி வள்ளுவனை விடுதலை செய்வித்தது.

**''வள்ளுவன் தன்னை விடுதலை செய்து**
**வான்புகழ் கொண்ட அமிர்தலிங்கம்''**

என்று புதுப்பாடல் ஒன்று எழுதப்பட்டது. இது எல்லாவற்றையும் எங்களால் மறக்க முடியுமா? அது சரி, தமிழீழ தேசிய இராணுவம் (TENA )ஆயுதம் போன்ற தகவல்களெல்லாம் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததே. உங்கள் கைகளா சுத்தமானவை? ஐயா அப்புக்காத்துமாரே, நாங்கள் சாமனியர்தான். ஆனாலும் முட்டாள்கள் அல்லவே?

தங்களது கொள்கைதான் என்ன? ஆங்கிலம் தெரியும் அவ்வளவு தானே? எம்பியாவதற்கு இத்தகுதியும் கொள்கையும் போதும். என்ன தேசம் இது.ஆங்கிலம் தெரியும் இது கொள்கை. மேட்டுக்குடி அரசியலுக்கு இது மெத்தப் பொருந்தும். முன்னர் தொட்டு நாங்கள் உங்கள் பகடைக்காய்களாகத்தான் இருந்தோம். இப்போதும் எங்கள் முதுகில் சவாரி செய்ய வந்திருக்கிறீர்கள்.

ஒன்று சொல்லாம் ஆயுதம் தூக்கிப் போராடிய இயக்கங்கள் பற்றி விமர்சிக்க கூட்டணியினருக்கு தகுதியில்லை. மக்கள் நாளும் பொழுதும் செத்துக் கொண்டிருக்க விட்டு விட்டு ஓடியவர்கள் இவர்கள். கனடாவில் ஆனந்தசங்கரியும், லண்டனில் சிவசிதம்பரத்தாரும், சம்பந்தரும் என்று பதுங்கியவர்கள் இவர்கள். தங்களது பிள்ளைச் செல்வங்களை ஒழுங்காக வசதியாக மேலை நாடுகளுக்கு அனுப்பி படிப்பிக்க வைத்தவர்கள். உமாமகேஸ்வரனும் சந்ததியாரும் கொல்லப்பட்டது போல எனது மகனும் கொல்லப்பட.. வேண்டுமா எனக் கேட்கிறார் தானைத் தளபதி சிவா. சரி, இவர்களது போராட்ட வழிமுறைதான் பிழை. அதனால்தான் இந்தக் குத்தும் வெட்டும் கொலையும். தாங்கள் மெத்தப்படித்தவர் தானே. தாங்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்திருக்கலாமே. உங்களைப் போன்றவர்கள் தாம் யாசீர் அரபாத்தும், நெல்சன் மண்டேலாவும் அவர்கள் இப்போது தலைமை தாங்குகிறார்கள்.

கூட்டணியின் இன்னொரு வாரிசு குமார் பொன்னம்பலம். கொள்கைக் குன்று. இவரது ஒரே ஒரு உயர்ந்த லட்சியம் தான் எப்படியும் எம்பியாவது. 1977இலிருந்து செய்யப்பட வேண்டிய திருகுதாளங்கள் எல்லாம் செய்து பார்த்தார். கூட்டணியுடன் நின்றார். எதிர்த்தார். தலையால் கிடங்கு கிண்டினார். இல்லை. கண்டவன் நிண்டவனுக்கெல்லாம் எம்பி பதவி கிடைக்கிறது. பெருந்தலைவரின் மகன். பெரும் அப்புக்காத்து. கோடீஸ்வரன். கேவலம் ஒரு எம்.பி பதவி கிடைக்காதிருக்கிறதே. பார்ப்போம். இதுதான் இறுதி என்று ஓர்மத்துடன் இறங்கி விட்டார். கொள்கை? யார் கேட்டார்கள்? பாராளுமன்றம் தன் கதவுகளைத் திறந்தபடி காத்திருக்கிறது. வா வா என்றழைக்கிறது. போகாவிடில் பாராளுமன்றத்தை அவமரியாதை செய்வது போல் ஆகாதா? குமார், துணிந்து விட்டார். பயணத்தைத் தொடங்கிவிட்டார். இடையில் நீலன் போன்ற சில்லறைகள் சிறு தடை செய்கின்றன. எட்டிக் கடக்க வேண்டியதுதான்.

எல்லாவற்றிலும் பரிதாபம் ஆயுதம் தூக்கி தமிழீழ தாயகத்திற்காகப் போராடியவர்கள் பாராளுமன்றத்திற்காக எத்தகைய போராட்டத்தை எதிர்கொள்கிறார்கள்? ஒருபுறம் ஆயுதப்படைகளோடு சேர்ந்து அட்டகாசம். மறுபுறம் நாங்கள் போராளிகள், தியாகம் செய்தவர்கள் என்கிற பம்மாத்து. தமிழருக்கு வந்த சோதனை. முன்னேயே தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப் இந்தியப்படைகளடன் சேர்ந்து அட்டகாசம். இப்போதைய தேர்தலில் புளொட், ரெலோ இலங்கைப்படையுடன் சேர்ந்து அட்டகாசம். முன்னர் ஒரு காலம் இருந்தது. புளொட் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கி ஆயுதம் பறித்து வெற்றிகரமாக மீண்டார்கள் என்கிற செய்தி கேட்கிற போது சந்தோஷம். ரெலோ சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி நிர்மூலமாக்கியது என்கிறது செய்தி கிடைக்கிற போது சந்தோஷம். ஈ.பி.ஆர்.எ.எப் காரைநகர் கடற்படைமுகாமைத் தாக்கினார்கள் என்று அறிகிற போது சந்தோஷம். அதெல்லாம் இல்லாது போய் இப்போது பாராளுமன்றப் படிக்கட்டுக்காக குடிமி பிடிச் சண்டை. சுந்தரமும், காத்தானும் ரத்தம் சிந்தியது பாராளுமன்றத்திற்காகவா? தங்கத்துரையும் குட்டிமணியும் உயிரைக் கொடுத்தது பாராளுமன்றப் படிக்கட்டில் காலாற நடக்கவா? சோபாவும் அகிலனும் ரேகனும் தம்மை இழந்தது சிரவஸ்தியில் சொகுசாக தூங்கவா? எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் பாராளுமன்றத்திற்காகவே அர்ப்பணிக்கப்படுகிறது.

ஐ.தே.கவும், பொ.ஐ.முவும் மாறி மாறி ஆட்சிக்கு வருகிற கட்சிகள். அவர்களுக்கு இது திருவிழாதான். தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் கூட இது திருவிழாதான்.

நம் வாழ்வோ குண்டுகளால் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வானிலிருந்து கொட்டப்படுகின்றன குண்டுகள். நம்மவரின் குண்டுகள் கன்னத்தைக் கிழித்து காதினுள் செலுத்தப்படுகின்றன. பங்கருக்குள் வெளியுலகிற் கேட்காத படி குண்டுகள் வெடிக்கின்றன. உயிரோ குண்டுகளால் தீர்மானிக்கப்பட்டு ஊசலாடிக் கொண்டிருக்கிற போது யாருக்கு வேண்டும் இத் தேர்தல்.எவரால்தான் இத்திருவிழாவில் பங்கு கொள்ள முடியும்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரத்தம் பெருகிய ஆண்டுகள்

**ச.பாலகிருஷ்ணன்**

1977ம் ஆண்டு நீதியான சமுதாயத்தை (Dharmista Society) க் கட்டியெழுப்புவதற்காகவும் இனவாதப் பிரச்சினையை அரசியல்ரீதியில் தீர்ப்பதாகவும் வாக்குறுதி அளித்துதான் ஜனநாயகத் தேர்தலின் மூலம் ஐ.தே.கட்சி அரசு ஆட்சியைக் கைப்பறிக் கொண்டது.

இந்தப் பதினேழு வருட காலத்தில் ஆட்சி அதிகாரத்தை தன்வசப்படுத்திக் கொள்வதை உறுதி செய்து கொள்வதற்காக ஐ.தே.கட்சி அரசு இரண்டு தந்திரோபாயங்களை உபயோகித்து வந்துள்ளது. அவற்றில் ஒன்று பேரினவாதமும், பேரினவாத யுத்த நடவடிக்கைகளும். இதைப்பற்றி சென்ற வார சரிநிகர்ப் பத்திரிகையின் விசேட வெளியீட்டில் எழுதியிருந்தேன். மற்றது ஜனநாயக விரோத பலாத்கார நடவடிக்கைகள். இனவாத சந்தர்ப்பவாத ஆட்சியாளர்கள் தமது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் தவறான ஆட்சியின் பிரதிபலனாக தோன்றுகின்ற மக்கள் எதிர்ப்புகளை முறியடிக்கவும் பலதரப்பட்ட ஜனநாயக விரோத அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு செயற்படுவதை பல நாடுகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. 1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளையும் ,பாகுபாடுகளையும் கட்டிவிழ்த்து விட்டு அதன்மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் எதிர்ப்புணர்வுகளைத் தூண்டி விட்டது. பேரினவாதக் கொடுமைகளுக்கெதிராக தமிழ் மக்களின் சுயகௌரவத்தையும்,சம உரிமைகள், பிரதேசம், தனித்துவம் போன்வற்றையும் அங்கீகரித்துக் கொள்வதற்கான தமிழர்களின் போராட்டத்தை முறியடிப்பதற்காக இரண்டு சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தியது இலங்கையின் அரசு.

1. பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அவசரகால விதிமுறைகள்.
2. 1979ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம். (ப.த.ச) இச்சட்டமானது ஆரம்பகாலத்தில் மூன்று வருடங்களுக்கு வரையறுக்கப்பட்ட தற்காலிக சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. பின்பு இது நிரந்தர சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

அவசரகால சட்டவிதி முறைகள் ஆனது ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கைச் சரித்திரத்தில் என்றுமே இடம்பெற்றிராத அளவுக்கு ஜனநாயக, மனித உரிமைகளை மீறும் இச்சட்டமானது ஆயுதப்படையினரினதும், பொலிசாரினதும் அத்துமீறல்களையும், மனிதப்படுகொலைகளையும் நியாயப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளதோடு அரசியல் சட்ட மூலத்தில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளுக்கு முற்றிலும் முரண்பாடானதாகவே அமைந்துள்ளது.

அரசியல் யாப்பில் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் இயக்கங்களை அமைப்பதற்கும் அமைப்புகளில் அங்கத்தவம் பெறுவதற்குமான சுதந்திரம் போன்றவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சித்திரவதைகள். கொடூரமான மானிதாபிமானமற்ற தண்டனைகள் போன்றவற்றிலிருந்து அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டுமென உறுதி கூறப்பட்டுள்ளது. ஆனால் 1979ம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கும் சித்திரைவதைகளும், கொலைகளும் பொலீஸ், இராணுவத்தினரின் பயங்கரவாதச் சம்பவங்களும் இவ்வுறுதி மொழிகளை ஏட்டுச் சுருக்காய்கள் ஆக்கிவிட்டன

சாதாரண குற்றவியல் சட்டத்தில் ஒருவரைக் கைது செய்தால் விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையங்களுக்கு மட்டுமே கொண்டு செல்லலாம். அப்படி விசாரணைகளுக்காக கொண்டு செல்லப்படுபவர்கள் 48 மணித்தியாலங்களுக்குள் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படல் வேண்டும். அவரின் விடுதலைக்கான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

## ஜனநாயகப் படுகொலை

அவசரகால விதிமுறைகளும் ப.க.சட்டமும் இந்நாட்டின் ஜனநாயக மரபுகளை படுகொலை செய்வதற்கும் பலாத்கார அடக்குமுறை கலாசாரத்தை நிலைநாட்டி மக்களை பயத்துடனும், பீதியுடனும் வாழ வைப்பதற்கு மட்டுமே உதவியிருக்கிறது.

இச்சட்டங்களின் அடிப்படையில்கைது செய்யப்படுபவர்கள் விசாரணைகளுக்காக எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லப்படுவதற்கும், கால வரையறையின்றியும் விசாரணைகளின்றியும் தடுத்து வைப்பதற்குமான அதிகாரங்களை வழங்குகின்றது. இதனால் கைது செய்யப்படுபவர்கள் மிகவும் கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

தடை செய்யப்பட்ட இயக்கங்கள் அல்லது அவ்வியக்கத்துடன் தொடர்புடையவர்கள் அல்லது செயற்பாடுகள் பற்றிய ஏதாவது தகவல்கள் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்கள் தாமாகவே அத்தகவல்களைப் பொலிஸாருக்கோ அல்லது பாதுகாப்புப் பிரிவினருக்கோ தெரிவித்தல் வேண்டும். அப்படித் தனக்குத் தெரிந்திருக்கும் தகவல்களை பொலிஸாருக்குத் தெரிவிக்காதவர்கள் ப.த .சட்டத்தின் அடிப்படையில் குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனைக்குட்படுத்தக் கூடிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தனிநபர்களின் மனசாட்சிக்கான உரிமையை மீறும் நடைமுறையாகும்.

இச்சட்டநடைமுறையிகளின் கீழ் சாதாரண சந்தேகங்கள் இன்றியே ஒருவரைத் தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாதாரண குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் ஒரு இடத்தைப் பரிசோதனை செய்ய வேண்டுமானால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறல் வேண்டும். ஆனால் ப.த.சட்டத்தின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரிக்கு நீதிமன்ற அனுமதி இன்றி எந்த ஒரு இடத்தையும் பரிசோதிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு அப்படி நீதிமன்ற அனுமதியின்றி பரிசோதனை செய்யப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும் எந்த ஒரு ஆவணமோ அல்லது தடையமோ சந்தேக நபருக்கெதிரான சாட்சியமாகப் பயன்படுத்த அதிகராம் வழங்கப்பட்டுள்ளது.

சாதாரண குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்படவிருப்பவர்கள் ஜுரிகளின் முன்னிலையில் ஆரம்ப விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் குற்றப்பத்திரம் கையளிக்கப்படும். ஆனால் இந்தச் சட்டங்களின் மூலமான வழக்குகள் ஜுரிகள் இல்லாமலேயே நடத்தப்படுகின்றன.

சாதராண நடைமுறைச்சட்டத்தின் அடிப்படையில் தடுப்புக்காவலில் உள்ள சந்தேக நபரிடமிருந்து பெறப்படும் வாக்கு மூலங்கள் அவருக்கெதிரான சாட்சியமாக பயன்படுத்தப்பட முடியாது. ஆனால் ப.த.சட்டத்தின் கீழ் மாதக்கணக்கில் தடுப்புக்காவலில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களிடமிருந்து சித்திரவதை போன்ற நடைமுறைகளினால் நிர்ப்பந்திக்கப்பட்டு பெறப்படுகின்ற வாக்குமூலங்கள் அவருக்கெதிரான சாட்சியமாக பயன்படுத்தப்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அவசரகால விதிமுறைகளின் கீழ் செய்தித் தணிக்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்தி ஆட்சியாளர்களும், அவர்களின் பாதுகாப்புப்படையினரும் செய்கின்ற அட்டூழிய சம்பவங்களை மூடி மறைப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நடைமுறையானது இந்நாட்டு மக்கள் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ளும் உரிமையை மீறும் செயலாகும். இதன் அடிப்படையில் இயக்கங்கள், அரசியல் கட்சிகள், பிரசுரங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை தடை செய்யவும், அச்சகங்களை மூடிவிடவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ப.த.சட்டமானது இன வெறியாதிக்கம் தலைவரித்தாடிய தென்னாபிரிக்க நாட்டில் நிலவிய ப.த. சட்டத்திற்கு சமனானது ஆகும். பிரித்தானியாவில் உள்ள சற்று மாறுபட்டதாகும். அங்கு வன்செயல்களை ஆதரிக்கின்ற ஒருவரை கைது செய்முடியாது. வன்செயல்களில் நேரடியாக ஈடுபடுபவர்களேயே கைது செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அப்படிக் கைது செய்தவர்களை வேலை நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தாமல் தடுத்து வைத்திருக்க அதிகாரம் கிடையாது.

ஆரம்பத்தில் பேரினவாத ஆதிக்கத்தை தமிழ் மக்கள்ளின் மீது இராணுவ வழிமுறைகளினால் நிலைநாட்டுவதை நியாயப்படுத்தவும் தமிழர்களுக்கு எதிரான இராணுவ அத்துமீறல் நடவடிக்கைகளுக்கும் வன்முறைகளுக்கும் சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதையுமே ஆரம்பக்கால நோக்கமாகக் கொண்டு ப.த.சட்டம் 1979இல் கொண்டு வரப்பட்டதுத. இந்தப் பேரினவாத இராணுவ அடக்குமுறைகளை தமது இனத்திற்கெதிரான சவாலாக ஏற்றுக்கொண்ட தமிழ் இளைஞர்களின் ஒருபகுதியினர் அதை முறியடிப்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். பொலிஸ் இராணுவ, அட்டூழியங்களும், தமிழர்களுக்கெதிராக அரசு மேற்கொண்ட கீழ்த்தரமான இனவாதப் பிரச்சார நடவடிக்கைகளும் இவற்றுக்கெதிரான தமிழிளைஞர்களின் தீவிரவாத இராணுவ செயற்பாடுகளும் ஒன்றுசேர்ந்து இந்த நாட்டில் யுத்தமனோநிலையை உச்சக்கட்டத்திற்கு வளர்த்துவிட்டிருக்கின்றது என்றால் தவறாகாது.

ப.த.சட்டமானது 1979இல் தமிழர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டதனால் பெரும்பான்மை சிங்கள மக்களின் வரவேற்பைப் பெற்றது. பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே இருந்த சில மனித உரிமை அமைப்புகள், இடதுசாரி சக்திகள் இனவாதத்தையும் அரசியல் வன்முறைகளையும் எதிர்க்கும் சக்திகள் மட்டுமே இந்நடைமுறையை எதிர்த்தன. ஆனால் நாளடைவில் தனது அடக்குமுறை நடவடிக்கைளை தென்னிலங்கைக்கும் விஸ்தரித்து தென்னிலங்கை ஒரு சுடுகாடாக மாற்றும் வரை தென்னில்ங்கை மக்களுக்கு இச்சட்டத்தின் பயங்கரமான தன்மை விளங்கியிருக்கவில்லை.

## இராணுவமயப்படுத்தல்

ப.த.சட்டஅரசியலின் மூலம் தேசிய இனங்களது உரிமைக்கோரிக்கையை நசுக்கிய பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதிலிருந்து நேரடி இராணுவ செயற்பாடு ஆரம்பிக்கத் தொடங்கியது. பொலிஸ் இலாகாக்களும் இராணுவ அமைப்புகளும் விரிவாக்கம் அடைந்தன. விசேட அதிரடிப் படை, கொமாண்டோப் படை போன்ற இராணுவ அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஊர்காவல் படை எனும் பெயரில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் அல்லாதவர்கள் தமிழருக்கெதிராக அரசினால் ஆயுதமயப்படுத்தப்பட்டார்கள். இப்படியாக திட்டமிட்ட அடிப்படையில் விஸ்தரிக்கப்பட்ட இராணுவ அமைப்புகள் பேரினவாத மயப்படுத்தப்பட்டு இவை தமிழினப் படுகொலைகளுக்கு வழிவகுத்தன. இராணுவவீரர்களை ''தேசத்தைப் பாதுகாப்பவர்கள்'' எனும் மாயையை ஏற்படுத்த அரசு முயன்றது. யுத்தத்னால் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த இராணுவவீரர்களுக்கு கணிசமான நஸ்டஈடுகளையும் சன்மானங்களையும் வழங்கி அவர்களை கௌரவிக்கிறது அரசு.ஆத னால் இராணுவத்தினரின் செயற்பாடுகளினால் கொல்லப்படும் அப்பாவி மக்களுக்கு ஏது வித நஷ்ட ஈடும் கிடைப்பதில்லை. ''பயங்கரவாதிகள்'' என்ற பட்டம் மட்டும் தான் சூட்டப்படுகிறது.

இவ்வகையில் பாதுகாப்புப்படையினருக்கு பல்வேறு பாதுகாப்புகளை உறுதி செய்து இந்த இனவாத யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல சாதகமான சூழ்நிலையை அரசு உருவாக்கிக் கொண்டது.

## தென்னிலங்கையில் அடக்கு முறைகள்

இந்த இனவாத யுத்தத்தின் மூலம் அரசு நடைமுறைப்படுத்திய அடக்குமுறைச் சட்டங்கள் நாளடைவில் தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக நடைமுறைகளைச் சீர்குலைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. 1980ம் ஆண்டு ரூபா 300/= சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்குவதற்கும், தொழிலாளர்களின் ஜனநாயகப் போராட்ட மார்க்கமான வேலைநிறுத்தங்களைத் தடை செய்வதற்கும் பத்திரிகைச் செய்திகளை தணிக்கை செய்வதற்கும், எதிரணி அரசியல் அமைப்புகளைத் தடை செய்வதற்கும் பிரசுரங்களைத் தடை செய்வதற்கும் எதிரணி தொழிற் சங்க அமைப்புகளைச் சீர்குலைப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டன.

ஐ.தே.கட்சி அரசின் சமூகப் பொருளாதார நடைமுறைகளின் விளைவாக விரக்திக்காளாக்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான ஜனநாயக வழிமுறைகள் இல்லாமையினால் ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைமையின் கீழ் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினார்கள். இச்சந்தர்ப்பத்தைச் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஐ.தே.கட்சியினர் இந்தச் சூழலை தமக்கு சாதமாகப் பயன்படுத்தி எதிரணி அரசியல்வாதிகளைக் கொலை செய்வதற்கும், மக்கள் மத்தியில் பீதியையும், பயத்தையும் ஏற்படுத்தி 60,000 மேலான இளைஞர்களை கொன்று குவித்தனர். றிச்சார்ட் டீ சொய்சா போன்ற பத்திரிகையாளர்களைக் கொன்றதோடு அக்கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட பொலிஸ் அதிகாரியைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தையே அவமதித்தது இவ்வரசு. இப்படியாகப் பல்வேறு கட்டங்களில் ஐ.தே.கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டதனால் அநீதிகளைப் புரிந்து நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் இனம் காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை பதவி உயர்வு செய்த. அவர்கள் செலுத்த வேண்டிய தண்டப் பணத்தை அரசாங்கம் செலுத்துவது போன்ற நடவடிக்கைகளின் மூலம் போலிஸ் இலாகாவை ஐ.தே.கட்சியின் அடக்குமுறை ஆயுதமாக மாற்றியது இவ்வரசு. இதற்கு அடிபணிந்து செயலாற்ற மறுப்பவர்களை யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு இடமாற்றம் செய்தது. இப்படியாக பல்வேறு நடைமுறைகளின் மூலம் ஜனநாயகம் சீர்குலைய வழிவகுத்தது இந்த 17வருட ஐ.தே.கட்சி ஆட்சி.

## தேர்தல் ஊழல்கள்

1977ம் ஆண்டு ஐ.தே.கட்சிக்கு இந்நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஒரு ஜனநாயகத் தேர்தலின் மூலம்தான் மக்கள் ஒப்படைத்தார்கள். அத்தேர்தலில் பல ஊழல்கள் இடம் பெற்றிருந்தாலும் அவை இத் தேர்தல் நடைமுறையில் இல்லாதவை அல்ல. ஆனால் அதன் பிறகு இந்தப் பதினேழு வருட ஆட்சிக் காலத்தில் இந்நாட்டு மக்களுக்கு நியாயமான தேர்தலை எதிர்நோக்க முடியாதளவு ஊழல்களையும் சீர்குலைப்பு நடவடிக்கைகளையும் ஏற்படுத்தியது இந்த அரசு.

1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்டசபைகளுக்கான தேர்தல்களைப் பிரதான எதிர்க்கடசிகள் பகிஷ்கரித்தன. யாழ்ப்பாண மாவட்டத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் சூறையாடப்பட்டன. யாழ் நூலகம் உட்பட பல முக்கியமான இடங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இத் தேர்தலை கண்காணிப்பதற்காக அரசின் இரு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் போதுதான் இச்சம்பவங்கள் நிகழ்ந்தது என்பதைக் குறிப்பிடல் வேண்டும்

1982ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் ஊழல் மலிந்த தேர்தலாகவே அமைந்தன. இத்தேர்தலில் சி.ல.சு. கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேக்கடுவ தனது வாக்கைப் பதிவு செய்வதற்காக வாக்குச் சாவடிக்கு சென்ற பொழுது அவரின் வாக்கு வேறு யாரினாலோ பதியப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இப்படிப் பட்டப்பகலிலேயே பலாத்காரத்தையும் ஊழல்களையும் மேற்கொண்டு ஜனநாயக மரபுகளை கேலிக்கூத்தாக்கிய பெருமை இவ்வரசையே சாரும்.

1982ம் ஆண்டு இம்மக்கள் பொதுத் தேர்லில் பங்குபற்றுவதற்கான உரிமை மறுக்கப்பட்டது. அபிப்பிராய வாக்கெடுப்பு என்னும் போர்வையில் ஊழல்களுக்கு இலக்கணம் படைத்த தேர்தலாக அமைந்தது. பாராளுமன்ற ஆயுட்காலத்தை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிப்பதற்கானதே இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு.

அதன் பிறகு நடைபெற்ற மாகாணசபைகளுக்கான தேர்தல்களும், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற தேர்தல்களும் பயத்திற்கும், பீதிக்கும் இடையில் அமைதியற்ற சூழ்நிலையில் நடைபெற்றதோடு இராணுவ, பொலிஸ் நிறுவனங்களினதும், அரசியல் வாதிகளின் ஆயுதபாணிகளினதும் உதவியுடனும் தனது வெற்றியை நிச்சயத்திற் கொண்டது ஐ.தே.கட்சியும், இ.தொ.காவும்.

இத்தேர்தல்கள் நடைபெற்ற விதம் தொடர்பாகவும் அவற்றின் ஊழல்கள் தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளரின் அறிக்கைகள் நிரூபிக்கும் விதத்தில் அமைந்திருந்தாலும் அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் அவருக்கு இல்லை.

## நீதிமன்றம்: அவமதிப்பு

பல்வேறு குற்றச்செயல்களை செய்தவர்களையும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட பல ஐ.தே.கட்சி ஆதரவாளர்களையும் தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து விடுதலை செய்துள்ளார் ஜனாதிபதி. இப்படியாக நீதிமன்றத் தீர்ப்புகளை அவமதிப்பது நீதிபதிகளுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு அவர்களின் வீடுகளுக்கு கல்லெறிவது அரசியல்ரீதியில் அவர்களைப் பழிவாங்குவது போன்ற செயல்களின் மூலம் நீதிமன்றச் சுதந்திரத்தை இல்லாதொழித்ததோடு குற்றவாளிகளையும் உற்சாகப்படுத்தும் விதத்தில் நிறைவேற்று அதிகாரங்களையும் பாவித்து வந்துள்ளது இவ்வரசு. இப்படியாக ஜனநாயக வரையறைகளை மீறக்கூடிய விதத்தில் தனது கட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விளைந்ததனால் இன்று ஜனநாயக நிறுவனங்கள் செயல் இழந்து நிற்கின்றன.

இலங்கையைப் போன்ற ஒரு பாராளுமன்றத் தேர்தல் ஜனநாயகம் நிலவுகின்ற நாட்டில் நீதியான ஆட்சி நிலைபெற பின்வருபவை பூர்த்தி செய்யப்பட வேண்டியவைகளாகும்.

1. அதிகாரத்தில் உள்ளவர்களின் செயற்பாடுகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்கும் கேள்விகள்க் கேட்பதற்குமான உரிமை மக்களுக்கு இருத்தல் வேண்டும். மக்கள் இவ்வுரிமையை பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலமோ அல்லது நீதிமன்றங்களின் மூலமோ நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. அரச நிர்வாகம் அரசியல் (ஆளும்) கட்சியின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரமாக்கப்பட்டு ஒரு அரச சேவையாணைக்குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
3. நீதிமன்ற சுதந்திரம் பாதுகாக்கப்படுவதோடு நீதி சேவை அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்குட்படாத சுதந்திர நிறுவனமாக அமைக்கப்படல் வேண்டும்.
4. மக்களின் அடிப்படை, மனித,ஜனநாயக உரிமைகள் மீறப்டாத வகையில் அவசரகால நிலைமைக்ள் நிர்வகிக்கப்பட வேண்டும்.
5. மனித உரிமைகள் சர்வதேச தரத்திற்கு சமமானவகையில் உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும்.
6. இலங்கைச் சமூகத்தில் காணப்படும் இன, மொழி, சமய, பிரதேச, கலாசார வேறுபாடுகளைப் பேணிப்பாதுகாக்கும் நடைமுறைகள் உறுதி செய்யப்பட்டு இந்த வேறுபாடுகளின் மூலமான ஒற்றுமையை (unity in diversity) ஏற்படுத்தக்கூடிய வகையில் பல்லினப் பாங்கான ஜனநாயக மரபுகளை நிலைநாட்டல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# யுத்தம் தான் எமது தீர்வு! — ஐ.தே.க. நியதபால

''சிறுபான்மையினர் அவர்களது உரிமைகளுக்காக போராடுவது தவறில்லை. அதற்கு ஆதரவான கருத்தை வெளியிடுபவர்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களும் இல்லை.

ஒகஸ்ட் 04ஆம் திகதி ரி.என்.எல் (TNL) தொலைக்காட்சி சேவையில் நடத்தப்பட்ட விவாதத்தின் போது பொது முன்னணியின் வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார மேற்படி கருத்தை வலியுறுத்திப் பேசினார்.

இவ்விவாதம் ஐ.தே.க. வேட்பாளர் ஜினதாச நியத்தபாலவிற்கும் நாணயக்காரவுக்கும் இடையில் இடம் பெற்றது. தலைப்பு ''தொடர்புசாதன சுதந்திரம்''. ஆனால் இவ்விவாதம் இடையில் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தொடவே, அதுவே இறுதிவரையான விவாதமாகத் தொடர்ந்தது. இருசாராரது விவாதங்களும் மாற்றுக்கருத்துக்களால் சூடு பிடித்தன.

இவ்விவாதத்தின் போது நியத்தபால வெளியிட்ட கருத்துக்களின் சாரம், ''இனப்பிரச்சினைக்குத் தீர்வு யுத்தம் மட்டுமே'' என்றும் ''வடக்கு கிழக்கு பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையே'' என்றும் '74 வீத சிங்களவர்களுக்கு துரோகமிழைக்க மாட்டோம்' என்பதுமே.

மறுபக்கம் வாசுதேவாவின் விவாதம், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசும் இனவாதிகளின் கருத்துகட்கு சாட்டையடியாக அமைந்தது.

அன்றைய விவாதத்தில் வாசு வெளியிட்ட கருத்துக்களை இப்போது சிங்கள இனவாதிகள் பொ.ஐ.மு.வுக்கு எதிராக தூக்கிப் பிடிக்க ஆரம்பித்துள்ளனர். அதாவது இக்கருத்துக்கள் பொ.ஐ.மு.வின் சார்பில் வெளியிட்ட கருத்துக்களே என்றும் ''பொ.ஐ.முவை ஆதரிப்பவர்கள் வடக்கு கிழக்கு இணைப்பையும் அது தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதையும் ஆதரிப்பவர்கள் ஆவர்'' என்று ஐ.தே.க.உட்பட சிங்கள மகாசபை, மக்கள் ஐக்கிய முன்னணி, சிங்கள மண்ணின் மைந்தர் கட்சி ஆகியன குரல் எழுப்பியுள்ளன. ''எனவே பொ.ஐ.முன்னணிக்கு வாக்களியாதீர்'' என்பதே இப்பிரச்சாரத்தின் முடிவுரையாகும்.

இதற்கு வாய்ப்பாக சிங்களப் பத்திரிகைகளும் தங்கள் பங்குக்கு மேற்படி விவாதத்தைப் பற்றிய பக்கசார்பான (சிங்கள பௌத்தத்தின்) விமர்சனத்தையும், சிங்கள இனவாதிகளான காமினி ஜெயசூரிய, நளின் டி சில்வா, தினேஷ் குணவர்த்தன போன்றோரின் கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன. இதற்கு சிறந்த உதாரணம் கடந்த ஞாயிறு (7.8.94) சிங்களப் பத்திரிகைகள்.

அதில் லேக் ஹவுஸ் பத்திரிகையான ''சிலுமின'' எனும் சிங்களப் பத்திரிகையில் அவ்விவாதத்தை பிரசுரிப்பதாக காட்டிக் கொண்டு வாசுவின் முக்கிய கருத்துக்களை கொட்டையெழுத்தில் பிரசுரித்துள்ளது. மறுபக்கம் நியதபாலவின் பேச்சிலுள்ள கருத்துக்களின் மூலம் சிங்கள மக்களுக்கு சார்பான வகையில் அவர் உள்ளார் என்பதைக் காட்டும் தொனியில் ஐக்கியம், ஒற்றையாட்சி என்பவற்றையும் கொட்டையெழுத்தில் அழுத்தி சிலுமின ''சில்மிஷம்'' செய்திருக்கிறது.

இவற்றை வாசிக்கும் எந்த சிங்கள வரிடத்திலும் இனவெறி தூண்டப்படும் விதத்தில் இவை செய்யப்பட்டுள்ளன. இவை வாசுவின் மீதும் பொ.ஐ.முவின் மீதும் ஆவேசம் ஏற்படுத்தும் என்பதிலும் ஐ.தே.கவை நியாயப்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை. அந்தளவுக்கு சிங்களப் பத்திரிகைகள் அண்மைக் காலங்களில் இனவாதத்திற்கு இடம் கொடுத்து வருகின்றன.

இதற்கிடையில் வாசுவின் கருத்தை தூக்கிப்பிடித்து பொ.ஐ.முவிற்கு எதிராக சிங்கள மக்களை திசை திருப்பி விடும் இனவாதிகளின் முயற்சி காரணமாக பொ.ஐ.மு அச்சம் கொண்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கின்றன.

கடந்தவாரம் சந்திரிகா வாசுதேவாவின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்றும், பொ.ஐ.முன்னணியின் கருத்து இல்லையென்றும், வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட அம்சங்களே இறுதியானவை என்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்குமாறும் பொ.ஐ.மு. செயலாளர் தர்மசிறி சேனநாயக்கவுக்கு அறிவித்தார்.

அதற்கிணங்க ஒகஸ்ட் 8ம் திகதி 'திவயின' பத்திரிகைக்கு பொ.ஐ.முவின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க விடுத்த அறிக்கையில் ''வாசுவின் கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்தே. பொ.ஐ.முவின் கருத்தல்ல'' என்றும் ''வடக்கு கிழக்கு இணைப்பை பொ.ஐ.மு அங்கீகரிக்கவில்லை'' என்றும் தெரிவித்துள்ளார்.

இன்னமும் பிரதான அரசியற் கட்சிகளின் ''அரசியலை'' தீர்மானிப்பது இனவாதம் தான் என்பதற்கு வேறென்ன சாட்சி வேண்டும்.

**நியதபால:** ஈழம் வாதிகள் இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஊர்வலம் நடத்தி நாட்டுக்கு எதிராக போராடுகிறார்கள். இந்தத் தேசத்துரோகிகளுக்கு ஐ.தே.க இடம் கொடாது.

**வாசு:** யூ.என்.பிக்கு எதிராக போராடுபவர்களை தேசத்துரோகிகளாக இனங்காட்டுவது யூ.என்.பி அரசாங்கத்துக்கு ஒன்றும் புதியதல்ல. தென் மாகாணத் தேர்தலில் இனவாதரீதியில் கொண்டு செல்லப்பட்ட பிரச்சாரங்கள் தோல்வியடைந்தன. இந்த யுத்தத்துக்கு வழி அமைத்து யுத்தத்தையும் இருப்பதைப் போல் நடக்க விட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று வழங்காமல் அவ்வினங்களின் உரிமைகளைக் கருத்தில் கொள்ளாமல் நடத்தப்பட்ட ஆட்சி காரணமாக நாடு பிளவுபட்டுள்ளது. எனவே ஐ.தே.கவையே தேசத் துரோகிகள் என நாங்கள் குற்றம் சாட்டுகிறோம்.



**நி:** தேசத்துரோகிகள் என மார்க்ஸ் வாதிகளையே குற்றம் சாட்ட வேண்டும். இந்நாட்டில் இதுவரை மார்க்ஸ்வாதிகள் நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையிலேயே தொழிற்பட்டுள்ளனர். நீங்கள் சண்டை பிடிப்பது 74% பெரும்பான்மை இனத்தின் உரிமைகளைக் காட்டிக் கொடுத்து சிறுபான்மை இனத்தின் ஆதரவைப் பெற்று அவர்களின் வாக்குகளின் மூலம் அரசாங்கத்தை புரட்டுவதற்கே! பெரும்பான்மை இனம் ஒரு போதும் இதற்கு இடம் கொடாது!

**வாசு:** இனங்களின் உரிமைகளை அங்கீகரிப்பதே மார்க்ஸிய நிலைப்பாடு. அன்று நவசமசமாஜக் கட்சி இரு மொழிகளும் பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் கூறிய போது ஐ.தே.க அதனை எதிர்த்தது. இந்நேரத்தில் திரு.பண்டார நாயக்கா சமஷ்டி முறையில் தேசிய சபையை உருவாக்குவதற்கு ஒப்புக் கொண்டு இப்பிரச்சினையை தீர்க்க முயன்றார். அதற்கு ஐ.தே.க எதிர்ப்பு தெரிவித்தது. இன்று அதன் பிரதிபலனாக எத்தனை உயிர்கள் எத்தனை பொருள் நாசமாகி விட்டன; ஓடுகின்றது இரத்த ஆறு.

**நி:** 24 மணி நேரத்தில் சிங்களம் தேசிய மொழியாக்கப்பட வேண்டும் என்ற போது இந்நாட்டின் பௌத்த மதகுருமார்கள் அதனை முழுமையாக எதிர்த்ததனால் தான் அந்தயோசனை கைவிடப்பட்டது.

**வாசு:** ஒரு இனம் தங்கள் பிரதேசத்தில் தங்கள் கலாசார விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுதந்திரத்தைக் கோருவது பிழையா?

**நி:** நீங்கள் நாட்டைப் பிரிப்பதற்கும் நாட்டை உடைப்பதற்கும் முயற்சி செய்கிறீர்கள்

**வாசு:** அவ்வசனங்களை 30 வருட காலமாகத்தான் கூறுகின்றீர்கள். அப்படிக் கூறப்பட்ட ஒவ்வொரு தடவையும் இரத்தம் கொட்டியது. மீண்டும் மீண்டும் யுத்தம் நடாத்தப்பட்டது.

**நி:** அவ் இரத்தத்தின் பின்னணியில் நாடு பிளவுபடும் நிலையே இருந்தது. இந்நாடு பிளவுபட மார்க்ஸிய வாதிகளே காரணம்.

**வாசு:** இந்நாட்டிற்கு துரோகம் இழைத்தவர்கள்* மார்க்ஸியவாதிகளா அல்லது தமிழினத்தின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளாமல் பிரச்சினையை விதையிட்டு வளர்த்த ஐ.தே.க முதலாளித்துவ ஆட்சியாளர்களா?

**நி:** இன்று ஒரு சிங்களவராவது வடக்கில் போய் வாழமுடியுமா?

**வாசு:** அது யுத்த நிலைமையினாலேயே.

**நி:** ஆனால் தமிழ் இனத்தவருக்கு தெற்கில் வாழ முடிகிறது.

**வாசு:** அது யுத்தம் இல்லாததனால்.

**நி:** யுத்தத்தை உருவாக்கியது நீங்கள் தானே.

**வாசு:** யுத்தம் உருவானது யாருடைய ஆட்சியில்?

**நி:** வடக்கில் இருந்த முஸ்லீம்கள் இப்போது அகதி முகாமில் இருக்கிறார்கள்.

**வாசு:** ஆம். அது இந்த யுத்தத்தினால்.

**நி:** யுத்தத்தினால் அல்ல புலிகளினால்.

**வாசு:** விரட்டியது புலிகளே.

**நி:** புலிகளுக்கு பாலூட்டியவர்கள் யார்?

**வாசு:** புலிகளுக்கு பாலூட்டியது ஒபரே ஹோட்டலில்.

**நி:** அதற்காகத்தான் சொல்கிறோம் இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டுமாயின் பயங்கரவாதிகளை அழிக்க வேண்டும்.

**வாசு:** பயங்கரவாதிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் இந்த 10 வருடங்களில் லட்சக்கணக்கான மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து உள்ளனர். யுத்தம் தீர்வு என்று தாங்கள் கூறுவதாய் இருந்தால் யுத்தம் தான் தீர்வு என்று மக்களுக்கு தெளிவாகக் கூறுங்கள்.

**நி:** யுத்தம் தான் தீர்வு என்று நான் கூறுகிறேன்.

**வாசு:** அப்படி என்றால் சர்வகட்சி யோசனை எதற்கு? யுத்தம் தான் தேவை என்று கூறுங்கள். சிறுபான்மை இனங்களின் உரிமை பற்றி பேசினால் சிங்களவருக்கு துரோகம் செய்வதாக கூறுகிறார்கள். எனக்கு இறுதியாக ஒன்று கூற வேண்டும். உங்கள் கட்சி; ஒன்றில் பிரச்சினைக்கான தீர்வைத் தர வேண்டும். அல்லது அம்மக்களின் யோசனையோடு உடன்பட வேண்டும். அல்லது தாங்கள் யுத்தத்தை தொடர்ந்து நடத்த வேண்டும்.

**நி:** இல்லை. இதனை சமாதானமாகச் செய்ய முடியும். இது ஐக்கிய இலங்கை.

**வாசு:** அதற்கு ஒருமித்த யோசனை தேவை. அப்படி ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டால் அது சிங்களவர்களுக்கு துரோகம் இழைப்பதாக கூறி விடுகிறீர்கள். அத்தோடு கதை முடிந்தது. மீண்டும் யுத்தமே. இன்று தேவையானது, தமிழ் முஸ்லீம் மக்களுக்கு வாழ்வதற்காக ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசத்தை வரையறுப்பதே. இதனால் சிங்கள மக்களுக்கு துரோகம் இழைப்பதாகாது.

## பொ.ஐ.முன்னணி மறுக்கின்ற வாசுவின் கருத்துக்கள் இவைதான்!

இவைதான் ஐ.தே.க ஜினதாச நியத்தபால, வாசுதேவ ஆகியோருக்கிடையில் நடந்த விவாதத்தின் முக்கியமான பகுதிகள்.

யூ.என்.பி. தான் யுத்தமே தீர்வு என்று கூறிவிட்டது. ஆனால், பொ.ஐ.முவோ? இதில் வாசு கூறியவற்றையே பொ.ஐ.முவின் கருத்துக்கள் அல்ல என்று சந்திரிகா மறுப்பதானால், அவர் மீது சிறுபான்மை மக்கள் நம்பிக்கை வைப்பது எந்த அடிப்படையில்?

பொ.ஐ.மு எவ்வளவு காலத்துக்குத்தான் இன்று எழுந்துள்ள பொய்யான மலினத்துவ செல்வாக்கை வைத்துக் கொண்டு சீவிக்கப் போகிறது?

தகவலும் மொழி பெயர்ப்பும்:
**என்.எஸ்.குமரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் வியூகம்:

# முஸ்லிம்களுக்கு எதையாவது பெற்றுத்தருமா?

பொதுமக்கள் முன்னணியுடன் முஸ்லீம் காங்கிரஸுக்கு ஏற்பட்டிருக்கின்ற அரசியல் உறவு, முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் பாதையில் ஒரு புரட்சி என கிழக்கு எங்கும் முழங்கப்படுகிறது. உண்மைதான். தேர்தல் வெற்றி என்பதை மட்டும் அடிப்படையாக வைத்துப் பார்த்தால் பொதுஜன முன்னணியுடன் ஏற்பட்டிருக்கிற கூட்டு முஸ்லீம் காங்கிரஸைப் பொறுத்தவரை ஒரு புரட்சிதான். 1980களின் கடைசிப் பகுதியில் முஸ்லீம் காங்கிரஸுக்கு இலங்கை எங்கும் கிடைத்த மாபெரும் ஆதரவு படிப்படியே வீழ்ச்சியடைந்து அதன் உண்மையான பிறப்பிடமான கிழக்கு மாகாணத்திற்குள் மட்டுமாவது உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை அதன் தலைமைக்கு ஏற்படுத்தியது. இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைமைக்கு பொதுஜன முன்னணியுடன் ஏற்பட்டிருக்கின்ற கூட்டு இப்போது சாதகமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுஜன முன்னணியுடனான கூட்டு ஏற்படுவதற்கு முன்பு கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில் மட்டுமே ஒரேயொரு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான வாய்ப்பு முஸ்லீம் காங்கிரஸுக்கு இருந்தது. மட்டக்களப்பிலே சென்ற பொதுத் தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸுக்கு கிடைத்த அரசியல் பிரதிநிதித்துவத்தை சுழற்சி முறையில் வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இம்முறை முஸ்லீம் காங்கிரஸ் அந்த ஒரு பிரதிநிதித்துவத்தையாவது மீண்டும் பெறுவது கடினமாக இருந்தது. (அண்மைய பிரதேச சபைத் தேர்தலில் ஏறாவூரிலும், வாழைச்சேனையிலும் முஸ்லீம் காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்வி இதை வெளிப்படுத்தியது.)

இந்த இக்கட்டான நிலையில் இருந்து இப்போது முஸ்லீம் காங்கிரஸ் தலைமை மீண்டுவிட்டது. பொதுஜன முன்னணியுடனான கூட்டு முன்னைய வெற்றிகளை மாத்திரம் உறுதிப்படுத்தவில்லை. புதிதாக, குறைந்தது மூன்று பிரதிநிதிகள் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெறுவதை உறுதிப்படுத்தியிருக்கின்றது. முஸ்லீம் காங்கிரஸுக்குரிய வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குரிய முஸ்லீம் வாக்குகளும், இம்முறை பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றி பெறலாம் என்பதால் அதற்கு ஆதரவாக மாறிக் கொண்டிருக்கின்ற இடைநிலை முஸ்லீம் வாக்குகளும் சேர்ந்து அம்பாறையில் 3, மட்டக்களப்பு 1, திருகோணமலை 1, என குறைந்தது மொத்தம் 5 உறுப்பினர்கள் கிழக்கிலிருந்து முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்படப் போவது சாத்தியமாகியுள்ளது. இதைவிட வன்னிமாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவமும் கிடைக்கலாம்.

இவ்வாறு ஒட்டுமொத்தமாக இந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை முஸ்லீம் காங்கிரஸ் பொதுமுன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதன் மூலம் மிகச் சாதகமான நிலையில் இருக்கின்றது. எனினும் ஒரு கட்சி தேர்தலில் சாதகமான நிலையில் இருப்பதும், அக்கட்சி பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் உரிமைகள் பெற்றுக் கொள்ளப்படுவதும் ஒரே விஷயமல்ல.

ஒரு கட்சியின் தேர்தல் வெற்றியானது, அக்கட்சி பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களினது அரசியல் உணர்வின் வெளிப்பாடாகவும், அம்மக்கள் கோருகின்ற உரிமைகளின் பிரதிபலிப்பாகவும் அமைகின்ற போதுதான் இத்தகைய வெற்றியானது சமூகத்தாக்கம் உடையதாக மாறுகின்றது.எவரோடு கூட்டுச் சேர்ந்து எவரை விழுத்தினால் இலாபம் பெறலாம் எனக்கணித்து காய் நகர்த்தும் வியாபார அரசியலானது நீண்ட காலம் பயனளிக்கப் போவதில்லை. குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் தேசிய உணர்வுகளை விலையாகக் கொடுத்து பிழைப்பு நடாத்தும் அரசியல்வாதிகளை அந்தச் சமூகம் நீண்ட காலம் சகித்துக் கொள்ளாது. இந்த அடிப்படையில் முஸ்லீம் காங்கிரஸின் பொதுத் தேர்தல் முன்னெடுப்புக்கள் வடகிழக்கு முஸ்லீம்களால் கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டியதாகிறது

**பொதுஜன முன்னணியுடனான கூட்டும் வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளும்:**

முஸ்லீம் காங்கிரஸுக்கும், பொது ஜன முன்னணிக்கும் இடையில் ஏற்



பட்டிருக்கின்ற தேர்தல் கூட்டின் அடிப்படை என்ன? இத்தகைய தேர்தல் கூட்டின் அரசியல் இலக்குகள் எவை? இந்த அரசியல் கூட்டினால் வடகிழக்கு முஸ்லீம்கள் தமது அரசியல் உரிமைகளை எவ்விதம் பெற்றுக் கொள்ள முடியும்? என்பன போன்ற முக்கிய விடயங்கள் குறித்து முஸ்லீம் காங்கிரஸ் தலைமை இதுவரைக்கும் தெளிவான, உத்தியோகபூர்வமான விளக்கங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. பதிலாக, முஸ்லீம் காங்கிரஸின தனித்துவத்தை பொதுஜன முன்னணி ஏற்றுக் கொண்டிருக்கிறது. என்பதனைத் தான் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை ஆரவாரமாக பிரச்சாரப்படுத்தி வருகிறது. ஆனால் முஸ்லீம் காங்கிரஸின் தனித்துவத்தை அங்கீகரிப்பதால் மட்டும் வடகிழக்கு முஸ்லீம்கள் தமது அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வது சாத்தியப்படப் போவதில்லை. இதற்கு முன்னரும் கூட, மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் முஸ்லீம் காங்கிரஸின் தனித்



துவத்தை அங்கீகரித்திருந்தார். எனினும் அந்த அங்கீகாரத்தின் மூலம் வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஒரு சமூகத்தை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு கட்சி அந்தச் சமூகத்தின் உரிமைகளை தனது அரசியல் முழக்கமாக முன்வைத்துச் செயல்படுகின்ற கட்சி, அந்த சமூகத்தின் முன்னிலையில் பகிரங்கமாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டியது அவசியமானது. குறிப்பாக அந்த சமூகம் சார்ந்த ஏனைய கட்சிகளுடன் உடன்பாட்டிற்கு வரும்போது , இந்தப் பகிரங்கத்தன்மை மிக அவசியமாகின்றது. இவ்வாறு பகிரங்கமாக இருப்பதன் மூலம்தான் தமது நலன்களையும் அபிலாஷைகளையும் அந்தக் கட்சி எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை அந்தச் சமூகம் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு புரிந்து கொள்வதன் மூலமாகத் தான் அந்த சமூகத்தின் அரசியல் உணர்வுகள் அதிகரிக்கவும், தமது அரசியல் இலக்குகளை நோக்கி அவர்கள் உறுதியாகச் செயற்படவும் முடியும். தனது நலன்களை பிரதிபலிக்கின்ற உடன்பாட்டை வெற்றி பெறச் செய்வதற்காக தனது முழு ஆதரவையும் வழங்குவதற்கு அந்தச் சமூகம் தயாராக இருக்கும். உடன்பாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தும்படி மற்றக் கட்சிகளை நிர்ப்பந்திக்கவும் அவர்களால் முடியும். அவ்வாறு மற்றக் கட்சி ஒப்பந்தத்திலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தாத நிலையில், மாற்று வழிகளை நாடவும், புதிய பாதையில் தனது அரசியல் இலக்கு நோக்கி முன்னேறவும் அந்தச் சமூகம் உந்தப்படுவது சாத்தியமாகும்.

இதற்கு மாறாக, இரு கட்சிகளுக்கிடையே ஏற்படுகின்ற உடன்பாடுகள், மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படாமல் இருக்கும் போது அந்த உடன்பாடானது இரு நபர்களுக்கிடையிலான ஒப்பந்தமாக குறுகிவிடுகின்றது. இது குறித்து மக்கள் ஒன்றும் அறியாதிருப்பதால் அந்த ஒப்பந்தமானது மற்றக் கட்சியால் மீறப்படுகின்ற போது அல்லது நடைமுறைப்படுத்தப்படாது இருக்கின்ற போது அதற்கு எதிராக பாதிப்புகுள்ளாகின்ற சமூகத்தால் எதுவும் செய்யமுடிவதில்லை. அவர்கள் இந்த ஒப்பந்தம் குறித்தும், அதற்கு ஏற்படுகின்ற முடிவு குறித்தும் வெறும் பார்வையாளர்களாகவே இருந்து விடுகிறார்கள்.

கடந்த காலங்களில் முஸ்லீம் காங்கிரஸ் தலைமையினால் வெவ்வேறு கட்சிகளுடன் எற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், வடகிழக்கு முஸ்லீம்களுக்குத் தெளிவான முறையில் பகிரங்கப்படுத்தப்படாத காரணத்தால் அவற்றுக்கு ஏற்பட்ட முடிவுகள் குறித்து வடகிழக்கு முஸ்லீம்கள் எவ்வித பிரதிபலிப்புகளையும் காண்பிக்கவில்லை. வடகிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தங்கள் முஸ்லீம் காங்கிரஸ் தலைவருக்கும், வேறு கட்சிகளின் தலைவருக்கும் இடையே ஏற்பட்ட உறவாக, தனிமனிதச் சாகசச் செயல்களாகவே காட்டப்பட்டதால் அவற்றுக்கு ஏற்பட்ட முடிவுகளும், இந்த இரு தனிநபர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளின் விளைவுகளாகவே காட்டப்பட்டன. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜனநாயக மக்கள் முன்னணிக்கும்(D.P.A.), முஸ்லீம் காங்கிரஸ் தலைமைக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடுகளும், முறிவுகளும் இவ்விதம் தனிமனிதச் செயல்களாக காட்டப்பட்டன. 'வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களுக்கென மூன்று தனித்தனி அரசியல் அலகுகளாகப் பிரித்தல்' என்ற மிக முக்கியமான விடயத்தை இந்தக் கூட்டுக் கொண்டிருந்தும் கூட அதுகுறித்து எவ்வித அக்கறையும் கொள்ளாத ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரின் தனிப்பட்ட முரண்பாடுகள் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நேரத்தில் எற்பட்ட இழுபறி.... என அரசியல் ரீதியில் முக்கியத்துவமற்ற காரணங்களைக் கூறி அந்தக் கூட்டிலிருந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் விலகிக் கொண்டார். (இப்போது பொதுஜன முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலையில் முன்பு ஜனநாயக மக்கள் முன்னணி கூட்டு உடைவதற்கு ஹலீம் இஷாக் என்ற தனிநபர்தான் காரணம் என்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் கூறுகின்றார்.)

இதன்பின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருடன் ஏற்பட்ட உடன்பாடும் கூட வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் எதிர்காலம் குறித்ததாக அமையாமல் 'வடகிழக்கு முஸ்லீம்களுக்கு இரண்டாந்தர முக்கியத்துவமுடையதான வெட்டுப்புள்ளியைக் குறைப்பது சம்பந்தமாகவும், பிரேமதாசாவின் தனிமனித புகழ்மிக்கதாகவுமே அமைந்தது. இவற்றைவிட தமிழ் கட்சிகளுடனும், தொண்டமானுடனும் எற்பட்ட உடன்பாடுகளும் கூட வடகிழக்கு முஸ்லீம்களிடம் பகிரங்கமாகவே வெளிப்படுத்தப்படாமல், மூடப்பட்ட நிலையிலேயே ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு வடகிழக்கு முஸ்லீம்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் முறிவடைந்த போது அவை குறித்து கடந்த காலங்களில் அவர்கள் எவ்வித உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கவில்லை.

இவ்வாறு வடகிழக்கு முஸ்லீம்கள் சார்பாக ஏனைய கட்சிகளுடன் ஏற்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்கள் குறித்தும், அதற்கு ஏற்படுகின்ற முடிவுகள் குறித்தும் அந்த முஸ்லீம்கள் அக்கறையின்றி இருக்கிறார்கள் என்பதை பயன்படுத்திக் கொள்ள முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் தொடர்ந்தும் முயற்சிக்கின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஒரு சமூகத்தின் அரசியல் உரிமைகளை பகடைக் காய்களாக வைத்து முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் நடத்துகின்ற இந்த அரசியல் விளையாட்டு எப்போதும் அவருக்கு வெற்றியளிக்க மாட்டாது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லீம் காங்கிரஸ் தலைவரின் இத்தகைய ஒப்பந்தங்கள், மற்றும் செயற்பாடுகள் குறித்து வடகிழக்கு முஸ்லீம்கள் தொடர்ந்தும் அக்கறையின்றி இருக்கப் போவதில்லை. தமது உரிமைகள் குறித்து வடகிழக்கு முஸ்லீம்கள் பெற்றுவருகின்ற உணர்வுபூர்வமான புரிதல்கள் விரைவில் முஸ்லீம் காங்கிரஸ் தலைவரின் இத்தகையஅரசியல் விளையாட்டுக்கு முடிவு கட்டுவதாக இருக்கும். அப்போது முஸ்லீம் காங்கிரஸ் தலைவருக்கு ஏற்படக் கூடிய தோல்வி அவரின் அரசியல் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக மாற்றிவிடும்.

**முஸ்லீம் காங்கிரஸும் சாணக அமரதுங்கவும்:**

யார் இந்த அமரதுங்க? இவருக்கும் முஸ்லீம் காங்கிரஸுக்கும் இடையே என்ன உறவு? முஸ்லீம் காங்கிரஸின் தேசியப் பட்டியலில்

→11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதற்காக இவருக்கு முதலாமிடம் வழங்கப்பட்டது? இந்தக் கேள்விகள் கிழக்கிலுள்ள சாதாரண முஸ்லீம்களிடத்தில் மட்டுமல்ல, தீவிர முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள், உறுப்பினர்களிடையே கூட குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையின் அரசியல் பாதையில் வெறும் கால் தூசுக்குக் கூட பெறுமதியற்றிருந்த சாணக அமரதுங்க ஒரு நிச்சயிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக முஸ்லீம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் மூலம் உருவாகியிருப்பது எப்படி? இந்தக் கேள்வி வடகிழக்கு முஸ்லீம்களால் எவ்வகையிலும் உதாசீனப்படுத்தப்பட முடியாதது.


சாணக்க அமரதுங்க

இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னால் சுற்றிக் கொண்டிருந்த சாணக அமரதுங்க இலங்கை அரசியலில் தனது லிபரலிசக் கொள்கையின் சிறு தடத்தைக் கூட பதிக்க முடியாதிருக்கின்ற ஒரு அரசியல் அநாதை. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் தனக்கு முதன்மை இடங்களில் ஒன்று வழங்கப்படும் என்று காத்திருந்து ஏமாற்றப்பட்டவர். இப்படிப்பட்ட ஒருவருக்கு தனது தேசியப் பட்டியலில் முதல் இடத்தை வழங்குவதற்கு என்ன அடிப்படையில் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை முடிவு செய்தது? வடகிழக்குக்கு வெளியே முஸ்லீம் காங்கிரஸ் தனது சொந்த சின்னத்தில் தேர்தலில் நிற்காததால் அதற்குக் கிடைக்கவிருக்கின்ற வாக்குகள் அனைத்தும் வடகிழக்கிலுள்ள முஸ்லீம்களின் வாக்குகளே. முற்றிலும் வடகிழக்கு முஸ்லீம்களின் வாக்குகள் மூலம் முஸ்லீம் காங்கிரஸுக்கு பெறப்படவிருக்கின்ற ஒரேயொரு தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவம் இந்த சாணக அமரதுங்கவுக்கு வழங்கப்படவிருப்பது இலேசாக ஒதுக்கித் தள்ளப்படக் கூடிய விடயமல்ல.

வடகிழக்கு முஸ்லீம்களின் வாக்குகள் வெறுமனே வாக்குச் சீட்டில் இடப்பட்ட புள்ளடிகள் அல்ல.

**மருதூர் பஷீத்**

அவை வடகிழக்கு முஸ்லீம்களின் உரிமைச் சாசனம்; தமது அரசியல் உரிமைகளைப் பற்றி ஏனைய சமூகங்களுக்கும், உலகத்திற்கும் எடுத்துக் கூறுகின்ற பிரகடனம். தமது நலன்களையும், அபிலாஷைகளையும் கோரி விடுக்கப்படுகின்ற சமூக அறிக்கை. இவை பென்சில்களால் அடையாளமிடப்பட்ட வெறும் காகிதத் துண்டுகள் அல்ல. இவை வடகிழக்கு முஸ்லீம்களின் தியாகங்களினதும், இழப்புக்களினதும் வெளியீடுகள். பேரினவாதக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் கிடைக்கக் கூடிய சில சலுகைகளையும் , எதிர்பார்ப்புக்களையும் உதறித்தள்ளி விட்ட சமூக அக்கறையின் பிரதிபலிப்புகள். தமது உயிர்களையும், உடைமைகளையும் இழந்து விட்டதனால் ஏற்படுகின்ற குமுறல்களின் வெளிப்பாடுகள். தமது பாரம்பரியக் காணிகள் பறிக்கப்பட்டதாலும், தமது சொந்த இடங்களில் இருந்து துரத்தப்பட்டதாலும் ஏற்பட்ட உணர்ச்சிக் கொதிப்புக்கள்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த முஸ்லீம்களின் தேர்தல் பிரதிநிதித்துவம், விசாலமற்ற ஒரு அரசியல் அநாதைக்கு வழங்கப்படுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாதது; ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது இவ்வாறு வழங்குவதற்கு முஸ்லீம் காங்கிரஸுக்கோ, அதன் தலைமைக்கோ எந்த உரிமையும் கிடையாது. முன்பும் ஒரு முறை இதே அரசியல் தவறு முஸ்லீம் காங்கிரஸ் தலைமையால் செய்யப்பட்டிருக்கிறது. முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் வரலாற்றில் நேரடிப் பங்களிப்பு எதையும் செய்யாமல் இடையில் வந்து புகுந்த அல்ஹாஜ் புஹாரீதீனை தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமித்ததன் மூலம் முஸ்லீம் காங்கிரஸ் இத்தகைய தவறைச் செய்தது. அதன் பலனை முஸ்லீம் காங்கிரஸ் அனுபவிக்க நேர்ந்ததோடு அவ்வாறு நியமித்தது தவறு என்றும் ஏற்றுக் கொண்டது. எனினும் வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் போராட்டத்துடன் எவ்விதத் தொடர்புமற்ற அவ்வாறு போராடுவதற்கான அவசியம் எதுவுமற்ற சாணக அமரதுங்கவை தேசியப்பட்டியலில் முதலாம் இடத்திற்கு நியமித்திருப்பதன் மூலம் முஸ்லீம் காங்கிரஸ் மீண்டும் ஒரு முறை அதே தவறைச் செய்திருக்கின்றது.

முஸ்லீம் காங்கிஸின் தேசியப் பட்டியல் உறுப்பினர் முற்றிலும் வடகிழக்கு முஸ்லீம்களின் வாக்குகளில் தெரிவு செய்யப்பட இருப்பவர். எனவே, அத்தகைய உறுப்பினராக வடகிழக்கு முஸ்லீம்களைச் சேர்ந்தவரே நியமிக்கப்பட வேண்டும். முக்கியமாக தாம் முஸ்லீம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கியதன் மூலம் தமக்குரிய வாய்ப்புக்களை இழந்திருக்கின்ற பிரதேசங்களைச் சேர்ந்தவருக்கே இத்தகைய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மூதூர் போன்ற இடங்களில் முஸ்லீம் காங்கிரஸ் சார்ந்த ஆதரவினால் அரசியல் கொதிநிலைக்குட்பட்டிருப்பவை. எனவே முஸ்லீம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் உறுப்பினராக இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பொருத்தமான,மீறமுடியாத ஒப்பந்தங்களின் மூலம் சுழற்சி முறையில் வழங்கப்பட வேண்டியதே சரியானது. நியாயமானது. இந்தவகையில் சாணக அமரதுங்கவை தேசியப் பட்டியலில் முதன்மை உறுப்பினராக நியமித்திருக்கின்ற முடிவை முஸ்லீம் காங்கிரஸ் தலைமை உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும்; மாற்றியமைக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் முஸ்லீம் காங்கிரஸுக்கு சாதகமாகவே காற்று வீசுகிறது. முன்னரை விட அதிகளவிலான பிரதிநிதிகள் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன. இந்நிலையில் இத்தகைய வெற்றியை கடந்த காலங்களை போன்று ஒரு தனி நபரின் அரசியல் சாணக்கியமாக வெளிப்படுத்துவது முஸ்லீம் காங்கிரஸுக்கு மட்டுமல்ல, வடகிழக்கு முஸ்லீம்களுக்கும் பாதகமாக அமையக் கூடியது. பொதுஜன முன்னணியுடன் என்னென்ன விடயங்களில் உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும், அவற்றினால் வடகிழக்கு முஸ்லீம்கள் தமது அரசியல் உரிமைகளை அடைவதற்கு எத்தகைய வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும் அம் முஸ்லீம்களின் முன்னிலையில் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை உடனடியாக முன்வைக்க வேண்டும். பொதுஜன முன்னணியுடனான ஒப்பந்தம் வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளின் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தால் அதை வெளிப்படுத்துவதில் எவ்வித தயக்கமும் தேவை இல்லை. அவ்வாறு வெளிப்படுத்துவதன் மூலம் தான் இந்தத் தேர்தலை, அந்த ஒப்பந்தத்திற்குரிய அங்கீகாரத்தை கோருகின்ற தேர்தலாக மாற்ற முடியும். இதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என வடகிழக்கு முஸ்லீம்கள், பொதுஜன முன்னணி அரசாங்கம் அமைகின்ற நிலையில் அதை நிர்ப்பந்திக்க முடியும்.

இதற்கு மாறாக இரு தனிநபர்களுக்கிடையே திரைமறைவில் நடந்த ஒப்பந்தமாகவே இது இரகசியமாகப் பேணப்படுமாயின் அது வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உரிமைகள் விடயத்தில் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை கடைப்பிடித்து வந்திருக்கின்ற நேர்மையற்ற நிலைப்பாடுகளின் தொடர்ச்சியாகவே கருதப்படும். முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் என்பது அஷ்ரப் அவர்களின் அந்தரங்க விவகாரம் அல்ல. இது முஸ்லீம் மக்களதும் அரசியல் எதிர்காலப் பிரச்சினையாகும். முஸ்லீம் காங்கிரஸின் அரசியலானது பகிரங்கமாகவும், ஜனநாயக பூர்வமாகவும் முன்னெடுக்கப்படும் போதுதான் அக்கட்சியானது முஸ்லீம் மக்களை நிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறிக் கொள்ள முடியும். வாழ்விற்கான அனைத்து ஆதாரங்களையும் இழந்து, அகதி என்ற முத்திரையுடன் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்ற வடக்கு முஸ்லீம்களும், நிலையற்ற எதிர் காலத்துடன் தமது சொந்த வாழ்விடங்களில் கூட மனத்தளவில் அகதிகளாக அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிழக்கு முஸ்லீம்களும் முஸ்லீம் காங்கிரஸின் தலைமையின் இத்தகைய அரசியல் நேர்மையீனத்தை, அரசியல் சுயநலத்தை தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது? தான் அரசியல் சுயநலத்திற்காகப் பலியாக்கப்படுவதை எந்தவொரு சமூகமும் தொடர்ச்சியாக அனுமதித்ததில்லை என்பதைத்தான் வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

# உறுதி மொழிகளின் சாகரம்!

**எமது சகோதரப் பத்திரிகையான யுக்தியவில் வெளியான ஆசிரிய தலையங்கம் இது!**

புறக் கோட்டை தனியார் பஸ் நிலையத்தில் அபூர்வமான பத்திரிகை வியாபாரமொன்று நடைபெறுகிறது. அங்குள்ள வியாபாரிகள் பத்திரிகைகளை இறாத்தல் கணக்கில் பழைய பத்திரிகைக் கடைகளிலிருந்து வாங்குகின்றனர். (இவை பழைய பத்திரிகைகள் தான் என்பதை அவற்றின் கரைகளில் பூசப்பட்டிருக்கும் சிவப்பு நிறச் சாயம் மூலம் இனம் காணலாம்) இவ்வாறு வாங்கிய இப்பத்திரிகைகளை ''மூன்று பத்து ரூபாய் மட்டுமே'' என்றும், அதில் இல்லாத விடயங்களை இருப்பதாகக் கூறியும் விற்று விடுவார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பஸ் வண்டியிலும் இப்பழைய பத்திரிகைகளை விலைக்கு வாங்கிப் பார்த்து, அவற்றின் பழைய திகதியைக் கண்டு, ஏமாந்து விட்டோமே என வெட்கப்பட்டு அப்பத்திரிகைகளை ஒழித்துவைக்கும் ஓரிரு பயணிகளைக் காணக்கிடைக்கும் காட்சி ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

இச்சிறுகதையைப் பிரித்தெடுத்து எழுதியது, கடந்த வார இறுதியில் ஐ.தே.கவும், பொதுஜன முன்னணியும் இந்நாட்டு மக்களுக்கு முன் வைத்துள்ள தேர்தல் உறுதி மொழிகள் பற்றிச் சில விடயங்களை எழுதுவதற்கு முன்னோடியாகவாகும்.

இம்முறை இந்த இரு கட்சிகளதும் உறுதிமொழிகளை வாசிக்கும் போது ஏற்கனவே குறிப்பிட்ட பழைய பத்திரிகைகளைப் புதிய பத்திரிகைகளாக விற்பதற்காக பொருத்தமற்ற சுலோகங்களை இழுத்துவிடும் புறக்கோட்டை வியாபாரிகள் தான் உடனடியாக ஞாபகத்துக்கு வருகிறார்கள்.

அந்தளவுக்கு இதில் உள்ளடக்கப்பட்டிருப்பவை அவ்வப்போது அதிகாரத்திற்கு வருவதற்காக திரும்பத் திரும்பக் கூறப்படும் புளித்துப் போன போலியான உறுதி மொழிகள் தான்.

விசேடமாக ஐ.தே.கவின் உறுதி மொழிகளை ' வாசிக்கையில் அமைச்சரவை அமைச்சர்கள் பற்றி எழுதியுள்ளவை புதுமையான விடயங்களாகக் காட்டப்படுகின்றன.

அது எவ்வாறெனில், அமைச்சர்களின் எண்ணிக்கையை 25ற்கு வரையறுக்கவும், உப அமைச்சர்களையும் அவ்வெண்ணிக்கைக்குள் மட்டுப்படுத்தவும் பிரேரித்திருப்பதன் ஊடாகவாகும்.

பாராமன்றத்தைக் கலைக்கும் வரை தொண்ணூறாவது அமைச்சரையும் நியமித்த விஜேதுங்க அரசே இவ்வாறு இந்நாட்டு மக்களுக்கு உறுதி மொழி வழங்கியிருக்கிறது. விஜேதுங்க அரசாங்கத்தின் உள்ளத்திலிருந்தல்ல வெறும் உதட்டிலிருந்தே இவ்வுறுதிமொழிகள் வெளிவருகின்றன என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றல்ல.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் வரை அமைச்சர் பதவிகளை புதிதாக உருவாக்கிக் கொண்டிருந்தது மட்டுமல்ல, தற்போது நடைபெற வுள்ள தேர்தலிலும் அவ்வமைச்சர் பதவிகளுக்கு அதிகார மகிமையையும் அனுமதித்தபடி உள்ளது ஐ.தே.க அரசு.

ஐ.தே.க.அதிகாரத்திற்கு வந்தால் அமைச்சர்களின் எண்ணிக்கையை 25ஆகக் குறைப்பதற்கு எவ்வித தடையும் இருக்கப் போவதில்லை. ஆனால் புதிது புதிதாக ஏதாவது அமைச்சர்களை உருவாக்கி அனைத்து பா.உறுப்பினர்களுக்கும் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கும் நோக்குள்ள ஐ.தே.க. இதனை ஒரு போதும் செய்யப் போவதில்லை. அதன் கடந்தகால வரலாறு எமக்கு இதனை நினைவுபடுத்தும்.

அமைச்சர்கள் பதவிகளுக்கு அடுத்து ஊழல்கள், மோசடிகளை ஒழிக்க நிரந்தர ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாக இன்னொரு சிரிப்பை உண்டு பண்ணும் கதையொன்றை ஐ.தே.க. கூறுகிறது.

கேளுங்கள்! தமது அமைச்சர்கள் பலர் தோலுரித்துக் காட்டப்படலாம் என்ற அச்சத்தினால் இலஞ்ச ஆணையாளர் திணைக்களத்தைக் கூடத் தமது அரசியல் அதிகாரத்திற்கு அடிமைப்படுத்திய ஐ.தே. கட்சியே இதனைக் கூறுகிறது.

ஐ.தே.க. இந்நாட்டு மக்களை இவ்வளவு தூரம் இலேசாக ஏமாற்ற முயல்வது அவர்கள் என்ன முட்டாள்கள் என நினைத்துக் கொண்டா?

ஏனைய உறுதி மொழிகள் பற்றிக் கூடுதலாக எதுவும் கூறத் தேவையில்லை. 1977இல் எட்டு இறாத்தல் தானியம் வழங்குவதாகக் கூறிய ஜே.ஆரின் உறுதிமொழியும் 1989இல் அனைத்து ஏழை எளிய குடும்பங்களுக்கும் ரூபா 2500 படி வழங்குவதாகக் கூறிய பிரேமதாச அவர்களது உறுதிமொழியும் இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றன. 1977இல் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர். அரசாங்கம் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு மாதாந்தம் ரூபா ஐம்பது வழங்குவதாகக் கூறிய ஒழுக்கங்கெட்ட ஏமாற்றுப் பற்றி அறியாதவர் யாரேனும் உளரா?

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன? – பௌத்த அமைப்புகள்

# 'நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை'

— ஐ.தே.க
— பொ.ஐ.முன்னணி
— ம.ஐ.முன்னணி

தேர்தல் தினம் பிரகடனப்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் பிரதான கட்சிகள் மட்டுமன்றித் தேர்தலுக்காக தோன்றிய சிறிய கட்சிகள் வரை தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகப் பேயாய் அலைகின்றன. தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளைப் பற்றியும் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைகளைப் பற்றியும் போட்டிபோட்டுப் பிரச்சாரம் செய்து வருகின்றன. மறுபக்கம் சிங்கள மக்களிடம் அதற்கு மாறுபட்ட வகையில் 'சிங்களவர்க்கு விசுவாசம்' என்பதைப் பேணியும் வருகின்றன.

இந்நிலையில் கடந்த 07.07.94 அன்று இலங்கையிலுள்ள முக்கிய சிங்கள பௌத்த அமைப்புகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றிய பிரதான கட்சிகளின் கொள்கையை அறிவதற்காகக் கடிதம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அனுப்பி வைத்திருந்தன. அதற்கான பதிலையும் மேற்படி மூன்று கட்சிகளும் அனுப்பி வைத்திருந்தன. ஜூலை 26ம் திகதி 'திவயின' சிங்களப் பத்திரிகை அக்கடிதங்கள் அனைத்தையும் பிரசுரித்திருந்தது.

சிங்கள பௌத்த அமைப்புகளான மகாபோதி சங்கம், பௌத்த இளைஞர் சங்கம், அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம், ஆசிய பௌத்த சம்மேளனம், சிங்கள பாதுகாப்பு சபை, தர்மவிஜய மன்றம், சாசனசேவை, உலக பௌத்த பெண்கள் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து அனுப்பிய கடிதத்தின் சாரம் கீழ்வருமாறு:

''இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் இத்தேர்தலுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இன்று எல்லோரும் எதிர்கொள்ளும் முடிவில்லாத பிரச்சினையாக வடக்கு கிழக்கு பிரச்சினை உள்ளது. இது வடக்கு கிழக்குக்கு மட்டுமன்றி முழு இலங்கையையும் பாதிக்கும் ஒரு பிரச்சினை என்பதில் இருவேறு கருத்தில்லை. இதற்கான தீர்வுக்காக ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை மற்றும் அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் உட்பட பல முயற்சிகள் தோல்வி கண்டதற்கான காரணம் அந்த யோசனைகளை தமிழ் அரசியல் குழுக்கள் ஏற்றுக் கொள்ளாததே.

நாங்கள் அறிந்த வகையில் தமிழ் அரசியல் கட்சிகள் கோருவது வட கிழக்கு நிரந்தர இணைப்பையே. அதுமட்டுமன்றி இணைக்கப்படும் அப்பிரதேசத்திற்குள் சட்டம், நீதி, நிலம் மற்றும் மேலதிக உள் நடவடிக்கைகள் தொடர்பான சகல அதிகாரங்களும் அவர்களால் கேட்கப்படுகின்றன. நாங்கள் இதுவரை பல தடவைகள் இந்த கோரிக்கைகளில் உள்ள பாரதூரமான அம்சங்களைப் பற்றி அரசுக்கும் எதிர்கட்சிகளுக்கும் காரணங்களுடன் விளக்கியிருந்தோம்.

தேர்தலும் நெருங்கியதோடு தமிழ், முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறு அரசியல் கட்சிகள் ஐ.தே.கவுடனும் பொதுஜன முன்னணியிடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்ததாக அறிந்தோம். பிரதான அரசியல் கட்சிகள் சிறுபான்மையின கட்சிகளின் ஆதரவைக் கோரும்பட்சத்தில் சிறுபான்மைக்கட்சிகள் இதனை நல்ல 'சந்தர்ப்பமாகப் பயன்படுத்த எத்தனிப்பது நிச்சயம். தங்களது இனவிகிதாசாரத்துக்கு பொருத்தமற்ற வகையில் குறுமினவாத நோக்கத்தில் அதிக பயன்களை எதிர்பார்க்கும் அச்சிறுபான்மை கட்சிகளுடன் ஏனைய கட்சிகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளும் அதிலுள்ள அம்சங்களும் பெரும்பான்மையினருக்கு தெரியாமல் போகிறது. சிங்கள மக்களுக்கு எதிராக செய்து கொள்ளப்படும் இச்சந்தர்ப்பவாத உடன்படிக்கைகள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டால் சிங்கள வர்க்குள் சுதேச ஒருமைப்பாடு மற்றும் தேசத்தின் எதிர்காலம் பற்றியும் நியாயபூர்வமான அச்சம் தோன்றும்.

எனவே இம்முறை வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு! உங்களது ஆட்சியின் பிரதான தேர்தல் வாக்குறுதியாக இருப்பதால் கீழ்வரும் அம்சங்கள் தொடர்பாக உங்கள் கட்சியின் அரசியல் கொள்கை என்னவென்பதை அறிய விரும்புகிறோம்.

1) வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றி நீங்கள் முன்வைக்கும் தீர்வு ஸ்ரீலங்காவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் நீண்ட காலத்தடையை ஏற்படுத்துமா?

2) வடக்கு-கிழக்கு மாகாணத்தைத் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாக எவ்விதத்திலும் அங்கீகரிப்பீர்களா?

3) வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்படாமை, மற்றும் தேச நலன் கருதி அம்மாகாணங்களை பிரித்துவிடுவதை உறுதிப்படுத்த முடியுமா?

4) அரச நிலங்கள் பற்றிய சகல கொள்கைகளையும் அது தொடர்பான செயற்பாடுகளையும் மத்திய அரசாங்கத்தின் கடமையாக ஏற்றுக் கொள்வீர்களா?

5) நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதும் அதற்குப் பொறுப்பான முப்படை மற்றும் பொலிஸ் அத்தோடு சகல துறைமுகங்களும் விமானத்தளங்களும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்குமா?

மேற்படி பிரதான காரணங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்வு ஸ்ரீலங்காவின் சுயாதிபத்தியம் மற்றும் ஒருமைப்பாட்டையும் காப்பதற்கு உறுதுணை புரியும் என்பதை குறிப்பிட விரும்புகிறோம். இதுபற்றிய உங்களது நிலைப்பாட்டை குறுகிய காலத்திற்குள் அறிய ஸ்ரீ லங்கா சிங்கள மக்கள் அதிக அக்கறையுடன் இருக்கிறார்கள் என்பதை அறியத்தருகிறேன்.''

மேற்படி கடிதம் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு ஆச்சரியத்தைத் தரப் போவதில்லை. ஏனெனில் பௌத்த சிங்கள அமைப்புகள் இப்படித்தான் சொல்லிவரும். இத்தனை காலமும் இப்படித்தான் சொல்லி வந்தன. அவ்வமைப்புகளின் கருத்துக்கள் மாறுபட்டதில்லை.

ஆனால் இதற்கான பதிலை அனுப்பிய பிரதான கட்சிகளான ஐ.தே.க, பொ.முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் என்ன பதிலை அனுப்பி வைத்திருக்கின்றன எனப் பார்ப்போம்.









“வடக்கு- கிழக்கு இரு மாகாணங்களையும் நிரந்தரமாக இணைப்பதோ தேசிய அடிப்படையில் அப்பிரதேசங்களை ஒன்றாகக் கருதுவதோ எங்கள் கட்சியின் கொள்கையாக நாம் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. இதனை வெற்றிகரமாகச் செய்ய ஜனநாயக அரசியலுக்குத் திரும்பியுள்ள தமிழ்க் குழுக்கள் பலவற்றின் ஒத்துழைப்புக் கிடைத்து வருகிறது.”
- டி.பி.விஜேதுங்க

“தமிழ் அரசியல் குழுக்கள் வடக்கு கிழக்கு மாகாண இணைப்புப்பற்றி பல தடவைகள் கோரிய போதும் எங்கள் கட்சி அதற்கு உடன்பட முடியாது என்பதைத் தெரிவித்து விட்டோம். பொதுஜன முன்னணியின் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க கூட அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்.”
-ஸ்ரீமாவோ

“வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமே அல்ல”
-தினேஷ் குணவர்த்தன

- என்.சரவணன்

**மக்கள் ஐக்கிய முன்னணியின் பதில்:**

''வடக்கு கிழக்குப் பிரச்சினை முழுநாட்டுக்குமுரிய பிரச்சினை. இதற்குத் தீர்வாக கொண்டு வரப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை நாட்டை துண்டாடுவதற்கு அத்திவாரமிட்டது. இந்த உடன்படிக்கையின் மூலம் அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி இரு மாகாணங்களையும் இணைத்ததை துண்டிக்கக்கோரி நாங்கள் கடந்த ஏழு(7) வருடங்களாக பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் போராடி வருகிறோம்.

வடக்கு கிழக்கு மாகாணம் தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசம் அல்ல. வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு மாவட்ட மட்டத்தில் அபிவிருத்திச் சபைகளை அமைத்து அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த வேண்டும்.

மக்கள் ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை அது பலவருட காலமாக இனவாத கோஷத்தையே முன்வைத்து அரசியல் நடத்தி வருகிறது. அதன் கருத்து மாறுபட்டதில்லை. இம்முறைத் தேர்தலில் கூட ''பிரபாகரனின் தங்கைக்கு வாக்களிக்காதே'' (சந்திரிகாவை) என்பது அதன் பிரதான கோஷங்களில் ஒன்று.

**ஐ.தே.கட்சி சார்பில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் பதில்:**

''வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வுபற்றி முக்கிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டி

→13

www.tamilarangam.net



## நாங்கள்...

யதை நாங்கள் உணர்வதோடு அது தொடர்பானதும் எங்கள் கட்சியினதும் நிலைப்பாடு பின்வருமாறுள்ளது.

*** விடுதலைப்புலிகள் அமைப்பினை நிராயுதபாணியாக்குவதற்காக இதுவரை செய்யப்பட்ட நடவடிக்கைகள் தொடரும். அதில் மாற்றங்கள் இல்லை. கிழக்கு மாகாணத்தில் இதனை சாத்தியமாக்கியுள்ளோம்.**

*** வடக்கு கிழக்கு இருமாகாணங்களையும் நிரந்தரமாக இணைப்பதோ, தேசிய அடிப்படையில் அப்பிரதேசங்களை ஒன்றாகக் கருதுவதோ எங்கள் கட்சியின் கொள்கையாக ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. அதன்படி ஸ்ரீலங்கா முழுதும் முழு மக்களையும் அடக்கிய ஒற்றையாட்சி நாடு என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.**

**சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பதில்:**

**''தமிழ் அரசியல் குழுக்கள் வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு பற்றி பல தடவைகள் கோரியபோதும், எங்கள் கட்சி அதற்கு உடன்பட முடியாது என்பதை தெரிவித்து விட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவர் சந்திரிகா குமாரணதுங்க கூட அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்.**

**பொதுஜன முன்னணியின் கொள்கை நமது நாட்டுக்கோ இனத்துக்கோ ஒருபோதும் தீங்கிழைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''**

மேற்படி பதில் கூட சிங்கள பௌத்தர்களை ஆறுதல் படுத்தும் தமிழ் மக்களுக்கெதிரான பொ.முவின் கொள்கையை தெட்டத்தெளிவாக காட்டுகிறது. அவ்வாறாயின் வெளிமேடைகளில் ''இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு'' என தம்பட்டமடித்து கூறுவது வடக்கு கிழக்கு பிரிப்புத்தானா?



*** அரசின் நிலக் கொள்கை, நாட்டின் பாதுகாப்பு, சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல் மற்றும் சகல துறைமுகங்கள், விமானத்தளங்கள் எல்லாமே மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.**

*** இதனை வெற்றிகரமாகச் செய்ய இலங்கையில் ஜனநாயக அரசியலுக்கு திரும்பியுள்ள தமிழ் அரசியல் குழுக்கள் பலவற்றின் ஒத்துழைப்பு கிடைத்து வருகிறது.''**

மேற்படி பதிலின்படி ஐ.தே.க கடந்த காலங்களில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கையாண்ட அதே போர்முறை அத்தியாவசிய பொருள் தடை, அவசரகாலச் சட்ட அடக்குமுறைகள் என்பன போன்ற அணுகுமுறைகள் தொடரப் போகின்றன. அதில் எந்தவித மாற்றங்களும் இல்லை என ஜனாதிபதி கூறிவிட்டார்.

அது மட்டுமன்றி தமிழ் மக்களின் ஆகக்குறைந்தப்ட்சக் கோரிக்கையான நான்கம்சக் கோரிக்கையிலுள்ள வடகிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் ஒற்றையாட்சி நாடு என்றும் அறிவித்திருப்பது ''எதையும் கொடுத்து விடமாட்டோம்'' எனும் சிங்கள மக்களுக்கான ஆறுதல் கூறலே. மேலும் இந்த முடிவுகளுக்கு ஜனநாயக அரசியலுக்கு திரும்பிய தமிழ் அரசியல் குழுக்கள் ஒத்துழைக்கின்றனவாம்.

இத்தனைக்கு மேலும் தமிழ் முஸ்லீம் மக்களிடமோ ''பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு'' எனும் பம்மாத்து.

பொதுஜன முன்னணயின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இனப்பிரச்சினை பற்றி கூறும் போது ''சிங்கள பௌத்தர்களது உரிமைகளை உறுதி செய்து பாதுகாப்பு வழங்குவதோடு ஏனைய இனங்களின் உரிமைகளையும் பாதுகாப்போம். இனப்பிரச்சினைக்கு தீர்வாக புதிய அதிகார எல்லைகள் வகுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிங்கள பௌத்தர்களது' என்று தனித்துவப்படுத்தாமல் பொதுவாக 'சகலரது உரிமைகளும்' என பிரயோகிக்க முதுகெலும்பில்லாத அளவிற்கு, சிங்கள பௌத்த கருத்தியல் உணர்வுகளிலிருந்து விடுபட முடியாதவர்களாக பொதுஜன முன்னணியினர் உள்ளார்களெனில் தேர்தல் முடிவின் பின் இவர்கள் தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவார்கள் என்று என்ன நிச்சயம்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அதிகார எல்லைகள் மாற்றியமைக்கப்படும் என மொட்டையாக கூறியிருப்பதன் மூலம் எதனை விளங்கிக் கொள்வது? நாளை மாவட்ட சபைகளை கொடுத்து 'இது போதும்' எனக் கூறுவதற்கும் அவர்களால் முடியும். 1977 தேர்தலில் ஜே.ஆரும் இதைத்தானே சொன்னார். பின் 1982இல் மாவட்ட சபைகளைக் கொடுத்து ஏமாற்றவில்லையா?

பொதுஜன முவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ''இலங்கையில் அமைச்சர்கள் தொகை 90க்கும் மேற்பட்டது. இவ்வளவு அமைச்சர்களுக்கு செலவு செய்யும் பணத்தை அபிவிருத்திக்கு செலவிடலாம். இலங்கையை விட 145 மடங்கு பெரிய பரப்பையுடைய அமெரிக்காவில் கூட 20 அமைச்சர்களுக்கு மேல் இல்லையென்றும் பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகளை உதாரணம் காட்டியும் நீண்ட விளக்கமொன்றை கொடுத்து முக்கியத்துவம் கொடுத்துள்ள அளவிற்கு இலங்கையில் கூர்மையடைந்துள்ள பிரதான தேசிய பிரச்சினையாக உள்ள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மொட்டையாக 'புதிய அதிகார அலகு' என்று கூறி என்ன புதிய அதிகார அலகு என்பதை கூறாமல் மழுப்பி விட்டனர்.

சிறுபான்மையினரின் வாக்குக்காக வேண்டி நிரந்தரமான சிங்கள வாக்குகளை இழக்க இவர்கள் எப்போதும் தயாராக இல்லை. இறுதியில் கூட எந்தமக்களின் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது எனும் கேள்வி எழும் போது சிங்கள அபிலாசைகள் வென்றுவிடும்.

1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பினூடாக கொண்டு வரப்பட்ட 'விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை' யின் பின் சிறுபான்மையினரை புறக்கணித்து விட்டு, எந்தவொரு கட்சியும் வெல்ல முடியாது என்பதை கடந்த பல தேர்தல்கள் நிரூபித்து விட்டன. பெரும்பான்மையினரின் வாக்குகள் சரிசமமாக பிரிய; தமிழ், முஸ்லீம்களின் வாக்குகள் முடிவு செய் வாக்குகளாக (decision votes) இருந்து வருகின்றன.

இந்த நிலைமையினை புரிந்து கொண்ட பெரும்பான்மைக்கட்சிகள் இந்த 'முடிவு செய் வாக்குகளைப் பெறுவதற்காக கையாளும் தந்திரோபாயமே' இன்று போட்டி போட்டு தமிழ் முஸ்லீம் மக்களுக்கு வாரி வழங்கும் உத்தரவாதங்கள்.

கடந்த தேர்தல்களின் போது மேற்படி கட்சிகளால் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் நடைமுறையில் கையாளப்பட்டனவா? என்ற கேள்விக்கான பதிலைக் கொண்டு இவர்களது சந்தர்ப்பவாதத்தை விளங்கிக் கொள்ளலாம். இன்றும் இவர்களால் வழங்கப்படும் உத்தரவாதங்களை நாளை நிச்சயமாக நடைமுறைப்படுத்துவார்கள் என்று எவராலும் உறுதி கூற முடியுமா? இன்றைய உத்தரவாதங்களும் சந்தர்ப்பவாதமே! இல்லையென்று எவராலும் கூறமுடியுமா?

இந்நிலையில் இந்த இரு கட்சிகளோடும் தமிழ் குழுக்கள் கொண்டிருக்கும் உறவுகள் அக்கட்சிகள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியோடு ஈ.பி.டி.பியும் மற்றும் தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி (ரெலோ, ஈரோஸ், புளொட்) ஆகியனவும் பொது முன்னணிக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்பும் பகிரங்கமாக ஆதரவளித்து வருவதும் தங்களது இருப்பை நியாயப்படுத்திக் கொள்ளவே.

''பொது எதிரியை வீழ்த்துதல்'' என்ற பேரில் இன்னொரு பொது எதிரியைத் தான் மீண்டும் ஆட்சியில் இருத்தப் போகிறோம் என்பதை பகிரங்கமாகவே அவர்கள் கூறட்டுமே. இல்லையென்றால் தாங்கள் ஆதரிக்கும் கட்சி வைக்கப் போகும் எந்தத் தீர்வுக்கும் தாங்கள் உடன்படுகிறோம் எனப் பகிரங்கமாக அவர்கள் கூறட்டுமே.

# கதை விடுகிறார் விடுகிறார் கதை!

**சுரேஷின் ஆங்கிலப் பத்திரிகையாளருடனான நேர்காணல் பற்றி ஒரு அவதானியின் குறிப்புகள் :**



வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ள தீவுப் பகுதிகளில் தேர்தல் -ஒரு சுதந்திரமான தேர்தல் -நடாத்தும் எந்தவித நிலைமையும் கிடையாது என்று கூறும் ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஷ் பிரமேச்சந்திரன் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தாம் ஏன் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகிறோம் என்று பின்வருமாறு கொள்கை விளக்கமளித்துள்ளார்:

''யாழ் மாவட்டத்திற்கு பத்து ஆசனங்கள் உள்ளன. இந்தப் பத்து ஆசனங்களும் ஆயுதமேந்திய குழுக்களாலும், அரசாங்கத்தாலும் குறிவைக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில் நாம் பங்கு கொள்வதன் மூலமாக இந்த 'ஆயுதமேந்திய குழுக்கள்' வடமாகாணத்தில் என்ன செய்ய உள்ளன என்பதை அம்பலப்படுத்துவதே எமது நோக்கமாகும். மறுபுறத்தில், பல வருடங்களாக யாழ்ப்பாணம் போவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த எமக்கு இத் தேர்தல் யாழ்ப்பாணம் போவதற்கான வாய்ப்பைத் திறந்து விட்டுள்ளது. இப்போது, யாழ்ப்பாணத்தில் தேர்தலில் நிற்பவர்கள் என்ற முறையில் எமக்கு அங்கு செல்வதற்கு உரிமை இருக்கிறது. பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறுவதற்கு முயலுகின்றபோதே தொடர்பு சாதனங்களோ, பொது மக்களோ போக முடியாத இடங்களில் தேர்தல் எவ்வாறு நடைபெறப் போகிறது என்பதை நாம் மக்களுக்குத் தெரிவிப்போம். எமது பிரச்சாரத்தின் மூலமாக வடக்குக்கான ஒரு ஜன்னலை நாம் திறப்போம். நான் நினைக்கிறேன் அதில் நாம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம் என்று. தேர்தல் எப்படி நடக்கப்போகின்றது என்பது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.''

வழமையாக ஆங்கிலப் பத்திரிகையாளருக்கு தலையைச் சுற்றுகிறதாக நினைக்கும் அப்பாவித்தனமான தமிழ் அரசியல் வாதிகளின் சுத்தமான கதையளப்புத்தான் இது என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தாம் யாழ்ப்பாணம் போக முடியாமல் தடுக்கப்பட்டார் என்றும் இப்போது இத்தேர்தல் அவருக்கு அங்கு போக வாய்ப்புத் தந்துள்ளது என்றும் ஆங்கிலப் பத்திரிகைக்கு வாய் கூசாது புழுகுகிறார் சுரேஷ் பிரமச்சந்திரன். கடந்த ஐந்து வருட காலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது ஒரு தடவையாவது யாழ்ப்பாணம் போக தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அவர் பாராளுமன்றத்தில் கூடச் சொன்னதில்லை! இப்போது அவருக்கு இந்தத் தேர்தல் போகும் வாய்ப்பைத் தந்து விட்டதாம். அதுவும் எங்கு? தீவுப்பகுதிகளுக்கு மட்டுமா? அவரது சொந்த இயக்கம் வேர் கொண்டிருந்த, அவருட்பட அவரது தோழர்களையும் புலிகளிடமிருந்து பாதுகாத்து அனுப்பிய யாழ்குடாநாட்டுப் பகுதி மக்களிடம் அவர் போக வேண்டியதில்லையா?

இந்தியப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் கள்ளவோட் போட்டும், தேர்தலில் பிறகட்சிகள் பங்கு பற்றாமல் திட்டமிட்டு விரட்டியும் ( நியமனத்தினத்தன்று கச்சேரிக்கு போவோரிடமெல்லாம் காசு பறித்து உரப்பையுள் அடைத்தும் - எங்கே அவர்களில் யாராவது காசு கட்டி நியமனப்பத்திரம் தாக்கல் செய்துவிடுவார்களோ என்று அஞ்சியே இப்படிச் செய்தார்கள்.) கைப்பற்றிய மாகாணசபைத் தேர்தல் காலத்தில் அவர்கள் பார்த்த முகங்களை திரும்பப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லையா?

ஆம், அவர் யாழ்ப்பாணம் போகாமலே, இத்தேர்தல் மூலம் யாழ்ப்பாணம் போக வாய்ப்புக் கிடைத்ததாகச் சொல்கிறார். தீவுப்பகுதிகளைத் தான் யாழ்ப்பாணம் என்று அவர் சொல்வதானால் அவருக்கு என்ன தான் தடை இருந்தது அங்கு போக?

சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு மட்டுமல்ல, எல்லாத் தமிழ்க் கட்சிகளுக்கும் இது பொருந்தும். அக்கட்சிகளின் எல்லாத் தலைவர்களுக்கும் இது பொருந்தும்.

தேர்தலில் ஆறு லட்சம் வாக்காளர்களுக்கு பதில் ஆறாயிரம் பேர் வாக்களித்தால் என்ன, ஆறு பேர் வாக்களித்தால் என்ன, எமது தமிழ்க் கட்சிகளுக்கு அதுபற்றி அக்கறை இல்லை. ஆசனம் கிடைத்தால் போதும்!

அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.

அற்புதமான பதவி அல்லவா அது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "யாழ்ப்பாணத்தில் நியாயமான தேர்தல் நடைபெறுமானால் இப்போது தெரிவு செய்யப்படுபவர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டும்"



—ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி உப தலைவர்

கரவை கந்தசாமி

அறுபதுகளில் சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி மூலம் அரசியலுக்குள் நுழைந்த கரவை கந்தசாமி அவர்கள் எண்பதுகளில் ஈழ விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் பலவற்றுடன் உறவு கொண்டிருந்தார். மும்மொழி புலமைவாய்ந்த கரவை கந்தசாமி அவர்கள் சரிநிகருக்கு வழங்கிய பேட்டி

**ஆயுதமேந்திய மக்கள் விடுதலைப் போராட்டத்தின் ஊடாகவே தமிழ் மக்களின் விடுதலையை அடையமுடியும் என நம்பிய புளொட் இயக்கம் 1989ம் ஆண்டில் பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபட்டு உள்ளூராட்சி, பாராளுமன்றத் தேர்தலில் பங்கு பற்றிவருகிறது. ஆயின் இவ்வியக்கம் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை இழந்து விட்டதென கருதமுடியுமா?**

இதில் புளொட் இயக்கம் பற்றி நான் கருத்துக்கூற முடியாது. ஏனெனில் அவ்வியக்கத்தின் அரசியல் ஸ்தாபனமாகிய ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினாலேயே நான் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறேன். எனவே அது தொடர்பாகவே நான் பதில் கூற முடியும். நான் கடைப்பிடித்த அரசியல் சித்தாந்தத்தின்படி ஆயுதம் தூக்குவதோ சமாதான வழியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதோ சம்பந்தப்பட்டவர்களில் ஒருபகுதியினர் மாத்திரம் தீர்மானிக்க வேண்டிய விடயம் அல்ல. இருபகுதியினருமே தீர்மானிக்க வேண்டிய விடயம்.

தமிழ் மக்களின் கடந்த கால தலைமைகள் மேற்கொண்ட சாத்வீகப் போராட்டங்கள் ஆயுதமேந்திய இராணுவத்தால் அடக்கியொடுக்கப்பட்டன. இதனால் விழிப்படைந்த இளைஞர்கள் சாத்வீகத்தை நிராகரித்து ஆயுத அரசியலை ஏற்றுக் கொண்டார்கள். தம்மேல் திணிக்கப்பட்ட வன்முறை அரசியலுக்கு எதிராகப் போராடினார்கள். அதன் மூலம் குறிப்பிட்ட சில உரிமைகளைப் பெற்றுக்கொண்டதுடன் சட்டரீதியான மாற்றங்களையும் கொண்டு வந்தனர். இன்றைய நிலையில் ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைக்குழுக்கள் தம்மிடையே மோதிக்கொண்டார்கள். இவர்களிடையே தெளிவான அரசியல் நோக்கு இருக்கவில்லை. அதனால் தம்மிடையே ஏற்பட்ட முரண்பாடுகளை தோழமை மனப்பான்மையுடன் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. மறுபுறம் அடுக்குமுறையை திணிக்க முற்படும் அரசாங்கம் தன்னைத் தொடர்ந்தும் வளர்த்து வருகின்ற நிலையில் தமிழ் அமைப்புகள் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளை விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் வேண்டியுள்ளது. அதற்காக ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றுதல் தவறில்லை என்றே நம்புகின்றேன்.

ஆனால் எந்தக் கட்டத்தில் எவ்வாறான சூழ்நிலையில் இவ்வழிமுறைகளைக் கடைப்பிடிக்கிறோம் என்பதுவே பிரதானமானது. ஆகவே இன்றைய நிலையில் ஜனநாயக வழிக்கு திரும்பிய தமிழ் விடுதலை இயக்கங்கள் தமது இலட்சியத்தை கைவிடாது, விலை பே சாது, உறுதியாகவும் தெளிவாகவும் செயற்படுவார்களேயானால் ஜனநாயக வழிமுறையினூடு பாராளுமன்றத்தையும் கருவியாகப் பயன்படுத்துவதில் தவறில்லை.

**அவ்வாறாயின் ஒரு காலத்தில் முன்னணி சக்தியாக விளங்கிய சண்முகதாசன் தலைமையிலான, கம்யூனிஸ்ட் கட்சியில் நீங்களும் அங்கம் வகித்ததாக அறிகிறோம். பாராளுமன்ற அரசியலை நிராகரித்து புரட்சிகர அரசியலை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பாசறையில் வளர்ந்த நீங்கள் இன்று பாராளுமன்ற தேர்தல் பிரவேசம் செய்திருப்பது எந்த வகையில் சரியானது என நம்புகிறீர்கள்?**

1960களில் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட விழிப்புணர்ச்சி சுரண்டுகிற அமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்ற மனப்பக்குவம் வளர்ச்சி பெற்ற காலகட்டத்தில் அதை முன்வைத்து செயற்பட்டது தவறல்ல. தத்துவார்த்தம் பிழையல்ல.

ஆனால் இந்நாட்டில் இடம்பெற்ற எதிர்ப்புரட்சிகர செயற்பாட்டின் காரணமாக புரட்சிகர சக்திகள் முற்றுமுழுதாக நாசமாக்கப்பட்டு பலவீனப்பட்ட நிலையில் ஆட்சியில் உள்ளவர்கள் முதலாளித்துவ ஜனநாயகப் போர்வையில் மிகக் கொடூரமான அடக்குமுறையை இராணுவப் பொலிஸ் பிரிவினூடாக மேற்கொள்கின்ற வேளையில் முதலாளித்துவ சக்திகள் ஏற்றுக்கொள்கின்றதான அதே ஜனநாயக பாரம்பரியத்தால் இயன்றவரை ஐக்கியப்பட்டு பாராளுமன்ற ஜனநாயகத்தினூடாக முன்னோக்கிச் செல்வது அவசியமாகின்றது. இம்முன்னோக்கிய நகர்வில் முதலாளித்துவ சக்திகளின் செயற்பாட்டைப் பொறுத்தே அடுத்த கட்டப் போராட்டம் அமையும். நாம் எதனையும் தீர்மானிப்பது அல்ல. அன்றைய கால கட்டத்தின் எதிர்விளைவுகளே தீர்மானிக்கின்றன. எனவே பாராளுமன்ற ஜனநாயக வழியினூடு தீர்வு கிடைத்தால் அதனை வரவேற்போம். ஆனால் எம்மைச் சுரண்டும் வர்க்கம் அதற்கு இடம் கொடுக்காது விட்டால் அதனை உடைத்தெறிவது தவிர்க்கமுடியாதது

**காலத்தின் தேவையே அன்றைய போக்கைத் தீர்மானிக்கும் எனக் குறிப்பிட்டீர்கள் ஆயின் கடந்த நாற்பதாண்டுகால பாராளுமன்ற அரசியலின் இயலாமையினால் விரக்திக்குள்ளான மக்கள் அடுத்த கட்ட நகர்வையே அதன் ஊடான தீர்வையே ஆதரிக்கிறார்கள். இந்த நிலையில் மீண்டும் பாராளுமன்ற பாதையை நாடி நிற்பது சரி என நம்புகிறீர்களா?**

77ம் ஆண்டிலும் அதற்குப் பின்பும் பாராளுமன்ற வழியை நாடியவர்கள் தனிநாட்டுக்கோரிக்கையை முன்வைத்து பாராளுமன்றம் சென்றாலும் ஈழப்போராட்டம் தொடர்பான தெளிவான நோக்கு இருக்கவில்லை. பரந்து பட்ட மக்களின் எழுச்சிகரமான போராட்டத்தை ஆதரிக்கவில்லை. மாறாக அவர்கள் தங்களின் வழமையான பாராளுமன்ற செயற்பாடுகளின் மூலமும் அதனையடையலாம் என்ற போலி நம்பிக்கையில் மக்களை ஏமாற்றி வந்தனர். அதன் காரணமாகவே இளைஞர்கள் அவர்களை நிராகரித்து புதிய பாதை அமைத்தார்கள். அதனால் ஏற்கனவே இருந்த நிலைமையை விட சட்டரீதியான அந்தஸ்துக்கள் தமிழருக்கு கிடைத்தது. கூடவே அரசதரப்பில் தீர்வுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு என ஏற்றுக் கொள்ளப்பட்டது. மறு புக்கம் ஆயுதரீதியான தமிழ்க் குழுக்கள் பலவீனப்பட்ட நிலையில் போராட்டத்தை கைவிடாத வேளையில் பேச்சுவார்த்தையினூடாக பாராளுமன்றத்தில் நிர்ப்பந்தத்தை கொடுப்பதன் மூலம் நல்ல முடிவை பெறமுடியும் என நம்புகிறேன்.

**1989ம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தலைமை தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டது என நம்புகிறீர்களா? ஆயின் அவர்களுக்கு பதிலாக ஆயுத அரசியலில் நம்பிக்கை வைத்து ஜனநாயக வழிக்கு திரும்பியவர்கள் தானே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். உங்களுடைய தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியில் உள்ளவர்கள் ஏற்கனவே பாராளுமன்றத்தில் இருந்துள்ளார்கள். அவர்களாலும் பாராளுமன்றத்திற்கு வெளியில் இருந்து தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகித்த உங்களாலும் எதனையுமே சாதிக்க முடியவில்லையே? இதற்கு அப்பாலும் இன்னுமொருமுறை பாராளுமன்றத்திற்கு செல்லவேண்டுமென நினைக்கிறீர்களா?**

1989ம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டமை வெளிப்படை உண்மை. அவர்களுக்குப் பதிலாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தமது கடமையை சரிவரச் செய்ய சந்தர்ப்பம் வழங்கவில்லை. அல்லது அவர்களால் இயலாமல் போய்விட்டது. காரணம் அவர்களிடம் காணப்பட்ட சிந்தனைத் தெளிவின்மை தவிர, வும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சில இயக்கங்கள் ஆயுதங்களை நம்பியிருந்தன. தவிர பரந்து பட்ட மக்களின் போராட்டக் குணாம்சங்களுக்கு முக்கியம் கொடுக்கவில்லை. அவ்வாறான இயக்கங்கள் பாராளுமன்றில் செயற்பட்டதில் தவறு இருக்கலாம்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பரந்துபட்ட மக்களின் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளேன். தென்பகுதி வாழ் மக்களுக்கான தெளிவான சிந்தனையை கொடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உணரவைக்க முடியும். 70ம் ஆண்டில் இருந்த நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் இடையில் நிரம்பிய வேறுபாடு உண்டு. தென்பகுதியில் இன்று பல்வேறு அமைப்புகள் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பிரிப்பில் நம்பிக்கை கொண்டுள்ளன. சிலர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் உள்ளனர். இம்மனமாற்றம் ஏற்கனவே நடத்தப்பட்ட போராட்டங்கள் ஊடாகவே ஏற்பட்டவை. எனவே தொடர்ந்தும் பாராளுமன்றத்தை தென்பகுதி மக்களுக்கும், உலகுக்கும் நமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவியாக பயன்படுத்தலாம் என்றே நம்புகிறேன். கடந்த காலத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்க் குழுக்களை சார்ந்தவர்கள் தவறு விட்டார்கள் என்பதற்காக எல்லோரும் தவறு விடுவார்கள் என்று கூறமுடியாது.

**தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி கூறினீர்கள். ஆனால் இதனை முற்றாக குழிதோண்டிப்புதைக்கும் 6வது திருத்தச் சட்டமூலத்தின் மூலம் சத்தியப் பிரமாணம் செய்தே பாராளுமன்றம் செல்ல வேண்டும். அவ்வாறாயின் நீங்கள் கூறிய சிங்கள முற்போக்கு சக்திகளே ஏற்றுக் கொண்ட சுயநிர்ணய உரிமையை நீங்கள் மறுப்பதாக அமையாதா?**

ஏற்கனவே இருக்கின்ற சட்டதிட்டங்களை ஏற்கமறுத்ததனாலேயே போராட புறப்பட்டேன். எனவே சத்தியப் பிரமாணம் எவ்வளவு தூரம் என்னை வலிந்து இறுக்கிக் கொள்ளும் என்பதை உணர்ந்து கொள்வதால் உள்ள சிந்தனைத் தெளிவே எனது செயற்பாட்டைத் தீர்மானிக்கும். ஆகவே சத்தியப் பிரமாணம் செய்து பாராளுமன்றம் செல்வது என்பது இதற்கு கட்டுப்பட்டே செல்கிறேன் என்பது அல்ல. பதிலாக இருக்கின்ற வரையறைக்குள் புகுந்து உடைத்தெறிவதே சிறப்பானதாகும்.

**ஏறத்தாழ ஆறு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட யாழ் மாவட்டத்தில் 6000 வாக்காளர்களே வாக்களிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்துவது மனித உரிமை மீறல் என அடிப்படை மனித உரிமைகள் இயக்கமும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவது அரசாங்கத்தின் ஜனநாயக மறுப்பிற்கு துணைபோவதாக அமையாதா?**

ஜனநாயகத்தினை முதலாளித்துவ ஜனநாயகம், மக்கள் ஜனநாயகம் என இரண்டாகவே நான் பிரித்துப் பார்க்கிறேன். இன்று நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு ஒரு சிலரின் தேவையை ஒட்டியே உருவாக்கப்பட்டது. ஆளும் வர்க்க நலன்களையே முதன்மைப் படுத்துவது. இந்த அரசியல் அமைப்பின் கீழ் நாம் அங்கு போட்டியிடாது விடுவோமேயானால் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கும் தீய சக்திகள் தெரிவு செய்யப்பட்டு விடுவர். எனவே தீய சக்திகளின் பாராளுமன்றப் பிரவேசத்தைத் தடுப்பதற்கும் அங்குள்ள பிரச்சினைகளை வெளியுலகிற்கு உணர்த்தவுமே நாம் போட்டியிடுகிறோம். தவிரவும் வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலை நடத்தக்கூடாது என நாமே முதலில் வலியுறுத்தினோம். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் முயன்றோம். ஆனால் தேர்தலை எப்படியாவது நடத்தி விடுவதில் அரசு விடாப்பிடியாக இருந்தது. அதனால் எமது சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் கட்சிகள் பாராளுமன்றில் பிரவேசிக்கக் கூடாது என்பதற்காகவே போட்டியிடுகிறோம்.

**தீய சக்திகளின் பாராளுமன்றப் பிரவேசத்தைத் தடுப்பதற்காகவே போட்டியிடுகிறோம் எனக் கூறினீர்கள் ஆயின் இது ஒரு ஜனநாயகப்பூர்வமற்ற தேர்தல் என நீங்கள் கருதமுடியாமா?**

இது விடயத்தில் தேர்தல் நடந்து முடிந்த பின்புதான் முதலாளித்துவ ஜனநாயக வரம்பிற்குள் தேர்தல் நடைபெற்றதா இல்லையா எனக் கூறமுடியும்? சாதாரணமாக இன்று இலங்கையில் மற்றைய பகுதிகளில் உள்ள நிலைமைகள் யாழ்ப்பாணப் பகுதியில் இல்லை. என்றாலும் தேர்தல் முடிந்த பின்பே அங்கு நடைபெற்ற தேர்தல் எவ்வாறு நடைபெற்றதென்றோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதன்றோ கூறமுடியும். அவ்வாறு இன்றி இப்போதே அதனை விமர்சிப்பது எமக்கு எதிராகச் செயற்படும் சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்து விடும். அதனால் இங்கு ஒன்றைமட்டும் என்னால் கூறமுடியும். தேர்தலில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் யாழ்ப்பாணப் பகுதியில் நியாயமான தேர்தல் நடைபெறும் சூழ்நிலை உருவாகினால் உடனடியாகவே அங்கு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்து புதிய தேர்தலுக்கு வழிவிடுவதுதான் ஜனநாயகபூர்வமானது.

-பரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ராஜினாமா...

ஈடுபட்டனர். கூட்டம் குழம்பிற்று. கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த ஜோசப்பும் மனைவியும் காரில் திரும்பும் போது காரைத்தீவில் கொம்புச் சந்தியில் வழிமறிக்கப் பட்டு யாழ்ப்பாணத்தவரான சேனாதியை ஏன் இங்கு தேர்தலில் நிறுத்தினார்கள் என்ற அடிப்படையில் மிக மோசமான வார்த்தைகளால் ஒரு குழு திட்டியதால் அவ்விடத்தில் சிலநேரம் களேபரம் உண்டாயிற்று. இது சம்பந்தப்பட்டவர்களில் பிரதானமானவர் அம்பாறை மாவட்ட சுயேட்சை வேட்பாளரும் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் ஆதரவைப் பெற்றவருமான கோபால கிருஷ்ணனின் சகோதரர் மதி (நில அளவையாளர்) என்பவர் ஆவார். கோபால கிருஷ்ணன் பிரதேச வாதத்தைத் தூண்டும் ஒரு பிரசுரத்தையும் கூட்டணிக்கு எதிராக வெளியிட்டு அந்தப் பாணியில் பிரச்சாரமும் செய்தும் வருகிறார். அதே வேளை இங்குள்ள ஈ.பி. ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் இவருடன் சேர்ந்து தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

காரைதீவில் ஊரவன் என்ற முறையிலும் திருக்கோவிலின் அயலிலுள்ள விநாயகப் புரத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது எம்.பி. நிதியில் ஒதுக்கீடு செய்து கட்ட உதவிய தாகக் கூறப்படும் பாடசாலை காரணமாகவும் வாக்குகள் பெறலாம் என கோபாலகிருஷ்ணன் எதிர் பார்ப்பது தெரிகிறது. அத்துடன் சென்ற பிரதேச சபைத் தேர்தலில் விசேட அதிரப்படையின் சார்பில் போட்டியிட்டு விசேட அதிரடிப்படையினால் வெல்லவைக்கப்பட்ட திருக்கோவில் பிரதேச சபைத் தலைவரும் (வயது18) கோபாலகிருஷ்ணனை ஆதரித்தே செயற்படுகிறார். அவரும் முன்னர் ஈ.பி.ஆர். எல்.எப் உறுப்பினரே.

கூட்டணி பாண்டிருப்பில் குறிப்பாகவும் ஏனைய பகுதிகளில் பரவலாக உள்ள ஆதரவு வேட்பாளர்களின் ஊர் செல்வாக்கு ஆகியவற்றையும் நம்பியே வேலை செய்கிறது. த.தே.ஒற்றுமை முன்னணியும் காரைதீவில், வீரமுனை, மல்லிகைத்தீவு, சொறிகல்முனை, மல்வத்தை போன்ற இடங்களில் புளொட்டுக்கு உள்ள செல்வாக்கையும் ஈரோஸுக்கு அக்கரைப்பற்றின் தமிழ்ப் பகுதி ஆலயடி வேம்பு ஆகிய இடங்களில் உள்ள செல்வாக்கினால் கணிசமான வாக்குகளைப் பெறும் நிலையில் உள்ளது. அம்பாறை மாவட்ட மொத்த வாக்காளர் தொகையில் 59 ஆயிரமே தமிழர். எனவே ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் இம்முறை தமிழருக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற பயமும் இங்கு படித்த வாக்காளர்கள் மத்தியில் காணப்படுகிறது. 1939 - 1949 வரையில் தர்மரெட்ணம் வன்னியனார் இந்த மாவட்டத்திற்கு (அப்போது மட்டு.தெற்கு) தனியொரு பிரதிநிதியாக இருந்ததன் பின் 1977வரை இங்கு எந்த ஒரு தமிழரும் பாராளுமன்றம் செல்லவில்லை என்பது வரலாறு.

## உறுதி...

இம்முறை வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அதனை விடப் பெரியவை. 18 முதல் 30 வயது வரையுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியும், ரூபா 1200 மாதாந்தக் கொடுப்பனவும் வழங்க ஐ.தே.க உறுதியளித்திருக்கிறது. 65வயதுக்குக் கூடிய ஓய்வூதியம் பெறாத எல்லோருக்கும் மாதாந்தம் ரூபா 500 வழங்குவதாக ஜனாதிபதி விஜேதுங்க அளித்த உறுதிமொழி பற்றி எதுவித கதையும் அதில் இல்லை. இவ் விளைஞர்களது கொடுப்பனவு தொடர்பான உறுதிமொழி எவ்வளவுதூரம் நயவஞ்சகம் நிறைந்தது என்பதனை எடுத்த எடுப்பிலேயே விளங்கிக் கொள்ள முடியாதவாறு அது சூத்திரமயமாக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில் குறைந்த கூலியில் இளைஞர்களது அதிகளவிலான உழைப்பை சுரண்டிக் கொள்ளும் ஐ.தே.கட்சியின் மோசடியான திட்டத்தினையே இதனுடைய மறு தலையாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றியும் சுவாரஸ்யம் நிறைந்த சொற்றொடர்கள் சில இவ் உறுதிமொழிகளுள் உள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன் கலைஞர்களின் சுயாதீன அமைப்பொன்றின் மீது தாக்குதல் நடாத்த தமது கட்சிக் குண்டர்களை ஏவிவிட்ட கட்சியே பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய உறுதிமொழிகளை வழங்கியுள்ளது என்பது நகைப்பிற்கிடமானதாக இல்லையா?

17 வருடங்களாக நிறைவேற்றாதவற்றை நிறைவேற்ற அது அதிகாரத்தைக் கோருவது தற்போது புத்தம் புதிய ஐ.தே.கவொன்று உருவாகியுள்ளதனாலா?

பார்வைக்கென்றால் எதுவித புதுமையும் இதில் இல்லை புதியது என்ற பேரில் புறக்கோட்டையில் கிடைக்கும் பழைய பத்திரிகை போலத் தான் இதுவும்.

உறுதிமொழிகள்! உறுதிமொழிகள்!! உறுதிமொழிகள்!!! கடந்த 17 வருடங்களாக இவற்றைச் செய்ய முடியாது போனது ஏன் என சும்மா வேனும் இந்த ஐ.தே.கவின் தேர்தல் உறுதி மொழிகளில் இல்லை. உண்மையிலேயே ஐ.தே.க கூற வேண்டியது அதனைத்தான். ஆனால் அது கூறாததும் அதனைத் தான்.

ஆனாலும் இப்பழைய பொருளைப் புதிய பொருளாக வாங்கத் தயாராகும் விசாலமான கூட்டத்தினர் இன்றும் உள்ளனர்.

ஆளும்கட்சி தொடர்பாக மட்டுமல்ல, தற்போதே வெற்றியின் அறிகுறி தெரியும் பொதுஜன முன்னணியின் உறுதி மொழிகள் பற்றியும் கூட கூறுவதற்கு, அதனை விடச் சிறந்த அம்சங்கள் எதனையும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுதிமொழிகளுக்குள் கண்டுபிடிக்க முடியவில்லை.

அது அதிகாரத்தில் இல்லாததனால் அதிர்ஷ்டவசமாக 'ஏன் இவற்றை நீங்கள் செய்யவில்லை' என்ற கேள்வியில் இருந்து தப்பித்து விட்டாலும், அவர்கள் கூறும் உரிமைகள் பற்றிப் பேச 'இதுவரை காலமும் எங்கே போயிருந்தீர்கள்' எனக் கேட்டேயாக வேண்டியிருக்கிறது.

மக்களுக்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்த கடந்த 17 வருட காலமாக எந்தவாறான செயற்பாட்டு வேலைத்திட்டத்தையும் கொண்டிருக்காத எதிர்க்கட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் தான் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும் என்று கூறாமலிருக்க முடியாது!

''பருப்பு மலிவு தேர்தல் வரை மட்டுமே'' என்று புறக்கோட்டை வியாபாரி கூறுவது இவ்வுறுதி மொழிகளுக்கும் பொருந்துமா? இல்லையா? என்ற கேள்வியை ஆழ்ந்து நோக்கும் எவரும் எழுப்பாமலிருக்க முடியாது.

உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுமாயின் ஓகஸ்ட் 16ம் திகதியின் பின் இலங்கை ஒரு புதிய சுவர்க்கமாக இதுவரை உல்லாசப் பிரயாணிகளுக்கு மட்டுமே திறந்திருந்த இந்தத் தேவலோகம் நாட்டு மக்களுக்குமாக திறந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வாறு இவ் உறுதி மொழிகள் நிறைவேற்றி வைக்கப்படுமானால் கடவுள் படங்களை பூஜை அறையில் மாட்டி வைத்து காலையும், மாலையும் சாம்பிராணி காட்டுவது போல இவ்வுறுதிப் பத்திரங்களையும் மாட்டி வைத்து சாம்பிராணி காட்டுவதற்கான அந்தஸ்தினை இவை பெற்றுவிடும் என்பதும் உண்மைதான்!

## சப்பைக்...

மைக்கும் என்பதை உணர்கிறீர்களா? அல்லது முன்னைநாள் பா.உறுப்பினர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள் செய்ததைப் போல பெரும்பான்மை இனத்திற்கு சாதகமான ஒரு திட்டத்தை தயாரித்து விட்டு - ''தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள்'' என்று சப்பைக்கட்டுக் கட்டி நிரந்தரமாக இருக்கலாம் என எண்ணுகிறீர்களா?

கொழும்பில் நல்ல தகுதியுள்ள இளம் தமிழர் தங்களைத்தவிர வேறுயாரையும் சந்திரிகாவினால் கண்டு பிடிக்க முடியாமற் போனதாக் கூறுவதை நாம் நம்ப வேண்டுமா?

ஏற்கனவே குமார் பொன்னம்பலத்தின் பட்டியலில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த திரு. இராஜரட்ணம் அவர்கள் வெளிநாடு சென்றிருந்ததால் பட்டியலில் இடம்பெற முடியாமற் போய்விட்டது என்று ஜுலை 21 இதழில் வந்த பகுதியை நீங்கள் மறுக்கவில்லை. நீங்கள் வெளிநாடு செல்லாதிருந்தால் அல்லது நேரகாலத்தோடு திரும்பியிருந்தால் பொன்னம்பலத்தின் பட்டியலில் இடம்பெற்றிருப்பீர்கள். அப்படி இடம்பெற்றிருந்தால் உங்கள் அறிக்கை எவ்வகையில் அமைந்திருக்கும்? ஒரு கட்சியில் இடம் கிடைக்காமல் வேறு கட்சிக்கு பாய்ந்தவர்கள் விடும் அறிக்கை தெரிந்தது தான்.

**கொழும்பில் அகதி வாழ்வு வாழும் தமிழ் வாக்காளன்.**

## நவ சமசமாஜக் கட்சி மறுக்கிறது!

சரிநிகர் விசேட இதழ் 1ன் 8ம் பக்கத்தில் திராவிட கழக இளஞ்செழியன் ''பிரதேச சபை தேர்தல்களின் போது நவசமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்'' எனக் கூறப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியானது, உண்மைக்குப் புறம்பானதால் அதனை நாம் மறுக்கிறோம்.

**வ.திருநாவுக்கரசு**
**அரசியல் குழு உறுப்பினர்**
**ந.ச.ச.கட்சி**

## இராச...

என்ன செய்கிறார் என்று என்னை வியப்புடன் கேட்டார். அதுதான் திருச்செல்வத்திற்கு தெரிந்த நேர்மை என நான் மனம் நொந்து சொன்னேன்.

இந்தச் சம்பாசணை உண்மை என்று நிரூபிக்க நான் இணுவில் இராசரத்தினம் கோரும் எந்த கிறிஸ்தவ ஆலயத்திற்கும், இஸ்லாமிய பள்ளிவாசலுக்கும், புத்த விகாரைக்கும், இந்துக் கோவிலுக்கும் உடனடியாகப் போய் சத்தியம் செய்வதற்கு தயார். இந்தச் சவாலை இணுவில் இராசரத்தினம் ஏற்பாரா? சத்தியக் கடதாசிகள், பனடோல் குளிகைகளிலும் பார்க்க விலை குறைந்த பொருள் என்பதனால் தான் நான் இந்த முறையைக் கூறுகிறேன்!

இணுவில் இராசரத்தினம் இத்துடன் நிற்கவில்லை. அவர் ஒரு ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகைக்கு தான் என்னுடன் அவுஸ்ரேலியாவில் இருந்து வந்ததற்கு பின்பு கதைக்கவேயில்லையென்று ஒரு அபாண்டமான பொய்யைச் சொல்லி ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். பின்பு அந்தக் கடிதத்தை அவர் வாபஸ் பெற்றதையும் வாசகர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

அதே கடிதத்தில் தான் எந்தவொரு கட்டத்திலும் குமார் பொன்னம்பலத்தின் பட்டியலில் போட்டியிடுவதற்கு இணங்கவேயில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதுவும் ஒரு நேர்மையற்ற அபாண்டமான பொய்யாகும். அவர் அந்தப் பட்டியலில் போட்டியிட இணங்கியமையும் எங்களின் பட்டியலில் அவருடைய பெயர் இருந்தமையையும் அவருடைய உறவினர்களே அறிவார்கள்.

அது மாத்திரமல்ல இவர் திருச்செல்வத்தின் சிபார்சின் ஊடாக ஒரு தமிழ்த் தினசரி நிர்வாகத்தை சந்தித்து இரு கடிதங்களை கையளித்துப் பின்பு அவற்றையும் வாபஸ் பெற்ற கதை உலகத்துக்கு தெரிய வந்துவிட்டது.

இவற்றை ஏன் நான் கூற வருகிறேன் என்றால் தமிழினத்திற்கு நேர்மையான அரசியல்வாதிகள் தான் இந்தக்காலகட்டத்தின் தேவையாகும். ஒரு திருச்செல்வம் இருந்து கொண்டு பத்து நபர்களுக்கு பத்து முகங்களைக் காட்டிக் கொண்டு இருப்பது போதும்!

**குமார் பொன்னம்பலம்**
**கொழும்பு -7**

## சொந்தப்...

சிலநேரம் கட்டுரையாளருக்கும், உங்களுக்கும் தெரியாமலிருக்கலாம். இங்குள்ள மக்களிடம் வந்து கேட்டுப்பாருங்கள் உண்மை நிலவரம் புரியும். நாம் என்றும் மக்களுக்கெதிராக செயற்பட்டவர்களல்ல.

நாம் சுயேச்சைக் குழுவாக சொந்த பலத்திலேயே நிற்கிறோம். எம்மை வேறு எவரும் நிறுத்தவில்லை என்பதை உறுதியாக சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

ஈழதேசிய விடுதலைப் போராட்டத்தின் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட துயரவாழ்வில் நொந்து போன நூற்றுக்கணக்கான இளைஞர்களின் சார்பிலேயே நாம் இத்தேர்தலில் குதித்துள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

**கோபிதராஜா**
**துணைப் பொதுச் செயலாளர்**
**ஈ.என்.டி.எல்.எப்.**

## பெண்கள்...

**யல் அதிகார அமைப்பு வேண்டும் என்று அவர் சொல்கிறார். மேலும் இந்த மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அவர் ஏற்றுக் கொள்கிறார்.**

வாசுவின் நிலைப்பாடு, பொ.ஐ. முன்னணியின் நிலைப்பாடு அல்ல.

**சந்திரிகா அவர்கள் கூட தமிழ்ப்பகுதிகளை உள்ளடக்கிய ஒரு புதிய மாநில அமைப்பைப் பற்றித்தானே பேசுகிறார்?**

பொ.ஐ.முன்னணியின் பெரிய மாநாடொன்று அண்மையில் இடம் பெற்றது. அந்த மாநாட்டில் இது பற்றி எந்த விதமான விவாதமோ அல்லது தீர்மானங்களோ எடுக்கப் படவில்லை.

**உங்களுடைய முன்னணியின் தலைவர் ஒரு பெண். ஆனால் உங்களுடைய 249 வேட்பாளர்களில் ஆக 7 பெண்களுக்கே இடம் கொடுத்திருக்கிறீர்கள். இது 2.8% மான பிரதிநிதித்துவம் மட்டுமே. என்ன சொல்கிறீர்கள்?**

தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரை பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை விட அடுப்படி வேலைகளில் முற்றாகவே ஈடுபடுவதுதான் சிறந்தது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

www.tamilarangam.net

## யாழ். தீவுப்பகுதியிலிருந்து ஒரு றிப்போர்ட்

# மனிதாபிமானத்தின் விலை நூறு ரூபா!

''இவர்களை விடப் புலிகளும் ஆமியும் பரவாயில்லைப் போல.....'' அண்மையில் அகதிகள் முகாமில் இருக்கும் போது ஈ.பி.டீ.பியினரால் கூட்டிச் செல்லப்பட்டு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு தீவுப்பகுதியில் விடப்பட்டிருக்கும் தனது மகனைப் பார்த்து விட்டு வந்த ஒரு தாய் இப்படிக் கூறினார்.

கடல் குட்டி போட்ட சின்னச் சின்னத் தீவுகள்; மணல் வெளிகள்; உப்பு நீர் வைரம் செறிந்த பனைமரங்கள். விட்டுப் போட்டு ஓடிய வீடுகள்; அதற்குள் அகப்பட்ட கிழடு கட்டைகள். ஆயிரக்கணக்கில் அரச படைகள், ஆயுதந் தாங்கிய ஈ.பி.டீ.பியினர். அவர்களின் சிவில் நிர்வாகம். முடி சூட்டிக் கொள்ளாமலேயே மன்னார்களாகிப் போன அதிர்ஷ்டம் அவர்களுக்கு.

தீவுப் பகுதிகளின் முழு நிர்வாகமுமே ஈ.பி.டீ.பியிரின் கண்காணிப்பிலேயே விடப்பட்டுள்ளது. பொது மக்களின் சின்னச் சின்னச் சச்சரவுகளுக்கு அடி, உதை கொடுப்பதிலிருந்து அகதிகளுக்கான உணவுகளை விநியோகிப்பது, சாராயத் தவறணைகளை நடத்துவது வரை ஈ.பி.டீ.பியிரே ''எதற்கும், எப்போதும், எல்லோர்க்கும்''

யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்திருக்கும் புலிகளை விட தீவுப்பகுதிகளைக் கண்காணிக்கும் ஈ.பி.டீ.பியினரிடம் ஓரளவு மனிதாபிமானம் இருக்கத்தான் செய்கிறது. புலிகள் ஒரு போத்தல் சாராயத்தை 550 ரூபாவுக்கு விற்கின்றார்கள் என்றால், இவர்களோ 450க்கு சீல் உடையாத போத்தல் விற்கிறார்கள்.

இவர்கள் சேமித்துக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் உணவுப் பொருட்களோ சொல்லில் அடங்காது. ஆனால் இவ்வுணவுப் பொருட்களோ புனர்வாழ்வு அமைச்சினால் அகதிகளுக்குப் பங்கிடுவதற்கென அனுப்பப்பட்டதாக அறிய முடிகின்றது.

மூன்று வருடங்களுக்கு மேலாகத் தீவுப்பகுதிகளில் தனிமையில் விடப்பட்டிருக்கும் ஈ.பி.டீ.பி உறுப்பினர்களில் பலர் விரக்தியடைந்த நிலையிலேயே உள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் தனது குடும்பத்தினரைப் பார்க்க அனுமதி கேட்டுச் சலித்துப் போன நிலையில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டு துப்பாக்கியால் தனக்குத்தானே சுட்டுக் காயம் அடைந்துள்ளார்.

**எம்.மைதிலி**

இதை விட விரக்தியடைந்த நிலையில் இருந்த 15 ஈ.பி.டீ.பி உறுப்பினர்கள் ரோலர் படகொன்றின் மூலம் இந்தியாவுக்குத் தப்பியோடிய வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் ஈ.பி.டீ.பித் தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டனர். 15பேரும் கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நிலவறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தீவுப்பகுதியில் இரகசியமாக பேசிக் கொள்கிறார்கள்.

மாதாந்தம் ஈ.பி.டீ.பியின் அரசியல் செயலர் திருவாளர் ந.ரமேஷ் அவர்களால் எடுக்கப்படும் அரசியல் கருத்தரங்கில் ''கடல்மட்டும் சுற்றியிருக்காவிட்டால் நீங்களும் தேவாத் தோழரும் தான் மிஞ்சியிருப்பீர்கள்'' எனக் கிழக்கைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் உறுப்பினர் சொல்லியதற்காக அவரும் அவருடன் கேள்வி கேட்ட வேறு இருவரும் காணாமல் போய் விட்டனர்.

அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்ன நடந்தது? என்று இதுவரை யாருக்கும் எவருக்கும் தெரியாது.

ஈ.பி.டீ.பியினர் புதிய பாணியில் தேர்தல் பிரச்சாரங்களும் வேறு செய்கிறார்கள். ஈ.பி.டீ.பியின் தீவுப்பகுதிஇராணுவப் பொறுப்பாளர் மதன் பொதுமக்களை அழைத்து ''வேறு எந்தக் கட்சிக்கும், வேறு எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்கக் கூடாது. நீங்கள் வேறு யாருக்கும் வோட்டுப் போட்டாலும் கூட நாங்கள் தான் யாழ்ப்பாண எம்.பிக்கள் என்று தனது பிரச்சாரத்தைத் தொடங்கியிருக்கிறார்.

## பூ – பூ – புளியம்பூ!

மட்டக்களப்பில் தனித்துப் போட்டியிடும் ஈ.பி.ஆர் எல்.எப் இற்கு அதன் சின்னம் ஒரு சிக்கலைக் கொடுக்கிறது. அதன் எதிரணியினர் தாம் போகுமிடங்களின் கூறுகிறார்கள்: 'ஈ.பி.ஆர்.எல்.எப் பின் சின்னமும் பூ. அவர்கள் உங்கள் காதில் வைக்கப்போவதும் பூ.' இது ஈ.பி.ஆர்.எல்.எப் வேட்பாளருக்கு சங்கடமாக உள்ளது. அத்துடன் மற்றவர்கள் இவர்களைப் பின்னைபிடிகாரர்கள் என்று தாக்குவதும் மக்கள் மத்தியில் எடுபடத்தான் செய்கிறது. ஈ.பி.ஆர்.எல். எவ் மட்டக்களப்பில் பிரதானமாக நம்பியிருப்பது நிவாஸ்(நேசராசா), 'வைத்தி', சண்முகம் ஆகியோரின் செல்வாக்கையே. நேசராசாவிற்கு அவருடைய சாதியின் வாக்குகளும், ஓரளவு இடது சிந்தனையாளரின் (இவர் முன்னாள் ஜே.வி.பி.) வாக்குகளும் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது, எனினும் இவருடைய இனம் பொருளாதார ரீதியில் இன்று முன்னேறியுள்ளதால் எந்தளவிற்கு இவருக்குப் பின்னால் நிற்பார்கள் என்பது கேள்வியே. 'வைத்தி' (முன்னர் புளொட்) சந்திவெளிக்காரர். அங்கு ஊரவன் என்ற முறையில் வாக்குகள் இவருக்கு விழலாம். சண்முகத்திற்கு உன்னிச்சையில் உள்ளவர்கள் பெரும்பாலும் உறவினர். கல்லாறிலும் உறவினர் உண்டு. எனினும் அவருக்கு மூன்று மனைவியர் உண்டு என்ற கருத்து பெண் வாக்காளர் மத்தியில் அங்கு சில முணுமுணுப்புகளை தோற்றுவித்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. ஈ.பி.ஆர்.எல். எப்பின் தலைமை வேட்பாளர் துரைரத்தினம் காரைதீவைச் சேர்ந்தவர் (அம்பாறை மாவட்டம்) என்பதும் எதிரணியினரின் பிரச்சாரத்திற்குப் பயன்படுகிறது.

## மீண்டும் சாதி!

மட்டக்களப்பில் கூட்டணி வகுத்துள்ள தேர்தல் வியூகம் இயக்கங்களின் எதிர்ப்பிரச்சாரத்திற்கு நல்ல தீனியாகியுள்ளது. பெரும்பான்மையான வாக்காளர் உள்ள தொகுதியில் ஒருவரே வேட்பாளராக உள்ள அதேவேளை கல்குடாத் தொகுதியில் மூவரும், பட்டிருப்புத்தொகுதியில் சாதியடிப்படையில் நால்வரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஜோசப் பரராஜசிங்கத்திற்கு மிக அதிகப்படியான வாக்குகளை சேகரித்து ஏனைய பகுதியினரை பலவீனமான நிலையில் தெரிவாக வைப்பதன் மூலம், ஜோசப்பின் நீண்டகால அரசியல் நலனை பலப்படுத்தும் ஒரு தந்திரம் எனவும் இதனால் பட்டிருப்பு, கல்குடா ஆகிய தொகுதி மக்களுக்கு ஒரு பலமான பிரதிநிதித்தும் இல்லாமல் போகலாம் எனவும் கூட்டணி எதிர்ப்பாளர் கருதுகின்றனர். பட்டிருப்புத் தொகுதியில் முக்குவர், சீர்பாதர், கரையார், வெள்ளாளர் எனும் சாதிகள் உள்ளன. இதில் முக்குவரே பெரும்பான்மை. இரண்டாவது சீர்பாதர். மூன்றாவது கரையார். நான்காவது வெள்ளாளர். கூட்டணி இந்த நான்கு சாதிகளுக்கும் 4 பேரை போட்டுள்ளது ஆயினும் எந்தளவிற்கு சாதி அடிப்படையில் மக்கள் இம்முறை வாக்களிப்பர் என்பது கேள்வியே.

தமிழ்த் தேசிய உணர்வுகாரணமாக மறைந்து போய்க் கொண்டிருக்கும் சாதிமுறைகளை கூட்டணி மீண்டும் கிளறுவது தவறு என்ற கருத்தும் சொல்லப்படுகிறது.

## மீண்டும் தமிழீழம்!

த.வி.கூட்டணிப் பிரச்சார மேடைகளிலும், அதனது பிரச்சார வாகனங்களிலும் இப்போது அடிக்கடி தமிழீழம் என்ற சொல் பாவிக்கப்படுவதை கேட்கக்கூடியதாக இருக்கிறது. ஒரு சில இடங்களில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களில் தமிழீழத்தை வென்றெடுப்போம் என்று பேசியுள்ளார்கள்.

அதேவேளை த.வி.கூட்டணியின் தேர்தல் பிரச்சாரங்கள் பொ.ஐ.மு வின் தலைமை வேட்பாளர் கோபன் கந்தையாவின் மேல் தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களை சுமத்துவதிலேயே செலவாகிறது. கோபன் கந்தையா தனக்கு த.வி.கூ வில் போட்டியிட சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து கூட்டணியினரை கண்டித்து ஒரு துண்டுப் பிரசுரத்தை முன்னர் வெளியிட்டிருந்தார். இப்போது அந்தத் துண்டுப்பிரசுரத்திற்குப் பதில் கொடுப்பது என்ற போர்வையில் அவருக்கு எதிரான தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களை தாங்கி, இன்னொரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

# 'என்ரை பிள்ளையைத் தா'!

நாம் உங்களைப் பாதுகாப்பதற்காகவே இராணுவத்துடன் நிற்கின்றோம். சில நேரங்களில் ஏதாவது தவறுதலாக நாம் நடந்து கொண்டிருந்தால், அதற்கு உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம். இனிமேல் அவ்வாறான தவறுகளை நாம் செய்ய மாட்டோம் என ரெலோவினர் தங்கள் தேர்தல் பிரச்சார உரையில் முதலில் குறிப்பிடுகின்றனர்.

கூட்டணியினர் ஒட்டும் போஸ்டர்களை பசை காயுமுன்னரே ரெலோவின் 'போஸ்ட்ர் கிழிக்கும் அதிரடிப்படையான' அச்சுதன், மாஸ்டர் குரூப் கிழித்து வீசி விடுகிறார்கள்.

படுவான்கரைப் பிரதேசமும், வாகரையும் அரசபடைகளால் மிக மிக அவதானமாகக் கண்காணிக்கப்படுகின்றது. புலிகள் ஊடுருவி விடுவார்களோ, தேர்தலைக் குழப்பிவிடுவார்களோ என்ற அச்சம்தான் காரணம்.

படுவான்கரைப் பிரதேசத்திற்கும் வாகரைக்கும் உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதில் படையினர் கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர். குறிப்பாக வாகரைப் பிரதேசத்திற்குக் கூடுதலான உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டுமெனில் ''பெமிசன்'' எடுத்து வரும்படி கூறியுள்ளார்கள். சிலர் கொண்டு சென்ற உணவுப் பொருட்களைப் படையினர் பறித்தெடுத்துள்ளனர்.

இன்னொருபுறம் படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள வயல் சொந்தக்காரர்களுக்கு விடுதலைப் புலிகளால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. ''பெரும்போக நெற்செய்கைக்கு உங்கள் வயல்களை வேறு யாருக்கும் கொடுக்க வேண்டாம் நாம் சொல்பவர்களுக்கே கொடுக்க வேண்டும்'' என அக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரெலோ வேட்பாளர் ரொபேட் நவரத்தினராஜா தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டு வீடுவீடாகச் சென்று வருகிறார். செல்வாநகரிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்று ''அம்மா, நாங்கள் இந்தத் தேர்தலில் நிற்கிறம். எங்களுக்கு வோட் போடுங்கோ. உங்கடை பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைப்போம்'' என்று சொல்லி முடிய முதலே அந்த வீட்டுக்காரப் பெண்மணி தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டார். ''டேய் தம்பிமாரே, நீயும் உன்ரை கூட்டமும் ஆமியோடை வந்து கூட்டிப்போன என்ரை புள்ளையைக் கொண்டு வந்து தா. வோட் மட்டுமல்ல; உன்ரை காலிலை வேண்டுமென்றாலும் விழுறன்.''

## எட்டுமா? எட்டாதா?

தேர்தல் என்று வந்ததும் எதை எதையெல்லாம் சாட்சிக்கு அழைக்கிறார்கள் இந்த அரசியல்வாதிகள் என்று பாருங்கள். ஜோசப் தனது வெற்றிக்கு எண் சோதிடமும் கை கொடுத்துள்ளது என்கிறார் கூட்டங்களில்! அது எப்படித் தெரியுமா?

அவர் பிறந்த திகதி கூட்டெண் 8.
நியமனம் தாக்கல் செய்த திகதி 8.
பாராளுமன்றில் அவரது ஆசன எண் 8.
போட்டியிடும் வேட்பாளர் 8.
மட்டக்களப்பில் போட்டியிடும் கட்சிகள் 8.
தபால் மூல வாக்களிப்பு நடந்த திகதி 8.
தேர்தல் முடிவு வரும் நாள் 8.
அவரின் தேர்தல் எண் 8.

எனவே எட்டாம் நம்பருக்கே உங்கள் வாக்கு எனக் கேட்கிறார். எல்லாம் எட்டு என இருப்பதால் மற்றத் தமிழ்க் கட்சிகள் ஜோசப் அவர்களை எட்டப்பர் என்று அழைப்பதாகக் கேள்வி!

# ராஜினாமாச் செய்வீர்களா?

திருக்கோவிலில் அண்மையில் கூட்டணி பிரச்சாரக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும் போது கேள்விகள் கேட்கப்பட்டு உரையாற்றிக் கொண்டிருந்த மாவை சேனாதிராசாவின் மீது கல்லெறி நடை பெற்று கூட்டம் குழப்பப்பட்டது. பின் விசேட அதிரடிப்படை பிரச்சினையில் தலையிட்டு நிலைமையைச் சீராக்கியது.

காரைதீவில் கூட்டணி ஒகஸ்ட் 8ம் திகதி நடத்திய கூட்டத்தில் ''உங்கள் கட்சியில் நீங்கள் தெரிவானால் அதை ராஜினாமாச் செய்து எம்.பி பதவியை ஒரு அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு கொடுப்பீர்களா?'' எனக் கேள்வி கேட்கப்பட்டது மாவையிடம். சரியான பதில் கிடைக்காமல் போகவே கூட்டத்தில் இருந்த ஒரு குழு கல்லெறியில்

→15

**அடுத்த இதழ் செப். 1 இல்**

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

94.08.10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்